கணபதி துணை

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

நல்லூர்

ஆறுமுகநாவலர்
சரித்திரம்.

—:*:—

இது
யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை
வேதவனப்பிள்ளை குமாரர்
மாணிக்கவாசகபிள்ளை
என வழங்கும்
கனகரத்தின
உபாத்தியாயரால்
சுத்தியரூபமாகச்செய்து,
ஷை யூர்
சைவப்பிரகாச சமாசியருளொருவராகிய
ம. ள. ள. ஸ்ரீ
வை. ஆறுமுகபிள்ளை
கேட்டுக்கொண்டபடி

யாழ்ப்பாணம்:
சைவப்பிரகாசயந்திரசாலையில்
அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

சித்திரபானுஸு ஐப்பசிமீ.
1882.

உ

சிவமயம்.

சிறப்புக்கவிகள்.

சென்னபட்டணம்

ம. ா. ா. ஸ்ரீ

சி. வை. தாமோதரம்பிள்ளை

சொல்லியது

—:*:—

வெண்பா.

நல்லைநக ராறுமுக நாவலர்ச ரித்திரத்தை
வல்லவரு மேத்த வினிதுரைத்தான்—சொல்லும்
பொருளுஞ் சுவைதெவிட்ட வேதவனத்தூய
னருளுங் கனகரத்ன னாய்ந்து.

சிறப்புக்கவிகள்.

சைவ உதயபானு பத்திராதிபர்

ம. ள. ள. ஸ்ரீ

சு. சரவணமுத்துப்பிள்ளை

சொல்லியது.

ஆசிரியவிருத்தம்.

திருமேவு நல்லையெனு நகரிற் றோன்றிச
    சிவாகமமே யாதியநூற் பரவை யுண்டே
அருமேவு முணமையிலே தனைப்போ திந்த
    வாறுமுக நாவலர்கோன் சரித மாகு
மருமேவு நவநீதந் திரட்டி யசில
    வயங்குவித்தான் வண்ணைநகர் வாழுஞ் சீலன்
உருமேவு சற்சனர்மா ணிக்க மாகி
    யொளிர்கனக ரத்தினப்பே ருபாத்தி தானே.

சிவமயம்.

சிறப்புப்பாயிரம்.

———:*:———

சுன்னாகம்:

ம.ள.ள.ஸ்ரீ

அ. குமாரசுவாமிப்பிள்ளை

இயற்றியது.

———*———

விருத்தம்.

..காவி னிழலரசு புரியுமக பதியுலகம
    போல வாய்ந்து
..காத வளம்படைத்த பலநகரந் தன்மாட்டு
    நிலவக் காட்டி
..பாங்கார முதற்பொருளுக் குரியதல மோரிரண்டை
    யுடைய தாகி
..ங்காரு நனிவியக்கத் தகும்புகழ்சேர் திருப்பதுநல்
    லீழ நாடு.

..நாடு தனக்குமுக மெனக்கவினுற் றிலங்கியயாழ்ப்
    பாணத் தென்றுஞ்
..ான்றுறு புலவர்தமக் குறைவிடமா யெவ்வளமுந்
    தொக்க சீர்த்தி

மன்னுறு நாகரிக மான்மியநல் லூரினிடை
வாழ்வு கொண்ட
மின்னுறுங் கார்காத்த வேளாளர் திருக்குலத்தின்
மீது மாதோ.

இத்தாலத் துயர்பாண்டி மழவர்குடி யின்மேலா
ரியத்து மிக்க
சித்தாந்த சிகாமணியே முதனூலும் பலவுரையுந்
திரா விடத்தில்
வித்தாரம் பெறச்சித்திக் கோருரையு முள்ளபடி
விளங்கிச் செய்த
கர்த்தாஞா னப்பிரகா சானுபூதி மான்மரபு
கவின வன்றே.

வந்துதயஞ் செய்தகந்த வேளியற்று மாதவமோர்
வடிவு கொண்டு
செந்திருவை யனையமனைச் சிவகாமி யம்மையெனுஞ்
செல்வ நங்கை
யுந்திவயி னமைந்துதித்த தெனவுலகி லுதித்தருளி
யொடுங்க வில்லாச்
சந்திரதுல் வியனாகி நற்கலையில் வளர்வுற்றுத்
தயங்கு நாளில்.

அங்கிலதே சிகமொழியும் வடமொழியும் பொருளறியு
மளவிற் கற்றுச்
சங்கையிலா விலக்கியமு மிலக்கணமுந் தலைகண்டு
தருக்க மோதித்

ங்கமிரும் புராணமிதி காசமுத லாயபல
    தொன்னூ லோடு
ங்கமிலாச் சித்தாந்த சாத்திரபாண் டித்தியமும்
    படைத்த சீலன்.

தக்குசிவா கமப்பொருளைப் பலவிதலோ கிகசமுகந்
    தேரும் வண்ணம்
ாக்குபடுத் துவமமையப் போதித்தும் நீதிவழி
    மருவி வந்த
க்கமது கொண்டுவித்தி யாலயங்க டாபித்து
    மளவில்லாத
க்கமிருந் தார்மிகனுய்ப் புண்ணியமு மெய்ப்புகழு
    மொருங்கு பெற்றோன்.

ாவியசாத் திரவிநோதங் கல்வியினைக் கிரமமுறக்
    கற்போர்க் கிதல்
ாவருக்கும் பயன்பெறப்பன் னூலுரைக ளியற்றிவெளிப்
    படுத்த வீசன்
சவடியர்ச் சனைபுரிதி திருத்தொண்டர் தமக்கன்பு
    செய்த லின்ன
ாவமிலாச் செயல்களினுற் றன்கால முழுதேகும்
    படியே வாழ்ந்தோன்.

பாருள்வலியுஞ் சொல்வலியும் பெரிதமைய வாக்கியக்கோ
    பூட்டி யிம்மைப் [ல்
பாருள்வரவு தனைக்கருதிச் சிலமூட ரநுசரிக்கும்
    பொய்ம்மை மார்க்கம்

இருள்வலிபோற் றபமுருக்கிச் சிவசமய வொளிவிரிக்கு
மிவன்போ லுண்மை
தெருள்வலியோர் தாங்காலத் திரயத்து மில்லையெனச்
சிறப்பு மிக்கோன்.

தத்துவஞா னம்புணர்ந்தோ னாறுமுக நாவலனாந்
தனது நாமம்
எத்திசையுஞ் செலநின்றோ னிவனுடைய சரித்திரமா
மினிமை சான்ற
புத்தமிர்தந் தனைத்திரட்டிப் புத்தகமா வரைந்திந்து
புகழே பெற்றான்
கொத்தலரும் பொழில்வண்ணைக் கோநகரின் மிசைவாழ்வு
கொண்டோ னன்றே.

உத்தமநல் லிலக்கியலக் கணந்தேர்ந்தோன் பரம்பரைசே
ரூபாத்தி யாயன்
சத்தியவா சகவேத வனநாதனா றவவலியிற்
றந்த பாலன்
அத்தகைய நாவலர்கோன் பெருண்மா ணிக்கமென
வறையப் பட்டோன்
புத்திமிகுந் தொளிர்கனக ரத்தினநா மகசுகுண
பூபன் றானே.

உ

கணபதிதுணை

திருச்சிற்றம்பலம்.

விநாயகவணக்கம்.

குறள் வெண்பா.

மாதங் கலையிரத மாற்றியியைத் தேற்றியளி
மாதங் கலைமனனீ வாழ்த்து

குருவணக்கம்.

விருத்தம்.

சீரேறு மீழத்தி யாழ்ப்பாண நல்லையாச்
செறிதரணி மீதுதித்துத்
திகழுநில நிலவுபல கலைகுலவு மலைகட
றெவிட்டியிட மொண்டெழுந்து
பாரேறு பரமதப் பாந்தள்க ளொடுங்கிடப்
பலகண் டனங்களென்னப்
பகர்தடித் தொடுமுருமு வீசிப்ர சங்கமாம
பயில்சோலை மழைபொழிந்து
பேரேறு சைவப் பெரும்பயிர் வளர்த்திடும்
பெட்புடைக் காரையடியார்
பெயராத மலவிருள்க ளருகவிரி பரிதியைப்
பிறைசூடியே பரனெனு
நாரேற வழிபட்டு நாமெலா முய்யவரு
ளாங்குருவை நாவலப்பேர்
நவில்யோக ரூடியாப் பெற்றபெரு மானையடி
நளினமலர் போற்றிசெய்வாம்.

—

முகவுரை.

———:*:———

சைவசித்தாந்த சமயாசாரியர்களாகிய திருஞ
சம்பந்தமூர்த்திநாயனார், திருநாவுக்கரசுநாயனார்,
தரமூர்த்திநாயனார், மாணிக்கவாசகசுவாமிகள்
னும் நால்வரும் தமிழ்நாட்டிலே திருவவதாரஞ்
ய்து, தலந்தோறுஞ்சென்று, அநாதிமுத்த சித்
வாகிய சிவபெருமானை முழுமுதற் கடவுளென்
வேதசிவாகமங்களிலே உணர்த்தப்படும் உண்
யைப் பதிகங்களாகப்பாடி, பௌத்தர், சமணர் மு
லிய புறச்சமயத்தவர்களோடு சமயவாதஞ்செய்
அவர்கள் முன்னிலையிலேசெய்த பல வற்புதங்க
லும் சைவசமயமே மெய்ச்சமயமென்றும், சிவபெ
மானே பரமபதியென்றுந் தாபித்தார்கள்.

அதன்பின்னர், சந்தானசாரியர்களாகிய மெய்க
டதேவர், அருணந்திசிவாசாரியர், மறைஞானசம்ப
சிவாசாரியர், உமாபதிசிவாசாரியர் என்னும் நா
ரும், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், இருபா
பது, சிவப்பிரகாசம், திருவருட்பயன் முதலிய சை
சித்தாந்த சாத்திரங்களை அருளிச்செய்து, சிவபெ

ா பரமபதி என்றும், சரியை கிரியை யோகம்
மென்னும் நான்குமே ஆன்மாக்களுக்கு முத்
் அடையப்பண்ணும் மார்க்கமென்றும், எல்லாச்
ங்களையுங் கடந்துநின்றது சித்தாந்த சைவமென்
சாதித்தார்கள்.

தன்பின்னர், நமச்சிவாயதேசிகர், தாயுமானசுவா
், பட்டணத்துச்சுவாமிகள், சிவஞானமுனிவர்,
ாமணிதேசிகர், ஞானப்பிரகாசமுனிவர், குமர
ரசுவாமிகள் முதலிய மகான்கள், சிருட்டி திதி
ரம் திரோபவம் அநுக்கிரகம் என்கின்ற பஞ்ச
ியங்களையுஞ்செய்யுங் கருத்தாவாகிய சிவபெரு
சர்வலோகைக நாயகரென்றும், அவரை வழி
ார்க்கமே முத்திமார்க்கமென்றும், அவரை வழி
அடியார்களே மெய்யடியார்களென்றும் தெளி
அவருடைய பெருமையைத் தாந்தாஞ்செய்த
ாலும் உரைகளாலும் உணர்த்தி, தங்கள்
ருக்கும் போதித்தார்கள்.

க்பின்னர், திருக்கேதீச்சரம், திருக்கோணேச
்னும் தேவாரம்பெற்ற தலங்களிரண்டையும்
கண்களாகவுடைய இலங்காபுரியிலே திருவவ
செய்த ஆறுமுகநாவலர் என்னும் பெரு
சிறுபிராயத்திலேயே அநாதிமலமுத்தபதியா

கிய சிவபெருமானே பிறப்பிறப்பில்லாத கடவுளெ
ன்றும், பாற்கடலுட்பிறந்த மீன்கள் அப்பாலை உ
ண்ணாது வேறு பலவற்றை உண்டல்போல, சைவசம
கள், மெய்ந்நூல்களாகிய தங்கள் சைவநூல்களை
கல்லாது கற்பனைசமயமாகிய பரமதநூல்களைக்கற்று
தங்கள் வாணாளை வீணாளாகக் கழிக்கின்றார்களெ
றும், அவர்களுக்கு மெய்யறிவூட்டல் வேண்டுமெ
றும், முச்சங்கங்களாலும் வளர்க்கப்பட்ட தமி
பாஷையை முன்போல வளர்த்தல்வேண்டுமென்
தெளிந்து, பரசமயிகளோடு சமயவாதங்கள்செய்து
அவர்களைவென்றார். பரசமயத்திலே புகுந்தவ
க்கும், புகுதற்கு மனம் பதிந்தவர்களுக்குஞ் சைவ
த்தைப் போதித்து அவர்கள்மனசைத் திருப்பி
அநேகநூல்களுக்குப் புத்துரைசெய்தும், ஏட்டு
திகளிலுள்ள அநேகநூல்களைப் பரிசோதித்தும்
வசமயத்தை வளர்த்தற்குவேண்டிய நூல்களை
தாகச்செய்தும் வெளிப்படுத்தினார். அம்மட்
"சைவநிந்தனை மறைகணிந்தனை பொறுமனம்" எ
திருவாக்குக்கேற்ப வேதநிந்தகர், சிவாகமநிந்த
சிவனடியார்நிந்தகர், குருநிந்தகர் என்னு மிவ
ளோடு பெரும்பகையெடுத்தார். அதனால், கோட
டையவர் என்று சிலர் அவரைச்சொன்னார்கள்.
மட்டோ, பசுக்களைப் பதியென்று சொல்லுகிறவ
ளோடும், பசு நூல்களைப் பதிவாக்கென்று கொள்

ர்புலவர்களோடும் எதிர்த்தார். இப் பெருந்தகைமை யினையுடையராகிய எம்பெருமானுக்குச் சைவசமயிக ளாகிய நாமெல்லாம் செய்தற்பாலனவாகிய கைம்மாறு யாது!

இப் பெருஞ்சிறப்பினராகிய எம்பெருமான் கைம் மாறு கருதாது நமக்கெல்லாஞ்செய்த செயற்கருஞ் செ யல்களையும் அவருடைய புகழையும் சரித்திரமாகச் சுருக்கக்கருதி, பலமுறையு மொருபொருட்படுத்தி யாது சந்நிதானத்திலே நின்று மொருவனைச்சேர்த்த யாது குருமூர்த்தியினுடைய திருவடிகளைத்துதித்து, அவரது திருவருளினாலே அதனைப் பெரும்பான்மை செந்தமிழ்ச்சொற்களும், சிறுபான்மை ஆவசியகமாகிய வடசொற்களும் பிரயோகிக்கப்படும் கத்தியரூபமாகச் செய்து அச்சிறப்பதிப்பித்தேம்.

இது நமக்கெல்லாம் மெய்யறிவூட்டிய பரமாசாரிய ருடைய சரித்திரமாதலால், சைவசமயிகளாகிய யாவ ரும் இதனைச் சிரத்தையோடும் வாங்கி வாசிக்கக்கட வர்கள். வே. க.

திருச்சிற்றம்பலம்.

நாவலர் பெருமானவர்கள் சிவபதமடைந்தருளியதைக்குறி த்துப் பற்பல புலவர்கள்செய்த செய்யுட்களை இச் சரித்திரத்தின் இறுதியிற் சேர்க்கத்தந்த நன்றியின் பொருட்டு நாம் அப்புலவர்களுக்கு வந்தனஞ் சொ ல்லுகின்றேம். வே. க.

குருபூசைத்தினம்.

—:✱:—

வெண்பா.

கார்த்திகைமா தத்துமகங் காசினிக்குச் சைவஞ்
சேர்த்திப் பரசமயஞ் சேதித்துச்—சீர்த்திமிக
மேவுதமிழ் தந்தகந்த வேளைநல்லூ ராறுமுக
நாவலர்வீ டுற்றதிரு நாள்.

அவையடக்கம்.

—:✱:—

கட்டளைக்கலித்துறை.

புல்லிய கீடமும் பூவினைச் சேர்ந்து பொருந்துதலால்
நல்லவர் தந்தலை மீதே நணியது நாவலர்கோன்
எல்லையில் கீர்த்தி யிசைப்பது வாதலி னென்னுரையும்
வல்லவர் சங்கமுஞ் சென்றே வழங்கிடுமே வையகத்தே

வாழி.

வெண்பா.

வாழிபசு நீடூழி வாழிநிக மாகமங்கள்
வாழிமறை யோர்சைவர் வான்செங்கோல்—வாழிமனர்
வாழிதொண்ட ரக்கமணி வாழிநீ றைந்தெழுத்து
வாழி பெருநா வலம்.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

ஆறுமுகநாவலர்

சரித்திரம்.

விநாயகவணக்கம்.

பமெய்ச் சிவாகமமுந் திருவெண் ணீறுந்
ருத்தொண்டர் செயனுஞ்செந் தமிழுஞ் செய்ய
ரியமும் வளரவணி நல்லை வந்த
பாறுமுக நாவலனு மறிஞா கோமான்
ரியனுஞ் சரிதமெலாம் பிறழா வண்ணம்
பெருமையினே ரவைகடொறும் பிறங்க நாட்டக
யனு மிபமுகத்துக் கருணைப் புத்தேள்
கடிமலர்த்தா மரைத்தாள்கள் கருத்துள் வைப்பாம்.

குரவேநம:

ஈழமண்டலத்திலே, யாழ்ப்பாணத்திலே, நல்லூரி
கார்காத்தவேளாளவருணத்திலே, பாண்டிமழ

வர்குடியிலே, ஞானப்பிரகாசசுவாமிகள்மரபிலே, தமிழ்நாட்டிலுள்ள சைவசமயிகளை சைவசமயமே சத்தியசமயமெனவுணர்ந்து அதன்னெறி ஒழுகி உய்யும்பொருட்டு கந்தப்பிள்ளை என்பவருக்கு அவருடைய பத்தினியாகிய சிவகாமியம்மையாருடைய அருமைத்திருவயிற்றிலே, கலியப்தம் ௪௯௨௪-க்கும் சாலிவாகனசகாப்தம், ௧௭௪௪-க்குஞ் சமமாகிய சித்திரபானுவருஷம் மார்கழிமீ ௫௨ புதன்கிழமை இரவு அவிட்டநக்ஷத்திரமும், பூர்வபக்ஷ பஞ்சமிதிதியும், வச்சிரயோகமும், பாலவகரணமும் கூடிய சுபதினத்திலே, சிங்கலக்கினத்திலே ஒரு சற்புத்திரர் திருவவதாரஞ் செய்தார். (Decr. 1822.

	சனி	வி	
சந்	உதய லக்கினக் கிரகநிலை		கே
ரா			ல
செ-சு ஆ-பு			

பறங்கிக்காரர் இலங்கையின்வடபகுதியாகிய இவ்வியாழ்ப்பாணத்தைப்பிடித்து அரசியற்றுநாளிலே, அப்பறங்கிக்காரரின் அதிகாரிக்கு உணவின்பொருட்டு இவ்வியாழ்ப்பாணத்திலிருந்த ஒவ்வொருகுடிகளும், கள்தங்களுடையமுறையிலே, ஒவ்வொரு கொழுத்தபசுக்கொடுக்கவேண்டியிருந்தது. ஞானப்பிரகாசசுவாமிகளுடைய முறைவந்தபொழுது "நீசன் கொன்று சாப்பிடும்பொருட்டு, பசுவை நான் கொடுப்பேனாகில், அப்பசுவைக் கொல்லுதலாகியபாவம் எனக்குமுளவாகுமே" என்று பயந்து, அப்பயங்காரணமா

திருவவதாரஞ்செய்த அப்பிள்ளைக்கு ஆறுமுகப்பிள்ளை என்னும் நாமகரணமும், அன்னப்பிராசனம், சௌளம் முதலிய கருமங்களும் உரியகாலங்களிலே, மிகுந்த சிறப்போடு செய்யப்பட்டன. அவர் ஐந்தாம் வயசிலே வித்தியாரம்பஞ் செய்யப்பெற்று, சிறுவர்களுக்குக் கல்விகற்பித்தலில் வல்லராய், நல்லூரிலிருந்த சுப்பிரமணிய உபாத்தியாயரிடத்திலே கல்வி கற்பாராயினார்.

இவரிடத்திலே வாக்குண்டாம் முதலிய நீதிநூல்களையும், நிகண்டு, எண்சுவடி முதலிய மற்றைய நூல்களையும் கற்குங்காலத்திற்றானே தமிழ்க்கல்வியை நிரம்பக்கற்றல்வேண்டும் என்னும் ஆசை அவர் உள்ளத்திற் குடிகொண்டிருந்தது. இவைகளைக்கற்றபின்னர் நைடதம், பாரதம், கந்தபுராணம் முதலிய நூல்களுக்கும், மறைசை அந்தாதி* முதலிய அந்தாதிகளுக்கும் பொருள்கேட்கத் தொடங்கினார். கேட்ட

---

* ஒருவருக்குந்தெரியாது இராத்திரிகாலத்திலே புறப்பட்டு இத்தேசத்தைவிட்டுச் சிதம்பரத்துக்குச்சென்றனர். அந்தஸ்தலத்திலேயுள்ள சிவதீர்த்தமாகிய சிவகங்கையிலே ஸ்நானம்பண்ணி, மிளகும் சுத்தஜலமுஞ்சாப்பிட்டுக்கொண்டு, நாற்பத்தைந்துநாள் சிவகாமி அம்மைசந்நிதானத்திலே அவ்வம்மையாரை உபாசித்துக்கொண்டிருந்தார். பின்பு, சிவகாமி அம்மையுடைய திருவருளைப் பெற்றுக்கொண்டு உத்தரதேசத்துள்ள கௌடத்திற்குச்சென்றார். அங்கே ஒரு பிராமணசந்நியாசி தினந்தோறுஞ் சில பிள்ளைகளுக்குத் தர்க்கம்,

செய்யுள்களின் பொருளைத் தம்மனத்திற் சிந்தித்தல்,
மனனம் பண்ணுதல் மாத்திரத்தினில்லாது, தம்மோ
டுகூடக் கல்விகற்கும் பிள்ளைகளுக்கும் அவைகளை வி
ளங்கப்படுத்துவார். விளங்காத பிள்ளைகளுக்குப் பின்
னரும் அவர்கள் அவைகளை விளங்கிக்கொள்ளும்வரை
யும் விளங்கப்படுத்துவார். படிக்க மனமில்லாதபிள்
ளைகளைத் தனியிடத்திற் கூட்டிக்கொண்டுபோய், இர
வும்பகலும் கவனமாய்ப் படித்தல்வேண்டுமென்றுப,

வியாகரணம், மீமாஞ்சை முதலியவைகளைப் படிப்பித்
தும், வேதாந்தியபயனுஞ் சொல்லிவைப்பார். ஞானப்
பிரகாசசுவாமிகள் நியமமாகப் போய், தூரத்திலிருந்
து அவற்றைக்கேட்டுத் தம்மனத்தில் அமைத்துக்கொ
ள்ளுவார். சூத்திரரோடு பேசுதல் பிராமணசந்நியாசிக
ளுக்குவிலக்காதலால, அச்சந்நியாசி இவருடன் ஒன்
றும் பேசாதுவிடுவார். இப்படியிருக்குங்காலத்திலே,
ஒருநாள் அச்சந்நியாசியானவர் தம்மாணாக்கரைப் பரீ
க்ஷித்தார். பரீக்ஷித்தபொழுது, அவர்கள் அவர் வினு
விய வினுக்களுக்கு ஏற்ற விடை சொல்லாது நின்
றார்கள். அப்பொழுது, நியமமாகத் தம் மாணாக்கரினும்
மிக்க கவனத்தோடு தாஞ்சொல்லியவற்றைக் கே
ட்டிருந்தவராகிய இவர், அவைகளைத் தம்மனத்திலே
பதித்துவைத்திருப்பாரென்று தம்முள்ளே சந்நியாசி
யானவர்நினைத்து, இவரை அழைத்து, "நீ இங்குவந்த
நாள்முதலாகக் கேட்டவைகளைச்சொல்லு" என்றார்.
உடனே சுவாமிகள் அவர்களெல்லாரும் அதிசயிக்கு
ம்படி தாம் கேட்டு அமைத்தவைகளைச் சொல்லினர்.
அப்பொழுது அப்பிராமணசந்நியாசி அவரைப்பார்
த்து "நீயேபிராமணன்" என்றுசொல்லி, அவருக்குத்

டியாதவன் புகழ், பொருள், பூசை முதலியவைக ளைப்பெறமாட்டான் என்றும், இவ்வாறு பல புத்தி களை அவர்களுக்குச்சொல்லுவார். இதனைக்கண்டயா வரும் அதிசயித்து, இப்பிள்ளை, தான்பிறந்த குடும்பத் தைவிளக்கவந்தது என்பதிற் சிறிதுஞ் சந்தேகமில்லை என்று தங்களுக்குள்ளே பேசிக்கொள்வார்கள். இத

தர்க்கம், வியாகரணம், முதலிய நூல்களைக் கிரமமாக ப்படிப்பித்து "நீ, தமிழ்நாட்டிற்சென்று, அங்குள்ளவ ர்களுக்குப் பிரயோசனப்படுவையாக" என்று கட்ட ளையிட்டார். சுவாமிகள் அக்கட்டளையைச் சிரசின்மே லேற்று, அவரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு, தெ ன்தேசத்துக்குவந்து, திருவண்ணாமலை ஆதீனத்திலே காவிபெற்று அங்கேயிருக்குங்காலத்திலே, சித்தாந்த நூல்களைவாசித்தலில் இடையறாமுயற்சிகொண்டிருந் தார். அதன்பின்பு அந்தஸ்தலத்தைவிட்டு நீங்கிச் சித ம்பரத்துக்கு வந்தார். அங்கேயிருக்குங்காலத்திலே சம்ஸ்கிருதத்திலுள்ள பௌஷ்கரம், சிவஞானபோதம் முதலிய நூல்களுக்கு வியாக்கியானங்கள் செய்தும், சித்தாந்தசிகாமணி, பிரமாணதீபிகை, பிரசாததீபி கை, சிவயோகசாரம் முதலிய நூல்களைச் சம்ஸ்கிரு தத்திலே செய்தும், சிவஞானசித்தியாருக்குரை செய்தும்,பின்னர் அவைகளைத் திருவண்ணாமலை ஆதீன த்திலே ஒப்பித்தார். சிதம்பரத்திலே, ஞானப்பிரகா சம்" எனப் பெரியதிருக்குளம் அவராலேயே அமை க்கப்பட்டது. பின்னர் அந்தஸ்தலத்திலேயே சுவாமி தரிசனஞ் செய்துகொண்டிருந்து சிவபதமடைந்தார்.

னைக்கேள்வியுற்ற அவரது மூத்த தமையனாராகிய
தியாகராசப்பிள்ளை "விளையும்பயிரை முளையிலே
தெரியும்" என்னும் பழமொழியை நினைந்து, அவர்ப
து அதிப்பிரீதிவைத்து, அவரை அதிகமாய்ப் படிப்பி
க்கவேண்டுமென்னும் ஆசைமிகுதியினாலே, வேலா
யுதமுதலியாரிடத்திலே கொண்டுபோய், நன்றாகப்
படிப்பிக்கும்படி அவரிடத்தில் ஒப்பித்தார். அம்முதலி
யார், தம்பிள்ளையாகிய சம்பந்தமுதலியாருடனே இப்பி
ள்ளையாகிய ஆறுமுகநாவலரையும் கூடவைத்து
அவர்களுக்கு இலக்கண இலக்கியங்களைப் படிப்பிப்பா
ராயினார். அப்போது அவருக்கு வயசு ௰௨. ஆயிற்று.

இப்பன்னிரண்டாம் வயசாகிய ஜய௵ ஆவணி௴
இங்கிலிஷ்கற்கும்படி (Rev: Peter Percival) * பீற்
றர்பார்சிவல் பாதிரியாருடைய அங்கில வித்தியாசாலை
க்கு அனுப்பப்பட்டார். இங்கே இங்கிலிஷ் கற்குங்கா
லத்திலே, தமிழ்க்கல்வியை இன்னும் அதிகமாய்க்கற்க

---

* இவர் நெடுங்காலமாய் யாழ்ப்பாணத்திலே பாதிரியா
யிருந்து, அநேக அங்கிலவித்தியாசாலைகளையும், தமி
ழ்வித்தியாசாலைகளையும் தாபித்தவர். பின்பு, பாதிரி
உத்தியோகத்தைப் பரித்தியாகஞ் செய்துவிட்டு,
சென்னபட்டணம்போய், அங்கேயுள்ள சென்னைக்
கலாசாலை வித்தியாசாலையிலே (Madras Frosidency
College) பண்டிதராயிருந்தவர். தினவர்த்தமானியெ
ன்னும் பத்திரிகையைத் தொடங்கி நடத்தினவர்.

வேண்டுமே என்னும் ஆசைமிகுதியினாலே ¶ சேனாதி ராயமுதலியாரிடத்திலும், †சரவணமுத்துபபுலவரிடத்திலும், நன்னூற்காண்டிகையுரை, விருத்தியுரை, இரகுவம்சம், திருவள்ளுவர், திருக்கோவையார், சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம முதலிய நூல்களைக்கற்றாராயினார்.

இவ்வாறாகத்தமிழ், இங்கிலிஷ் என்னும் இருபாஷைகளையும் அதிக கவனத்துடன கற்குங்காலத்திலே, இங்கிலிஷ் கற்பிக்கிறவர்கள் மிக இலகுவாகப்பிள்ளைகளுக்கு விளங்கப்படுத்துதற்கும், ஒருபாத்தியாயர் விளங்கப்படுத்துவதுபோலவே மற்றை உபாத்தியாயர் களும விளங்கப்படுத்துதற்கும் ஏது, அப்பாஷை நூல்கள் சுத்தியரூபமாயிருத்தல் என்றும், தமிழ்ப் படிப்பிக்கிறவர்கள் அவ்வாறு செய்யாமைக்கு ஏது, இப்பாஷை நூல்கள் பெரும்பாலும் பத்தியரூபமாயேயன்றிக்

¶ இவர் இருபாலையிலுள்ள முதலிவேளாளராகிய நெல்லைநாதமுதலியாரின் புத்திரர். இலக்கண இலக்கியங்களில் மிக்க பாண்டித்தியமுடையவர். பெருஞ்செல்வர். எவர்களாலும் நன்கு மதிக்கற்பாடுடையவர்.

† இவர் மாதகல் மயில்வாகனப்புலவர் முதலியாரின் புத்திரர். சேனாதிராயமுதலியாரின் மாணாக்கர்களுள் ஒருவர். நெடுங்காலமாகக்கனத்தார் வசகிரிமுதலியாரால் இவ்விடயத்திற்கு அனமுண்டு என்று எழுதப்பட்டவைகளுக்கு எதிராக உதயதாரகை என்னும் பத்திரிகையில் எழுதிக் கொண்டிருந்தவர்.

சத்தியரூபமாயில்லாமையே என்றும், சத்தியரூபமாயுள்ள அப்புத்தகங்கள் தாமும் சுத்தச் செந்தமிழ் நடையுடையன அல்லவென்றும் அறிந்துகொண்டார்.

இனிக் கோயில்களிலே கந்தபுராணம், திருவிளையாடற்புராணம், பெரியபுராணம், திருவாதவூரர்புராணம் முதலிய புராணங்கள் வருஷந்தோறும் படிக்கப்படுகின்றனவே, அவைகளுக்குப் பொருள்சொல்லுவோர் எப்படிச்சொல்லுகிறார்கள் என்பதை அறியும்பொருட்டு, அவ்வக்கோயில்களுக்குப் போய் வருவார். இப்படிப்போயிருந்து அவைகளைக் கேட்குங்காலத்திலே, ஆட்சேபத்துக்கு இடமாயுள்ளவைகளைக் குறித்துவைத்திருந்து, படிப்பு முடிந்தவுடன் அவர்களிடத்திலே வினவுவார். அவ்வினாக்களுக்கு, அவர்களாற் கொடுக்கப்பட்ட விடைகள் தக்கவையாயின், ஒத்துக்கொள்வர். தகாதவையாயின், தாம் அப்பொருளைக் அவர்களுக்கு விளக்குவார். அவருடைய கையிலே புத்தகங்கள் எப்பொழுதுங் காணப்படும்.

இங்கிலிஷ் பள்ளிக்கூடத்திலே மேல்வகுப்புக்கு வந்தவுடன், பார்சிவல் இவருடைய இருபாஷைத் திறமையையுங் கண்டு, கீழ்வகுப்புக்கு இங்கிலிஷ்படிப்பிக்கவும், மேல்வகுப்புக்களுக்குத் தமிழ்ப்படிப்பிக்கவும் இவரை வேண்டிக்கொண்டார். அவ்வேண்டுகோளுக்கு இசைந்து, வேதனம்பெறாது சிலகாலம் படிப்பித்து வந்தார். அப்போது அவருக்கு வயசு ௧௯. ஆயிற்று

அக்காலத்திலே அப்பள்ளிக்கூடத்திலே கற்ற மாணாக்கருள் அவரே, இங்கிலிஷ் தமிழ் என்னும் இருபாஷைகளையும் நன்குகற்றவர் என்னும் பெயரும், இங்கிலிஷைத் தமிழ்ப்படுத்துவதிலும், தமிழை இங்கிலிஷ்ப்படுத்துவதிலும், சுத்தச் செந்தமிழ் பேசுவதிலும், எழுதுவதிலும், அவருக்குச் சமமாக ஒருவருமில்லையென்னும் பெயரும், யாழ்ப்பாண முழுதும் பரம்பிற்று. இதனைக் கண்டும் கேட்டும் அறிந்தவராகிய பார்சிவல் பைபிலைத் திருத்துவதற்காக, தமக்குத் தமிழ்ப்பண்டிதராக அவரை நியோகித்தார்.

தமிழ்ப்பண்டிதராகவிருந்து பைபிலைத் திருத்திக்கொண்டு வருங்காலத்திலே, பரமதமாகிய கிறிஸ்துமதம் பரம்பச் சுவமதமாகிய சைவம் குன்றுதலைக் கண்டார். கண்டபொழுதே சைவசாத்திரம் படித்தலில் முன்னையினும் பின்னர் அதிக கவனத்தைச் செலுத்தினார். சைவ சித்தாந்த சாத்திரங்களாகிய சிவஞானபோதம், சிவஞானசித்தியார், திருக்களிற்றுப்படியார், திருவருட்பயன், நெஞ்சுவிடுதூது, கொடிக்கவி முதலிய நூல்களைச் சந்தேக விபரீதமறக் கற்றுணர்ந்தார். இம்மதநூல்களிலெல்லாம், ஆன்மாக்கள் பொருட்டுச் சிவபெருமான் அருளிச்செய்த முதனூல்கள் வேத சிவாகமங்கள் என்றும், அவைகளுள் வேதம் பொதுநூலென்றும், ஆகமம் சிறப்புநூலென்றும் அறிந்தார். அறியவே, சிறப்பு

நூலாகிய சிவாகமத்தைக் கற்றற்குச் சம்ஸ்கிருத ஆவசியகம் வேண்டியிருந்ததனால் அதனைப் படிக்க முயன்று, சிறிது நாள்களுக்குள் சம்ஸ்கிருதநூல்களை வாசிக்கவும், அவற்றின்பொருளை ஐயந்திரிபற விளங்கவுங்கற்றுக்கொண்டார். இவ்வளவினிலலாது, வேத சிவாகமாதி சமஸ்த சாத்திரங்களின் உண்மைப்பொருள் தமிழ்வேதமாகிய தேவார திருவாசகங்களே என்றுணர்ந்து அவற்றையும் சந்தேகவிபரீதமறக்கற்றுணர்ந்தார். உரைவே. தமிழ், சம்ஸ்கிருதம், இங்கிலிஷ்என்னும் முப்பாஷைகளுந்தெரிந்தவ ரெனவும், சைவசித்தாந்த சாத்திரங்களில் மிக்க பாண்டித்தியமுடையவரெனவும் உலகத்திலே விளங்கினார். விளங்கவே, எல்லாரும் அவரை நன்குமதித்து மரியாதை செய்யவும், தங்களுக்குத் தெரியாத கல்விவிஷயம், சமயவிஷயங்களைக் கேட்டறியவும் தலைப்பட்டார்கள். தம்மிடத்துவருபவரோடெல்லாம் அவர்களுக்கு, கடவுளுண்டு, ஆன்மாவுண்டு, புண்ணியபாவமுண்டு, சுவர்க்கநரகமுண்டு, மறுபிறப்புண்டு என்னும் இவைகளை யாரும்நம்பல் வேண்டுமென்றும், மேலேசொல்லப்பட்டவைகளைப்பற்றி விசேஷமாகப் பேசும்நூல்கள், சதாசிவமூர்த்தியுடைய ஈசானமுகத்தினின்றும் தோன்றிய காமிகம்முதல் வாதுளம் இறுதியாகிய மூலாகமங்கள் இருபத்தெட்டே, அவைகளின் வழிநூல்களாகிய நாரசிங்கம்முதல் விசுவான்மகம் இறுதியாகிய உபா

ங்கள் இருநூற்றேழும், சார்புநூல்களாகிய தத்துவப்பிரகாசிகைமுதல் இரத்தினத்திரயம் இறுதியாகிய அட்டப்பிரகரணமும், சிவாகமத்தின் ஞானபாடப்பொருளைச் சுருக்கி இனிது விளக்கும் தமிழ்ச் சைவசித்தாந்த சாத்திரங்களுமே யென்றுஞ் சொல்லுவார். அல்லவே, சனங்கள் தாங்கள் முன்னொருகாலத்துங் கேட்டறியாத நூல்களைப்பற்றி இவர் சொல்லுகிறார். இந்நூல்களை எங்கே கற்றார்? எவரிடத்திற் கற்றார்? எப்போது கற்றார்? என்று ஆச்சரியங்கொண்டு இப்படிப்பட்ட கல்வியறிவொழுக்கமுடைய இவரிடத்தன்றோ நாமெல்லாம் அன்புவைத்தல் வேண்டுமென்று கருதி அன்புவைத்து, இவைகளை அறிந்தவரொருவர் இத்தேசத்தில்லாமையால் இவரே சிறவரென்றுந் தெரிந்துகொண்டார்கள். அப்போது இவருக்கு வயசு ௨௨ ஆயிற்று.

இப்படியிருக்குங்காலத்திலே, கருவிநூல்களையும் சமயநூல்களையும் சிலபிள்ளைகளுக்குக் கற்பித்தாலவர்களால் உலகத்திற்குப் பயன்பெரிது சித்திக்குமென்றெண்ணி, பிள்ளைகளைச் சேர்த்து, விசுவாசு வருஷம் தைமீ முதலாக (1845) இராத்திரியிலும் பகலிலும் வேதனம் பெறாது கற்பிக்கத்தொடங்கினார். அப்போது அவரிடத்திலே கல்விகற்றுப்பயி

சேர்ந்த பிள்ளைகள் சதாசிவப்பிள்ளை, * சுவாமி நாதையர், நடராசையர், விசுவநாதையர், ஆறுமுகப் பிள்ளை, கந்தசுவாமிப்பிள்ளை, ஆறுமுகச்செட்டி முதலானவர்களை.

பைபில் திருத்தி அச்சிட்டுப் பதிப்பிக்கும்படி. வெளியத்தையும், நானாவித பாஷைகளிலுள்ள புத்தகங்களையும், இத்தேசத்துக்கு முன்னனுப்பிய (Bi Society) விவிலிய சங்கத்தார் அதிசீக்கிரத்தில் உ வாலு செய்யும்படி. பார்சிவல் முதலிய பாதிரிமார்க க்குக் கட்டளைகளனுப்பினார்கள். அவைகளை வாசித்த திரியார் ஒருங்குகூடி, சென்னபட்டணம் போ தற்கும், பைபில் அச்சிடுவித்தற்கும் பார்சிவலைத் தெ செய்தார்கள். அவர்களுடைய சம்மதப்படி பார்சிவ லது தமிழ்ப்பண்டிதராகிய ஆறுமுகநாவல ருங் கூட்டிக்கொண்டு சென்னைக்குப் போயினர்.

சென்னபட்டணம்போய்ச் சேர்ந்தவுடன் பைப அச்சிடுவிக்கநாகப் பார்சிவல் வந்தாரென்று மே

* இவர் நல்லூரிலுள்ள கனகசபாபதிப் பிள்ளையுடைய கு ரர். தமிழ்ப்படிக்கலந்தகாலந்தொடுத்து அவரை ஒருகாலத்தும் பிரியாதிருந்தவர். அவரைப்போல இவரும் நைட்டிகப்பிரமசாரி. அவருடைய முயற்சி எல்லாவற்றிற்கும் மிக உதவியாயிருந்தவர். அநேக தகங்களை அவர் முன்னிலையிலும், தாமாகவும் சோதித்துப் பதிப்பித்தவர். அவர் சபாநாயகருடை குஞ்சிதபாத நிழலையடைந்தபின், அவராலே தாபிக் கப்பட்ட சைவப்பிரகாச வித்தியாசாலைகளுக்கு அதி பராயிருக்கின்றார்.

...ட்ட அங்குள்ள மிசியோனரிமார் (Mission-
s) அவரிடத்திலே வந்து, யாழ்ப்பாணத்திலே தமி
கல்வி குறைவாதலாலும், செந்தமிழ் பேசுவோர்
ர் ஆதலாலும், யாழ்ப்பாணத்தார் தமிழ்ப்பண்
ால் திருத்தப்பட்ட பைபில் இங்குள்ள பண்டி
ன்னிலையில் வாசிக்கப்பட்டு அவர்கள் பிழையில
ன்றும், வசன நடை நன்றாயிருக்கின்றதென்றும்
ல்வார்களாயின், அச்சிற் பதிப்பிக்கலாமென்
அப்படிச் செய்யாது அச்சிற்பதிப்பிக்கின் நாங்
ளை அங்கீகரிக்கமாட்டோம் என்றும் சொல்லிப்
யினார்.

அவைகளைக் கேட்டமாத்திரத்தே பார்சிவல் மனம
யினைப்பட்டுத் தமது பண்டிதரை நோக்கி "நா
அச்சிற்பதிப்பித்துக்கொண்டு சீக்கிரம்போய்வி
மென்று வர, இங்கே தடையுண்டுபட்டிருக்கின்
நாங்கள் அவர்கள் சொல்லுக்குச் சம்மதித்து
ள்ள பண்டிதர் முன்னிலையில் வாசித்தால், அவ
பிழையென்று சொல்லுகிறார்களோ, சரியென்
ல்லுகிறார்களோ தெரியவில்லையே; பிழையெ
து வசனநடை நன்றாயிருக்கவில்லையென்று
சொல்வார்களாயின், நமக்கெல்லாம் அவமான
மிடுமே" என்று சொல்லினார். பண்டிதர் அதற்கு
மாக "நாங்கள் திருத்திய பைபிலில் ஒரு
யுமில்லை; வசனநடையும் நன்றாயிருக்கின்றது;

ப்படியிருக்க, அவர்களுக்குப் பெற்றவராயிரு அதிலே ஒரு குற்றமுமில்லையென்று பல பிரமாணங்கொண்டு நாங்கள் தாபித்து எங்களாலே திருத்தப்பட்டபடியே அச்சிடுவிப்போம். ஆதலால், அவர்கள் கருத்துக்கிசைந்து யாழ்ப்பாணத்திலும் செந்தமிழ் உடைமைத் தாபித்தலே தகுதி" என்று சொன்னார். அவர்கள் கேள்விக்கு இவர்கள் உடன்பட்டபோது அவர் அதனைப் பார்வையிட்டபடி, அக்காலத்திலே சென்னபட்டணத்தில் சிறந்த வித்துவானாயிருந்த மகாலிங்கையரை ஏற்படுத்தினார்கள். மகாலிங்கையர் பைபிளை முற்றும் வாசித்து, அதிலே பிழையில்லை யென்று வசனநடை நன்றாயிருக்கின்றதென்றும், இந்தப்பிரகாரம் அச்சிடுதலே தகுதி என்றும், அவர்களுக்குச் சொல்லி, யாழ்ப்பாணத்துத் தமிழையும் நன்குபாராட்டி வியந்தனர். இந்தப்பிரகாரம், பாதிரியாரும் பண்டிதரும் யாழ்ப்பாணத்திலும் செந்தமிழ் உண்டெனச் சாதித்து, பைபிளை அச்சிடுவித்துக்கொண்டு விரைவில் யாழ்ப்பாணத்துக்கு வந்தார்கள். இது நிற்க.

அவருடன் கூட இங்கிலிஷ் கற்றவர்களுள் ஒருவராகிய மு. தில்லைநாதபிள்ளை, சைவசமயத்தின் உண்மையை அறியாதபடியினாலே, கிறிஸ்துமதத்திலே பிரவேசித்தற்கு உடன்பட்டு, இன்னகிழமை ஞானஸ்நானம் பெறுவேன் என்று பார்சிவலுக்கு வாக்குக் கொடுத்திருந்தனர். அப்பொழுது இவர் பார்சிவ

டைய அங்கிலவித்தியாசாலை உபாத்தியாயர்களுள் ஒருவர். இவரன்றி, சு. சின்னத்தம்பியென்பவரும் ஆப ப பிரவேசஞ்செய்தற்குடன்பட்டு இன்னகிழமை ஞானஸ்நானம் பெறுவேமென்று சொல்லியிருந்தார்.

இப்படி நிகழுநாளிலே, இவ்விருவருடைய சமாசாரங்களைக் கேள்வியுற்ற ஆறுமுகநாவலர் இவர்களை நேரே கண்டு, தனியிடத்திற்கு அழைத்துக்கொண்டு போய், தாமிதுசெய்தால் தாமுமத் தமிழ்ப்பண்டிதராகியோசித்த பாதிரியவர் உத்தியோகத்தினின்றும் நீக்குவாரென்பது, தாம்பெறும் வேதனத்தை இழந்துவிட நேரிடும் என்பது, சற்றேனும் சிந்தியாதவராய், சைவசமயத்தினது உயர்வையும் கிறிஸ்து சமயத்தினது இழிவையும் நன்றாக அவர்களுக்குப் புலப்படப்போதித்து, அவர்களால் நியமிக்கப்பட்ட நாளில் ஞானஸ்நானம்பெறாது அவர்களைத் தடுத்து வைத்தார்.

பாதிரியாருக்கு இன்னகிழமை ஞானஸ்நானம் பெறுவோமென்று வாக்குக்கொடுத்த இருவரும், அற்றை தினத்திற் பெறாமையால் பாதிரியார் அவர்களை நோக்கி, "நீங்கள் எனக்குவாக்குத்தந்தபிரகாரம் குறித்த நாளில் ஏன் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவில்லை" என்று கேட்டார். அதற்கு அவர்கள் "உமது சமயக் கோட்பாட்டில் எங்களுக்குச் சந்தேகமிருந்தமையால், இன்னும் நன்றாக ஆராய்ந்து தெளிந்துகொண்டு

ஞானஸ்நானம் பெறலாமென்று விடுத்தோம்" என்று
கள். அவர் "உங்கள் சந்தேகங்களை நிவிர்த்திபண்ணி
க்கொண்டு சீக்கிரத்திலே ஞானஸ்நானம் பெறுங்கள்"
என்று அவர்களுக்குச் சொன்னார்.

ஆறுமுகநாவலரால் இவ்விருவருஞ் சைவசமயத்
துண்மைபோதிக்கப்பெற்று, ஞானஸ்நானம்பெறுமுன் த
டுக்கப்பட்டார்களென்பதைப்பிறிதொரு வழியால் அறி
ந்த பார்சிவல், மறுநாட்காலமே ஆறுமுகநாவல
ரது உத்தியோகத்தைநடத்தும்பொருட்டு பாதி
யார்வீட்டிலே பிரவேசித்தவுடனே, பாதிரியார் கோப
குறிப்புக்கொண்ட அவரை நோக்கி, "மற்றை ஞாயிற்
றுக்கிழமை ஞானஸ்நானம்பெறுவோம் என்று எனக்கு வ
க்குக்கொடுத்த இல்லைநாதபிள்ளை, சின்னையாபிள்ளை
என்னு மிருவரையும், அதுசெய்யாதுவிடும்படி தாங்
கள் தடுத்தது என்னை" என்று கேட்க, அவர் அதற்கு உத்
தரமாக "எனக்குத்தெரிந்த சைவசமயத்துண்மைகளை
நான் அவர்களுக்குப் போதிக்கவேண்டியது என்கட
மையே" என்றார். "தாங்கள் என்னிடத்தில் உத்
யோகமாக விருந்துகொண்டு இப்படிச்செய்தல் தகு
தியல்லவே" என்றார். அப்பொழுது அவர் "உம்மிட
த்திலே நான் பண்டிதராயிருத்தல் உமக்குப் பிரியமி
ல்லையாயின், இப்பொழுதே நீங்கிவிடுகிறேன்" என்று
சொல்லிக்கொண்டு, தலைப்பாகையை எடுத்தார். எடு
க்கவே, பார்சிவல், தம்மைக் கிறிஸ்துமதத்தைப் பரப்

தற்பொருட்டு இங்கனுப்பிய உவெஸ்லியன் கொன் வறன்சின் (Wesleyan Conference) அபிப்பிராயத்துக்கும், தமது கருத்திற்கும், கிறிஸ்துமதம் பரம்புதற்கும், அவர் முழுவிரோதியாயினும், தமக்கு அவரைப்போல ஒரு தமிழ்ப்பண்டிதரைச் சம்பாதித்துக் கொள்ளுதல் மிகவரிதாயிருந்தமைபற்றி, அவர் கையைப்பிடித்துக்கொண்டு, "தாங்கள் இதுகாரியத்தில் ஆயாசப்பட்டு என்னைவிட்டு நீங்கும்படி புறப்படுதல் தகுதியன்று; பின் இவ்வுண்மையை அறியும் பொருட்டுத் தங்களை நான் கேட்டேனேயன்றிப் பிறிதொன்றற்கன்று" என்று சொல்லித் தடுத்தார். பின்னர் ஒருவாறு உடன்பட்டுத் தமது கடமைகளை நடத்தி வந்தார். ஞானஸ்நானம் பெறாமையினால் தில்லைநாதபிள்ளை உபாத்தியாயர் உத்தியோகத்தினின்றும் நீக்கப்பட்டார். சின்னப்பாபிள்ளை உபாத்தியாயர் உத்தியோகத்தைப் பெறாதுவிட்டு வியாபார முயற்சியில் ஊக்கங்கொண்டு கொழும்புக்குப்போயினர். அங்கே, அக்காலத்திலே சிவில் உத்தியோகத்தருக்குள் அதிகௌரவமாயிருந்த மோர்க்கன்துரையினுடைய சகாயத்தினாலே சுப்பிரீங்கோட்டுத் தரணியுத்தியோகத்தைப்பெற்று யாழ்ப்பாணம்வந்து, அதிசமர்த்தரெனப் பெயர்பெற்றுச் சிறப்புற்றுவாழ்ந்து, சிலகாலஞ் சென்றபின் இறந்தனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள சிவாலயகுகாலயங்களு ள்ளே ஆதியிலே புவனேகவாகு என்னும் மந்திரியினாலே சிவாகமப பிரகாரம் கட்டப்பட்டுப் பிரதிட்டை செய்யப்பெற்றுப் பூசை திருவிழாக்கள் நடந்தப்பட்டதும், அதன்பின்னர், பறங்கிக்காரர் காலத்திலே இடிக்கப்பட்டதும், பின் இற்றைக்கு ஏறக்குறைய நூறுவருஷங்களுக்கு முன்னே ஒருவரால்கட்டப்பட்டு, பூசை திருவிழாக்கள் செய்யப்பட்டு வருவதுமாகிய நல்லூர்க் கந்தசுவாமிகோயிலைப்பற்றி, அக்கோயில் அதிகாரியாகிய இரகுநாதமாப்பாணருக்கு, பிலவங்க௵ ஆடி மீ ஒருமகோற்சவதினத்திலே, அக்கோயில் சிவாகமத்துக்கு விரோதமாகக் கட்டப்பட்டிருத்தல் தகாதென்றும், மூலமூர்த்தி முதலியவை வேலாயுதங்களாய் இருத்தல் தகாதென்றும், சிவதீக்ஷையில்லாத பிராமணர் பூசை செய்தல் தகாதென்றும் போதித்தார். அப்போதனைக்கு அக்கோயிலதிகாரி உடன்பட்டிலர்.

இவைநிகழ்ந்தபின் அநேகர் சற்சமயமாகிய சைவ சமயத்தினின்றுங் கிறிஸ்துசமயத்திலே பிரவேசித்தற்குக் காரணம் சைவசமயத்துண்மையை அறியாமையினாலென்றறிந்தார். இனி, சைவசமயக்கோயில்களிலே பிரசங்கமண்டபம் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்றும், பிரசங்கம் செய்தற்குக் கல்வியறி

வொழுக்கங்களிற் சிறந்த பிரசாரகர்கள் காலத்திற்குக் காலம் நியோகிக்கப்படல் வேண்டுமென்றும், நமது சைவாகமங்களிலே சொல்லப்பட்டிருக்கின்றதே; பிரசங்க மண்டபமாவது பிரசாரகர்களை நியோகிப்பாராவது பிரசாரகர்களாவது தற்காலத்திலே காணப்படவில்லையே!! அதுவுமின்றி, நமது சைவசமயிகள் சைவசமயத்தினது உண்மையையும், சமயக்கிரமங்களையும் அறியாதவர்களாய் இருக்கின்றார்கள் ஆதலால், நஞ்சைவசமயத்துண்மையை அவர்களுக்குப் போதித்தலின் மிக்கபுண்ணியம் பிறிதொன்றும் இல்லை என்றும், அன்னியதேசத்தார் இத்தேசத்திலே வந்து, தமது சமயத்தை நம்மவர்களுக்குப் போதித்து, அவர்களைத் தம்மதத்தவர்களாக்குகின்றார்களே, நம்முடைய சமயம் நம்மவர்களுக்குப் போதிக்கப்பட்டால் அவர்கள் பரமதப்பிரவேசஞ்செய்ய மாட்டார்களே என்றும் தெளிந்து, சைவபபிரசங்கம் செய்தற்கு முயன்று, வண்ணார்பண்ணையிலே, மகெளதாரிய மகாப்பிரபுவாகிய வைத்தியலிங்கச் செட்டியாரால் கட்டுவிக்கப்பட்ட வைத்தீசுபரன் கோயின் வசந்த மண்டபத்திலே, கலியப்தம் ௪,௯௪௯-க்கும், சாலிவாகன சகாப்தம் ௧,௭௭௦-க்குமசமமாகிய பிலவங்கவருஷ மார்கழிமீ ௰௮௳ (31st Decr 1847) சுக்கிரவாரமும், சுவாதிநக்ஷத்திரமுங் கூடிய சுபதினத்திலே, சைவமென்னுஞ் செஞ்சாலி

வளரும்பொருட்டுப் பிரசங்கம் என்னும் மழையைப் பொழிந்தார். அந்நாள் முதலாக ஒவ்வொரு சுக்கிரவாரத் திராத்திரியினும நியமமாகச சைவப்பிரசங்கஞ் செய்துவந்தார். அவரோடொரு சாலை மாணாக்கராகிய நல்லூர் வெங்கடாசலையர் குமாரர் கார்த்திகேயையரும் அவருடைய கேள்வியபடி பிரசங்கஞ் செய்து வந்தார். அப்பிரசங்கத்துக்கு வேண்டியபுஸ்தகங்களைச் சதாசிவப்பிள்ளையும், தில்லைநாதப்பிள்ளையும் பிறருஞ் செய்துவந்தார்கள். அப்பிரசங்கம வெகு சனங்களுக்குப் பயன்பட்டமை சத்தியம் என்பது பின்வருஞ் சரித்திரத்தினால் உரைப்படும். அப்போது அவருக்கு வயசு உ௬-ஆயிற்று.

பிரசங்கந் தொடங்கியபின், அவ்வருஷம் தைமீ வண்ணார்பண்ணைச் சிவன்கோயிலிலே, பல சனங்களெதிரே, நல்லூர்க் கந்தசுவாமி கோயிற் குற்றங்களை எடுத்துச் சாத்திரப் பிரமாணங் காட்டி, அவைகளைக் கண்டித்துப் பிரசங்கஞ் செய்தார். கோயிலார்கள், சுப்பிரமணிய தூஷணைஞ் செய்கின்றார் என்று அவர்மீது குற்றமேற்றி, புறம்பே அவரைத் தூஷித்தார்கள்.

சுவமத ஸ்தாபனத்திற்கும், பரமதகண்டனத்துக்கும் அதியாவசியகம் வேண்டற்பாலனவாகிய வி

யங்களைப் பிரசங்கித்து வரும் நாளிலே, பாதிரிமாருட் சிலர் பார்சிவலிடத்திலேபோய், "நாங்கள் இத்தேசத்துக்கு வந்த காலத்திலாவது அதற்கு முன்னாவது ஒருகாலத்திலுஞ் சைவசமயத்தவர்களுக்குள்ளே இல்லாத காரியத்தை, உம்மிடத்திலே தமிழ்ப்பண்டிதராயிருப்பவர் இப்போது செய்கின்றார்; நாங்கள் இத்தேசத்துக்கு வந்தகாரணம் எங்களுடைய சமயத்தைப் பரப்புதற்கேயன்றிப் பிறிதொன்றற்கன்று." அப்படியிருக்க, எங்கள் மதம் பொய்யென்றும், அதைப்பரம்பவிடமாட்டேன் என்றும் சபதஞ்சுற்றி, சொல்லாலும் செயலாலும் காட்டுகிற இவரை உமக்குத் தமிழ்ப்பண்டிதராக வைத்திருத்தல் தகாது என்றார்கள். அவர்கள் சொல்லியவைகள் இவர் கருத்துக்கும் ஒப்பமுடிந்தமையால், ஒருநாள் பண்டிதரை நோக்கி, "தாங்கள் சிவன்கோயிலிலே வெள்ளிக்கிழமை தோறுஞ் சைவப்பிரசங்கஞ் செய்கின்றீர்களாம். இடையிடையே நமது சமயத்துக்குமாறாகவும் பேசுகின்றீர்களாம். அஃதென்னை!" என்று அறியாதார்போலக் கேட்டனர். அதற்குத்தரமாகப் பண்டிதர் "என்கடமைகளை நிறைவேற்றுதலில் ஏதுந்தவறுண்டா, அப்படியானாற் சொல்லுங்கள்" என்றார். பாதிரியார் ஒன்றும் பேசாது மௌனமாயிருந்துவிட்டு, எழுந்துபோய், தம்மிடத்திலே முறையிடு செய்த பாதிரிமாருக்கு இப்படிப்பட்ட ஒருவரைத்

தகுந்த சம்பளங்கொடுத்தாலும் பெற்றுக்கொள்ளுத ல் அரிதாதலால், இதுகாரியத்தில் நான் யாதும்பேசாது விடுதலே தகுதியென்று சொல்லி, அவர்களைப் போகும்படி செய்துவிட்டார்.

புறச்சமயிகளுக்குள்ளே யன்றி, நமது சைவசமயிகளுக்குள்ளே நெடுங்காலமில்லாதிருந்த பிரசங்கத்தை **ஆறுமுகநாவலர்** செய்யத்தொடங்கிய பின்னர், பிராமணர்கள், வித்துவான்கள், பிரபுக்கள் என்னும் எத்திறத்தாரும் இவர்செய்யும் பிரசங்கங்கள் அவர்கள்செய்யும் பிரசங்கங்களினும் கடினமான விஷயங்களாயும், பலநூல்களின் சாரங்களாயும், இம்மை மறுமைப்பயன்களைத் தருவனவாயும், காதுக்கினியனவாயும், கேட்போருக்கு இனிது விளக்குவனவாயும் இருத்தலைக் கேள்வியுற்று, ஆச்சரியமடைந்து, அதிதூரத்தினின்றும் மிக்க ஊக்கத்தோடும் அன்போடும் ஒவ்வொரு கிழமையினும் வருவாராயினார்கள்.

சைவசமயம் இப்படிப்பட்டதென்றும், சைவசமயிகள் வழிபடுங்கடவுள் இத்தன்மை யுடையரென்றும், சைவசமயிகள் அத்தியாவசியகந் தரிக்கவேண்டிய சின்னங்கள் இவையென்றும், சைவசமயிகளுக்கு வேண்டும் இலக்ஷணங்கள் இவையென்றும் பிரசங்கித்தலே தகுதியெனக்கண்டு, அவ்விஷயங்களை அதிப்

பிரபல பிரமாணங்களோடும் எடுத்துப் பிரசங்கித்தார். அக்காலத்திலே செய்த சில பிரசங்கங்களாவன: கடவுள் வாழ்த்து, உருத்திராக்ஷதாரணம், சிவபத்தி, வேதாகமங்கள், திருவிழா, சிவலிங்கோபாசனை, யாக்கைநிலையாமை, சிவதீக்ஷை, மகளிரொழுக்கம், இதராசிலாச்கியங்கள், தருமம், செய்ந்நன்றியறிதல், பிக்ஷையிடுதல், கல்விகற்பித்தல், கடவுளொருவருண்டெனல், பசுக்காத்தல் (உ) அறிவொழுக்கங்களிற் சிறந்தோரைத் தழுவி நடத்தல், பிரபஞ்சயமை, பேதைமை, கொல்லாமை, நீதிசிக்ஷை, வியபிசாரம், கள்ளுண்ணல் (உ) சிவத்திரவியங்கவர்தல் முதலியவைகளே.

இவ்வளவு முக்கியமான விஷயங்களை அதிப்பிரபலநியாயங்கொண்டு சைவசமயிகளுக்குப் புலப்படும்படி பிரசங்கித்தபின்பு, மாமிசபோசனஞ் செய்த அநேகர், அது செய்யாது விட்டார்கள். மதுபானம் பண்ணின அநேகர், அது பண்ணாது விட்டார்கள். தீக்ஷைபெற்றுஞ் சந்தியாவந்தனஞ் செய்யாத அநேகர், மீட்டுந் தீக்ஷைபெற்றுக் கிரமமாய்ச் சந்தியாவந்தனஞ் செய்து வந்தார்கள். உருத்திராக்ஷந் தரியாது, ஆலயதரிசனஞ் செய்த அநேகர், உருத்திராக்ஷதாரிகளாய்க் கோயில்களுக்குப் போய்த் தரிசனஞ் செய்யத் தொடங்கினார்கள். தரிசனகாலங்க

ளிலே ஒருசிறிதுந் தோத்திரஞ் செய்யாத அநேகர், தோத்திரத்திரட்டுக்களை நெட்டுருப் பண்ணிக் கோயில்களிலே தோத்திரம்பண்ணத் தொடங்கினார்கள். ஒருகாலத்திலும் ஆலயதரிசனஞ் செய்யாத அநேகர். சோமவாரம், மங்கலவாரம், சுக்கிரவாரம், பிரதோஷம், கார்த்திகை, அமாவாசை, பௌர்ணிமை, மாசப்பிறப்பு, சிவராத்திரி, நவராத்திரி, விநாயகசதுர்த்தி, கந்தசஷ்டி முதலிய புண்ணிய காலங்களிலும் வேறும் அநேகர், நியமமாகவும் தரிசனஞ் செய்யத் தொடங்கினார்கள். சைவ சமயநூல்களெல்லாம் சில விவேகிகளால் அவ்வக்காலங்களிலே தங்கள் பிழைப்புக் காகச் செய்யப்பட்டன என்று சொல்லும் பாதிரிமாரின் சொல்லை விசுவசித்திருந்த அநேகர், பாதிரிமாரும், அவர்களைச் சார்ந்தவர்களுஞ் சொல்வனவெல்லாம் பொய்யென்றும், சிவபெருமான் ஆன்மாக்கள் பொருட்டு வேதசிவாகம மென்னும் முதல் நூலகளை அருளிச்செய்தாரென்றும், அவைகளின் வழிநூல் சார்பு நூல்களும் அவ்வக்காலங்களிலே தோன்றின வென்றும், மற்றைச் சித்தாந்த நூல்களும் அவர் அருட்பெற்றவர்களாலேயே செய்யப்பட்டன வென்றும் விசுவசித்துக் கொண்டார்கள். பிரமா, விட்டுணு, உருத்திரன் முதலிய கடவுளர் பலரென்றும், அவர்களை வணங்குதலால் தங்களை அநேகேச்சுரவாதிகள் என்றும் சொல்லிவந்த அநேகர், அநா

தி முத்தசித்துருவாகிய சிவன் ஒருவரே சகல ஆன்மாக்களுக்கும் மேலாகிய கடவுள் என்றும், அவரை வழிபடுதலால் தாங்கள் சித்தாந்த சைவரென்றுந் தெளிந்து கொண்டார்கள். கோயில்களிலே சுவாமியைத் தாங்குதல் தங்களுக்கு அவமானம் என்று எண்ணியிருந்த அநேகர், சுவாமியைத் தாங்குதலால் வரும் பயன் இதுவென்றும், அதனால் நாங்கள் ஸ்ரீபாதந் தாங்கிகள் என்னும் திவ்விய நாமத்தைப்பெற்றுக் கொள்வோமென்றும் அறிந்து, தாங்கத்தொடங்கினார்கள். தலைக்குட்டையோடு கோயில்களுக்குப்போய்ச் சுவாமிதரிசனஞ் செய்து வந்த அநேகர், அது விலக்கென்றுகண்டு, தலைக்குட்டை இல்லாது தரிசனஞ்செய்யத் தொடங்கினார்கள். பிறன்மனை விழைதல், வரைவின்மகளிர் விழைதல் முதலியவற்றைத் தங்களுக்கு இடையறா வேலையாகத் திரிந்த அநேகர், அவை பாவமென்று கண்டு வெறுத்து விட்டார்கள். தங்கள் சரீரம் நெடுங்கால மிருக்குமென்றும், தாங்கள் என்றைக்கும் சுக சரீரிகளாய்ச் சீவிப்பார்களென்றும், மரணத்தைக்குறித்து ஒருபோதும் சிந்தியாதிருந்த அநேகர், சரீரம் அநித்தியமென்றும், இருவினைக்கீடாகிய சுகதுக்கங்களை அநுபவித்தல் நிச்சயமென்றும், அது நீங்கும் அவதி தமக்குத் தெரியாதென்றுந் தெளிந்து கொண்டார்கள். ஒருபோதுந் தரும சிந்தையில்லாது, தாமுந் தமது பெண்டிர் பிள்

ளைகளும் நன்றாக உண்டுபடுத்துக் கொண்டு களிப்புற்ற அநேகர், தருமஞ்செய்தலின் மிக்க புண்ணியம் பிறிதொன்று மில்லையென்று கண்டு, தருமஞ் செய்யத்தொடங்கினார்கள். தமக்கு எவ்வளவோ நன்றி செய்தவர்களையும் மறந்த அநேகர், செய்ந்நன்றி மறத்தல் கேடு என்று அறிந்தார்கள். நம்முயிர்க்குயிராயுள்ள சிவபெருமானிலும் பார்க்கத் தமது பெண்டிர் பிள்ளைகளிலும் பொருள் பண்டங்களிலும் அதிக அன்பு வைத்த அநேகர், இவை எல்லாவற்றையும் நமக்குத் தந்தவரும், நம்மோடு அநாதியே இரண்டறக் கலந்து நின்றவரும், பெத்த நிலையிலே தாம் நம்முள்ளே மறைந்து நமக்குப் பின்னாகியும், முத்தி நிலையிலே நம்மைத் தம்முள்ளே அடக்கித் தாம் நமக்கு முன்னாகியும் உள்ள வருமாகிய சிவபெருமானிடத்தே அதிக அன்பு வைத்தலே தகுதியென்று கண்டு, அன்புவைத்தார்கள். தங்கள் தங்கள் கடமைகளும். ஒழுக்கங்களும் இவை இவையென அறியாத பெண்களுள் அநேகர், தங்கள் தங்கள் கடமைகளையும், ஒழுக்கங்களையும் அறிந்துகொண்டார்கள். திருவிழாக்கள் தங்கள் தங்கள் கொண்டாட்டத்துக்கு மிக உவப்பானவைகளென்று நினைத்த அநேகர், கடவுள் உற்சவங்கொண்டருளுவது ஆன்மாக்களாகிய நாமெல்லாந் தம்மேலே பத்தி செய்யும் பொருட்டென்று உணர்ந்து, திருவிழாக் காலத்திலே துன்மார்க்க விஷ

யங்களிலே மனசை விடாது கடவுள்மீது பத்திசெய்து அவரை வழிபடத் தொடங்கினார்கள். பசுக்களை இரக்கமின்றி அடித்தல் முதலிய வற்றைச்செய்த அநேகர், பசுக்கள் சிவலோகத்தினின்றும் பூமியில் வந்தனவென்றும், அவைகளின் உறுப்புக்களிலே தேவர்களும் முனிவர்களும் வசிக்கின்றார்க ளென்றும், புண்ணியதீர்த்தங்கள் இருக்கின்றனவென்றும், அப்பசுக்கள் தரும் பஞ்சகவ்வியங்கள் சிவபெருமானுக்கு அபிஷேகத்திரவியங்களாகின்றன என்றும், அவற்றின்சாணம் சிவசின்னமாகிய விபூதிக்கு மூலம் என்றும் அறிந்து, அவைகளை வணங்குதற்கும், அன்போடு புல்முதலியனகொடுத்தற்கும், அவைகளின்பொருட்டுக் கேணி குளங்களை வெட்டுவித்து, அவைகளினருகே ஆவுரிஞ்சுகல் நாட்டுவித்தற்கும் தொடங்கினார்கள். வீணரோடு கூடுதலும், அவர்களோடு சொற்கேட்டான், காகிதம், கவறு, சதுரங்கம் விளையாடுதலுமே நமக்குத்தொழிலாகப்பூண்ட அநேகர், அவர்களோடு கூடாதும், அவை செய்யாதும் விடுத்துச் சற்சனரோடு சகவாசஞ்செய்தலே பெருமையென்றறிந்து, அவர்களோடு நல்விஷயங்களிலே பொழுதுபோக்கத் தொடங்கினார்கள். கல்வியிற் குறைவுடையோரும், ல்வி யில்லாதவருமாகிய இருதிறத்தாரும் கல்வியின் மேம்பட்ட செல்வம் பிறிதொன்று மில்லை யெனக் கண்டு, கல்வி கற்கத் தொடங்கினார்கள்.

கிறிஸ்துமத அநுசாரிகளாகிய பாதிரிமாராலே தாபிக்கப்பட்ட வித்தியாசாலைகளிலே, கருவி நூல்களோடு அவர்கள் சமயநூல்கள் படிப்பிக்கப்படுதலையும், சைவசமயிகளாலே பற்பலவிடங்களிலுந் தாபிக்கப்பட்டிருக்கும் வித்தியாசாலைகளிலே கருவிநூல்கள் மாத்திரம் படிப்பிக்கப்படுதலையும் அவர் கண்டார். காணவே, சைவசமயப் பிள்ளைகளுக்குக் கருவிநூல்களோடு சமயநூல்களும் படிப்பிக்கப் பட்டால் அவர்கள் தம்மதத்தில் நிலைத்து நிற்றன் மாத்திரமன்றி, பரமதங்களையுங் கண்டிக்கத்தக்க சத்தி யுடையராயும் வருவார்கள் என்பதை நன்றாக அறிந்துகொண்டார். அறியவே, இவ்விருதிற நூல்களையும் படிப்பித்தற்பொருட்டு, "தாம் ஒரு வித்தியாசாலை தாபித்தல் வேண்டுமென்று கருதி, கலியப்தம் ௪,௯௫௰-க்கும், சாலிவாகன சகாப்தம் ௧,௭௭௧-க்கும் சமமாகிய கீலக௵ ஆவணி௴ ௨௰ சுக்கிரவாரமும், கிருஷ்ணபக்ஷசதுர்த்தியும், இரேவதிநக்ஷத்திரமும், சூலயோகமும், பாலவகரணமுங்கூடிய சுபதினத்திலே விருச்சிகலக்கினத்திலே, வண்ணார்பண்ணையிலே, ஒரு வித்தியாசாலை தாபித்தார்.

அது ஏழுமாசங்களாக வைத்தீசுரன்கோயிலுக்கு கிரேயுள்ள வீட்டிலும், பின்பு அக்கோயின்மடத்திலும் வைக்கப்பட்டது. அவ்வித்தியாசாலையிற் படி-

பித்தவர்கள் அவர் மாணாக்கராதலால் வேதனம்பெறாது படிப்பித்துவந்தார்கள். பின்னர் அவ்வித்தியாசாலையை, பிடியரிசி தண்டி, அதனாலே சிலகாலம் உபாத்தியாயர்களுக்கு வேதனங்கொடுத்து நடத்திவந்தார். பின்பு பிடியரிசிவரவு கண்டற்கூலிக்குத்தானும் போதாமைகண்டு விடப்பட்டமையால், உபாத்தியாயர்களுட் சிலர் நீங்கிவிட, சிலர் படிப்பித்துவந்தார்கள்.

இந்தப்பிரகாரம் சைவசமயிகளுக்குப் பிரசங்கஞ் செய்தலினும், சைவசமயப் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பித்தலினுமே தம் வாணாள் முழுமையும் போக்கல் வேண்டுமென்ற பேராசையினாலே, அடுத்த புரட்டாதியில் தமது உத்தியோகத்தைப் பரித்தியாகஞ் செய்து விட்டார். (Sep. 1848.) அதனைக் கேள்வியுற்ற அவரது சகோதரர்கள் அது செய்தமையால் அவர் மேற் கோபங் கொண்டு "நீ யென்ன புத்தியீனஞ் செய்து கொண்டாய்; இந்தச் சம்பளம் இனி நீ எங்கே பெறுவாய்; இனிமேல் உனக்கு உலகத்திலே என்ன மதிப்பு" என்று, அவரைக் கண்டித்தார்கள். அதற்குத்தரமாக அவர் "நான் உங்களிடம் வந்து பொருளுதவி செய்யும்படி கேளாதிருக்கக்கண்டு கொள்ளுங்கள்" என்று சொல்லி, அவர்கள் சமுகத்தை விட்டகன்றனர். அப்போது அவருக்கு வயசு ௨௬. ஆயிற்று. இது நிற்க.

முன்கிறிஸ்து மதத்திலே பிரவேசிக்க மாட்டே னென்றதனால் உபாத்தியாயர் உத்தியோகத்தினின் றும் நீக்கப்பட்ட தில்லைநாதபிள்ளை, இப்போது தமமோடு கூட இங்கிலிஷ் கற்றவரும், தமக்குச் சைவ சமயத்தின் உண்மையைப் பலவாறாகப் போதித்துத் தம்மைக் கிறிஸ்துமதத்திற் பிரவேசியாதபடி தடுத் தாட்கொண்ட ஆசாரியரும், சைவப்பிரசாரகரும், லோகோபகாரியும் ஆகிய ஆறுமுகநாவலரிடத்தி லே தமிழில் இலக்கணவிலக்கியங்களை அதிகமாய்ப் படிக்க எண்ணி, தம்மோடு கூடக்கற்றவர் என்ப தையாவது, தம்மோடொத்தவயதுடையவர் என்பதை யாவது நோக்காது, மற்றை மாணாக்கரைப் போல வே ஆசிரியருக்குச் செய்ய வேண்டிய வழிபாட் டில் எள்ளளவுந் தவறில்லாதவராய்ப் பாடங் கேட் பாராயினர். அவர் தம்முடைய போதனையை நம்பி, தம்மேல் மிக்க அன்பு உடையராயிருந்த படியால், ஆசிரியரும் அதிக கவனத்தோடும் அவருக்குப் பா டஞ் சொல்லி வைத்தார்.

யாழ்ப்பாணத்துள்ள பிரபுக்களையாவது, மற்றைச் சாமானியசனங்களை யாவது மேவாது, இப்பெருந் தொடக்கங்களைத் தொடங்கின ராதலானும், சர்வ லோகைக நாயகராகிய சிவபெருமானாலே விதிக்கப் பட்ட விதிகளுக்கு மாறாக நடப்பவர்கள் பிராமண

ராயிருந்தாலும், சைவகுருமாராயிருந்தாலும், பிரபுக்களாயிருந்தாலும், சுற்றத்தாராயிருந்தாலும், மித்திரர்களாயிருந்தாலும், பகைவராயிருந்தாலும், எவரையும் தாட்சண்ணியமின்றி அவ்வப்போதே கண்டித்தலாலும், எத்திறத்தாரும் அவர் மீது பொறாமையும் கோபமுங் கொண்டு, அவருக்கும், அவரது தொடக்கங்களுக்கும் விரோதமாக அநேக இடையூறுகளைச் செய்தார்கள். செய்தும், தமது மனச்சான்றிற்கு விரோதமில்லாமலும், லோகோபகாரத்தின் பொருட்டும் சிதசித்துப்பிரபஞ்சமெங்கும் வியாபித்திராநின்ற சர்வசீவதயாநிதியம், முழுமுதற்கடவுளுமாகிய சிவபெருமானுடைய திருவடிகளை மனம் வாக்குக் காயங்களினாலே முறையே சிந்தித்துத் துதித்து வணங்கி, அவரது திருவருளையே முன்னிட்டுத் தொடங்கினராதலால், அவர்களுடைய இடையூறுகள் அவரையும் அவரது நன்முயற்சிகளையும் அணுகப் பெற்றில. இப்படி இடையூறுகளைச் செய்த பிரபுக்களுள் அநேகர், அவை அவர் மீது பலியாமை கண்டபின் அவருக்கு நண்பராயினர்.

இப்படிநிகழுநாளிலே, தமது வித்தியாசாலையிலே, கல்விகற்கும் பிள்ளைகளுக்கு, கருவிநூலுணர்ச்சியும் சமயநூலுணர்ச்சியும் ஆகிய இரண்டையும் ஊட்டத் தக்க புத்தகங்கள் இங்கில்லாதிருந்தமையாலும், இங்

கிருந்த புத்தகங்கள் தாமும் எழுத்துப்பிழை, சொற் பிழை, வசனப்பிழைகளே பொதிந்தவைகளாதலா லும், அச்சிலும் ஏட்டுப் பிரதிகளிலும் உள்ளவைக ளைத் தாம் பரிசோதித்தலும், புதிதாகச் சிலநூல்க ளைச் செய்தலுமாகிய இரண்டினாலும், அப்பிள்ளைக ளுக்குப் பயன்பெரிது சித்திக்கப்பண்ணலாம் என்றும் அவைகளை அச்சிடுவித்தற்கு ஒரு அச்சியந்திரம் அவ சியம்வேண்டுமென்றும் நினைந்து, அவ்வாறோர் அச்சி யந்திரத்தைக் கொண்டுவரும் பொருட்டுச் சென்னப ட்டணம் போகமுயன்று, தமது வித்தியாசாலையைத் தம்மாணாக்கர் சிலரிடத்தே ஒப்புவித்து விட்டு, தம மிடத்திலே எப்பொது கல்விகற்கவந்தாரோ அக்கா லந் தொட்டு ஒருகாலத்தும் தம்மை விட்டுப் பிரியாத நல்லூர்ச் சதாசிவப்பிள்ளையையுங் கூட்டிக்கொண்(சௌமியவருடம் ஆடிமீ பயணம்புறப்பட்டார்.

புறப்பட்டு வேதாரணியம்போய், அங்கு நின்று மாயூரமார்க்கமாய்ச் சென்று, திருமூலநாயனார் அ தின்கீழ்ச் சிவயோகத்திலிருந்து, ஒவ்வொருவருஷ திற்கு ஒவ்வொரு திருப்பாட்டாக மூவாயிரந் திரு பாட்டினால் திருமூலமந்திரம் என்னுந் தமிழ்நூலை ய(ளிச்செய்த தலமாகிய திருவாவடுதுறை மடத்தை யடைந்தார். அங்கேயிருக்கும்பொழுது, கல்விய

லொழுக்கங்களிற் சிறந்த பண்டாரசந்நிதிகளும், தமிழ்வித்துவான்களும் இதற்கு முன்னரே அவருடைய கல்வித்திறமைமுதலியவைகளைக் கேள்விப்பட்டிருந்தார்களாதலால், அவரிடத்திலே இலக்கணவிலக்கியங்களிலும், சைவசித்தாந்த சாத்திரங்களிலும் பலவாக்ஷேபங்களைப் பண்ணுவாராயினார்கள். அவ்வாக்ஷேபங்களுக்கு அவர்சொல்லிய விடைகள் பலநூல்களின் சாரமாயும், யுத்தியனுபவங்களுக்கு முழுதுமியைந்தவையுமிருந்தன. ஒருநாள் பண்டாரசந்நிதிகள், சைவபிரசங்கஞ் செய்யும்படி அவரைக் கேட்டார்கள். அப்பொழுது, அவர்செய்த பிரசங்கஞ் சிவாகமங்களிலே பிரதிபாதிக்கப்படும் பதி பசு பாசங்களை யுணர்த்துவதாயும், சுருங்கச்சொல்லல் முதலாகிய பத்தழகென்னும் திவ்விய இலக்கணஞ்செறிந்த செந்தமிழ்வசனமாயும், இலக்கண அமைதிக்கு ஒருசிறிதும் மாறுபாடில்லாததாயும், தருக்கசம்பிரதாயம் நிறைந்ததாயும், பிறரொருவராலுஞ் செய்தற்கரியதாயும், கடவுட் பத்தியுடையாரை மாத்திரமன்றி அஃதில்லாதாரையும் மனமுருக்கிக் கண்களினின்றும் அருவிசொரியப் பண்ணுவதாயும், "தேருந்தோறு மினிதாந்தமிழ்" என்றபடி கேட்குந்தோறுங் கேட்குந்தோறுந் தெவிட்டாததாயு மிருந்தபடியால், திருக்கைலாச பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து உபய சந்நிதானங்களும், மற்றை வித்துவான்களும்

அவருடைய வாக்குவல்லபத்தைக்குறித்து ஆச்சரியமுஞ் சந்தோஷமுங் கொண்டு, அவருக்குரிய இயற்பெயருக்குப்பின் **நாவலர்** என்னுந் திவ்விய சிறப்புநாமத்தைச் சூட்டினார்கள். அப்பெரியோர் கூறியபடியே ஏனையோரும் அக்காரணச் சிறப்புப்பெயரை அவருடைய இயற்பெயரின் பின்வைத்து **ஆறுமுக நாவலர்** என அவரை அழைப்பாராயினார்கள். பின்பு அங்குநின்றும் புறப்பட்டுச் சென்னபட்டணஞ்சேர்ந்தார்.

அங்கே சிலகாலமிருந்து சூடாமணிநிகண்டுரையும், சௌந்தரியலகரியுரையும் அச்சிற் பதிப்பித்துக்கொண்டு, ஒரு அச்சியந்திரமும் விலைக்கு வாங்கிக்கொண்டு, அதைவிட்டு நீங்கி வரும்பொழுது, திருவண்ணாமலையாதீனத்துச் சின்னப்பட்டமாகிய அருணாசலதேசிகரைக் காணும்படி நேரிட்டது. அங்ஙனம் நேரிட்டபொழுது தேசிகர் ஆறுமுகநாவலரது கல்வித்திறமையையும் சமய உணர்ச்சியையுங் கண்டு, மிகவும் பாராட்டி அம்மடத்திற்றானே சிலகாலமிருந்து போகும்படி கேட்டுக்கொண்டார். அவருடைய கேள்விக்கிசைந்து அங்கே தங்கினால், யாழ்ப்பாணத்திலே தாந்தொடங்கிய முயற்சிகள் வீணாய்முடியுமென்ற அச்சமும், யாழ்ப்பாணத்தாரில் அநேகர் பரமத

த்திற் பிரவேசித்துவிடுவார்கள் என்றதனாலுண்டாகிய இரக்கமுங் காரணமாகத் திரும்பவருவேனென்று சொல்லிக்கொண்டு விரைவில் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தார்.

சைவப்பிரகாசவித்தியாசாலையை வைக்கும்பொருட்டு, வண்ணார்பண்ணையிலே யுள்ள வர்த்தகர்களுள் அதி கௌரவமுடையவராகிய, அ. ஆறுமுகச்செட்டியார் சௌமியளு ஐப்பசிமீ ஒரு நிலம் தருமசாதனஞ் செய்தனர். சில புண்ணியவான்களுடைய உதவியினாலே அந்நிலத்திலே ஒரு வித்தியாசாலை கட்டப்பட்டது. சாதாரணளு தைமீ முதலாக வித்தியாசாலை அதிலே நடைபெற்றுவந்தது. இதுநிற்க,

தாங்கொண்டுவந்த அச்சியந்திரத்திற்கு வித்தியாநுபாலனயந்திரசாலை எனப் பெயர்கொடுத்துத் தாபித்தபின், அதிலே சைவசமயிகளுக்கு ஆவசியகம் வேண்டற்பாலனவாகிய புத்தகங்களைப் புதிதாகச்செய்தும், பரிசோதித்தும், அச்சிற்பதிப்பித்தார். அங்கிலபாஷையிலிருக்கும் பாலபாடங்கள்போலத் தமிழ்ப்பாஷையிலும் பாலபாடங்கள் செய்தால், அவைகள் சுவசமயமாகிய சைவசமயத்தை அனுட்டிக்குந் தமிழர்களுக்கு மிகப் பிரயோசனமுள்ளவைகளா யிருக்குமெனநினைந்து, அநேக நீதிசாரங்களையுஞ் சைவச

பகாரங்களையுந் திரட்டி வசனரூபமாக எழுதி, முதற் பாலபாடத்தினிறுதியிலே ஆத்திசூடி, கொன்றைவேந்தன் என்னும் நீதிநூல்களையும், இரண்டாம் பாலபாடத்திலே அவைகளுக்கு உரையையும் எழுதிச் சேர்த்து அச்சிடுவித்தனர். எவ்வளவோ காலமாகப் பலபலராலே பற்பலவிதமாக அருத்தம் பண்ணப்பட்டு, அநேகருக்கு இதுதான்பொருளோ, அதுதான்பொருளோ என்று சந்தேகமுறக் கிடந்தவைகளாகிய "அநந்தருக்கேல்" முதலியவைகளின் பொருள் மிக எளிதில் விளங்கக்கிடந்தன. அப்போது அவருக்கு வயசு ௨அ ஆயிற்று.

1851

அடுத்த விரோதிகிருது வருஷம் சித்திரை மீ கொலைமறுத்தல் முதலியவும், அவ்வருஷம் ஐப்பசி மீ பவணந்திமுனிவரியற்றிய நன்னூலுக்கு சங்கரநமச்சிவாயபுலவரால் செய்யப்பட்டு, திருவாவடுதுறைச் சிவஞானசுவாமிகளால் திருத்தப்பட்ட விருத்தியுரையையும், திருச்செந்தினிரோட்டக யமகவந்தாதிக்கும். தாமெப்பொழுதும் நியமமாகப் பாராயணம்பண்ணிவந்த திருமுருகாற்றுப்படைக்கும் உரை எழுதி, அவைகளையும் அச்சிடுவித்தனர். தமது வித்தியாசாலை வண்ணார்பண்ணையிலே தாபிக்கப்பட்டிருத்தலால், அச்சியந்திரத்தையும் அவ்வித்தியாசாலைக்குச் சமீபமாக வைத்திருந்தால் அவ்விரண்டினையும் பிரயாசையின்றி நடத்த

லாமென்று நினைந்து, அச்சியந்திரத்தை வைத்தீசுரன் கோயிலுக்குத் தெற்கேயுள்ள மடத்துக்கு நல்லூரினின்றுங் கொண்டுவந்தார். அச்சுக்கூடவேலைகள் அதிகப்பட்டு இராத்திரிகாலங்களிலும் மடத்திலே தங்கவேண்டியிருந்தமையால், அம்மடத்தைத் தானே தமக்கு உறைவிடமாக்கிக்கொண்டார். அப்போது அவருக்கு வயசு ௨௧ ஆயிற்று.

பத்தியரூபமாகவிருக்குந் திருத்தொண்டர் * பெரியபுராணத்தைக் கத்தியரூபமாக்கினால் அது சைவசமயிகளுக்குப் பத்தியை விளைவித்தலாகிய பயனைக்கொடுக்குமென்று கருதி, அதனைச் சுத்தச் செந்தமிழ்நடையில் எழுதி அச்சிட்டார். இப்படி அநேகபுத்தகங்களை அச்சிட்டபின்னர், சுன்னாகத்தில் வசித்த முத்துக்குமாரக்கவிராயர் கிறிஸ்துமதத்திலுள்ள அபத்தங்களையும், ஆட்சேபத்துக்கிடமாக இருந்தவைகளையுந் திரட்டிப், பாடியிருந்த ஞானக்கும்மி என்னும் நூலைப் பரிசோதித்து, நல்லூர் சி. விநாயகமூர்த்திச் செட்டியார்பேரால் அச்சிட்டு வெளிப்படுத்தினார். அப்போது அவருக்கு வயசு ௩௰ ஆயிற்று.

இஞ்ஞானக்கும்மி வெளிப்படுத்தப்பட்ட உடனே கிறிஸ்துமதத்தவர்களெல்லாருந் திரண்டு, கூட்டங்

* பெரியபுராணத்தைக் கத்தியரூபமாகச் செய்தமைக்குக் காரணம் அப்புத்தகத்தின் முகவுரையிற் காட்டியிருக்கின்றார். அதனைப்பார்த்தறிக.

கூடி, இவ்வச்சுக்கூடத்தை இல்லாமற் பண்ணவேண்டு மென ஆலோசனைபண்ணினார்கள். ஆலோசனைபண்ணியும், பரமகருணாநிதியாகிய சிவபெருமானுடைய மகிமை இவ்வச்சியந்திரம் வாயிலாக எவ்விடங்களி லும் விளங்கவேண்டியிருந்ததனால் அவர்களுடைய முயற்சி சித்திக்கவில்லை. பின்பு தங்கள் முயற்சி பலி யாமை கண்டு, நாவலருக்குஞ் சைவசமயத்திற்கும், ஞானக்குழ்ப்பிக்கும் விரோதமாகப் பிரசங்கங்கள் வாயி லாகவும் பத்திரிகைகள் வாயிலாகவும் வேண்டியவா றே பேசியும் எழுதியும் வந்தார்கள். அக்காலத்திலே, உடுவிற் பாதிரியாரிடத்தே உபதேசியாயிருந்த ஒரு வர் தான் பிரசங்கிக்கப் போகுமிடங்களிலெல்லாம் கிறிஸ்துமதப்பிரசங்கத்தை ஒருவாறு சுருக்கி, சைவச மயதூஷணமே பேசிவந்தார். அம்மட்டில் நில்லாது பத்திரிகைகளிலும் மறைந்து நின்று எழுதிவந்தார். இத் தூஷணங்களை ஒரு சிறிதும் சகிக்கலாற்றாத நாவலர் வச்சிரதண்டம் என்னும் துண்டுப் புத்தக த்தை எழுதி விநாயகமூர்த்திச் செட்டியார்பேரால் வெளிப்படுத்திவிட்டார். அதன்பின் அவ்வுபதேசியா ரும், பாதிரிமார்களும், அவர்களைச்சார்ந்த பிறரும் அடங்கியிருந்தார்கள்.

கிறிஸ்தவர்கள் சுப்பிரமணியப்பெருமான் எம்போ ல்வார் எனவும், அவர் எம்மைப்போல இருபெண்க

ளைக் கலியாணஞ் செய்திருக்கின்றார் எனவும், அம்
மனைவியர்களில் ஒருவராகிய வள்ளிநாயகியைத் தாம்
விரும்பியபோது, அவ்வள்ளிநாயகி தமது விருப்ப
த்திற்கு உடன்படாமைகண்டு தமது தமையனாரா
கிய விக்கினேசுரரை அச்சமயத்தில் யானையாய் வரு
ம்படிசெய்து, அவர் வாயிலாகத் தம்மோடு கூடும்
ாகையால் நம்மினு மிழிந்தவரெனவும்,
-யவரை முற்றறிவுடைய கடவுளாகக்
'படுதல் ஒருவாற்றானுங் கூடாதெனவும்,
வண்டியவாறே பேசிவந்தார்கள். இவை
யியுற்ற நாவலர் கிறிஸ்தவர்களுடைய
நம்படியாகவும், அவர்களுடைய துர்ப்
மயங்கிக்கிடந்த சைவசமயிகளது ஐயந்
வும், சுப்பிரமணியக்கடவுளுக்குச் சரீர
ம நம்மனோர்க்குள்ள சத்ததாதுக்களா
ம்போலாகாது; முற்றறிவு, வரம்பிலின்
யறிவு, தன்வயமுடைமை, குறைவிலாற்ற
ற்றல் என்னும் ஆறுகுணங்களுமே ஆறு
ாகவும், மற்றையருட்குணங்கள் மற்றை
ாகவும் அமையப்பெற்ற அருட்டிருமேனி
அவருடைய பன்னிரண்டு திருக்கரங்களி
-க்கலங்களாகிய தோமரம், கொடி, வாள்,
குலிசம், அம்பு, அங்குசம், மணி, தாமரை தண்டம்,
வில், மழு என்னும் பதினொன்றும் பதினொரு உருத்

திரரெனவும், வேல் இப்பதினொரு ஆயுதங்களுக்கு
மேலாகிய ஞானசத்தியெனவும், அவருடைய தேவிய
ராகிய தெய்வநாயகி வள்ளிநாயகி யென்னு மிருவரு
அவருக்குக் கிரியாசத்தி இச்சாசத்தி எனவும் சாதி
கின்றதாகிய ஒரு புத்தகத்தை எழுதி, அதற்கு
"சுப்பிரபோதம்" எனப் பெயர்தந்து வெளிப்படுத்
விட்டார். வெளிப்படுத்தியபின்னர் பாதிரிமாருந் து
ப்போதனைசெய்தலை ஒழிந்துக்கொண்டார்கள். ம
றைய சனங்களும் "நாங்கள் ஒருபோதுங்
யாதனவும், எங்களுக்கு ஒருவராலுந் தெ
டாதனவுமாயுள்ளவைகளை இப்பொழுதே
மென்றும், சுப்பிரமணியப்பெருமான் இவ
ருந்தகைபினையுடையர் என்பதனை இப்புத்
லாகவே அறிந்தோம்" என்றும் சொல்லிக்
ர்கள். இம்மட்டில் நில்லாது அநேகர் நிய
வேறநேகர் சுக்கிரவாரம், கார்த்திகை, கந்தசட்
முதலிய விசேஷதினங்களிலுஞ் சுப்பிரமணியசுவா
தரிசனத்தின்பொருட்டுக் கோயில்களுக்குப் போய்
சுவாமிதரிசனஞ் செய்யத் தலைப்பட்டார்கள். அ
போது அவருக்கு வயசு ௩௧ ஆயிற்று.

தமது வித்தியாசாலையிலே, சைவசமய நூல்களை
படிப்பித்துக்கொண்டும், சைவப்பிரசங்கங்களைச் செ
ய்துகொண்டும் வருநாளிலே, பாதிரிமாராலே பி

னுஞ் சைவசமயதூஷணஞ்செய்யப் படுதலைக்கண்டு, அத்தூஷணங்களை நிராகரித்துச், சைவதூஷணபரிகாரம் என்னும் நூலைச்செய்து ஆனந்த [illegible] வெளிப்படுத்தினார். இந்நூலுக்குப், போலிநியாயங்களாலும் பொருந்தாநியாயங்களாலும் ஓர்மறுப்பெழுதி, அதற்குச் சுப்பிரதீபம் எனப் பெயர்கொடுத்து, பாதிரியாருக்குள் வேலையாயிருந்த ஒரு சுதேசகிறிஸ்தவர் * வெளிப்படுத்தினார்.

---

* இவர் பாதிரிமாரைவிட்டு அரசாட்சியாரிடத்தே உத்தியோகம் பெறுதற்பொருட்டு, நெடுங்காலமாக அநேக விண்ணப்பபத்திரங்கள் கொடுத்து, அவை சித்தி பெறாமைகண்டபின் இந்தியாதேசத்திற்குப் போயினார். அங்கே B. A. பரீக்ஷை கொடுத்து, சிறந்த கவர்ன்மெண்டு உத்தியோகம் பெற்றுச் சிறப்புற்று வாழுநாளிலே, தான் முன் கிறிஸ்துமதத்திலே பிரவேசித்தது தவறென்றுஞ் சற்சமயமாகிய சைவசமயத்திற்கு விரோதமாகச் சுப்பிரதீபம் எழுதியது குற்றமென்றுங் கண்டு, அவற்றின்பொருட்டுப் பிராயச்சித்தஞ்செய்வித்து, மீண்டுஞ் சைவத்திற்புகுந்து, சைவசமயமே சற்சமயமென்றும், அச்சமயத்தாலுணர்த்தப்படும் சிவன் ஒருவரே பஞ்சகிருத்திய நிருத்தஞ்செய்யும் பிறப்பிறப்பில்லாத பதியென்றும், மற்றைச் சமயக்கடவுளரெல்லாம் பிறப்பிறப்புடையவரென்றும் அறிந்து, அறிந்த உண்மையைக் கிறிஸ்தவர்களுக்கும் பிறருக்கும் போதித்துக் கொண்டிருந்து, சிலகாலத்தின்பின் தேகவியோகமெய்தினார்.

பாதிரிமாராகிய நாங்கள் முயன்றதுபோலவே நாவலரும் முயன்று சைவப்பிரசங்கங்கள் செய்தாரென்றும், அச்சுக்கூடந்தாபித்து நாங்கள் அச்சிட்ட மாதிரியாகப் புத்தகங்கள் அச்சிட்டாரென்றும், அச்சிட்ட புத்தகங்களிலே "பொய் சொல்லாதே" "மாமிசம் புசியாதே" "உன்னை நிந்திக்கிறவனையும் நீ நிந்தியாதே" "பாவஞ்செய்கின்றவன் நரகத்திலே துன்பத்தை யனுபவிப்பான்." "புண்ணியஞ்செய்கின்றவன் சுவர்க்கத்திலே இன்பத்தை யனுபவிப்பான்." என்றற்றொடக்கத்துச் சன்மார்க்க விஷயங்களை எழுதிப் பதிப்பித்தாரென்றும் * றெப்பின்சன் பாதிரியார் (Rev. E. J. Robinson) இங்கிலாந்து தேசத்திலே ௧௮௬௭ ம் ௵ (1867) வெளிப்படுத்திய ஹிந்தோபாஸ்டேர்ஸ் (Hindo Pastors) என்னும் புத்தகத்திலே ௧௨௫ ம் ௧௨௬ ம் பக்கங்களிலே சொல்லுகின்றார்.

குறைவில்லாத செல்வமாகிய கல்வியைக் குறைவறப்பெற்று எங்கும் புகழ்படைத்து வாழுநாளிலே அநேகர் அவரை இல்லறத்திற் புகவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். அவ் வேண்டுகோளுக்கு இசையாது மறுத்துவிட்டார்.

* இவர் நெடுங்காலமாக இலங்கைத்தீவின் வடபாகமாகிய யாழ்ப்பாணத்திலே உவெஸ்லியன்மிசனெரி (Wesleyan Missionary) மாரில் ஒருவராயிருந்தவர். கிறிஸ்துமதத்தில் மிக்க பத்தியுடையவர். இங்கிலிஷில் அதிசமர்த்தர். எவராலுஞ் சன்மார்க்கரெனப் பாராட்டப்பட்டவர்.

இல்வாழ்க்கையிலே புகாமைக்குக்காரணம் அவர் வெளிப்படுத்திய யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையின் ஆவேதனம் நான் காம்பக்கம் பத்தாம்பிரிவிற் கண்டுகொள்க. இல்லறத்திலே புகுதற்குச் சிறிதுஞ் சம்மதமில்லாதவராயிருந்தபடியால், தாஞ் சிவபூசை எழுந்தருளப்பண்ணித் தம்முடைய காலத்தை, முற்கூறியவற்றோடு சிவபூசையிலும் செபதியானாதிகளினும் போக்கல்வேண்டுமென்ற உள்ளக்கிளர்ச்சியினாலே பூசை எழுந்தருளப் பண்ணிக்கொள்ளும்படி கருதி, தமது மாணாக்கருட் சிரேட்டராகிய சதாசிவப்பிள்ளையையுங் கூட்டிக்கொண்டு ஆனந்தவருஷம் ஐப்பசிமீ° குருநாட்டுக்குச்சென்றார். அங்கே சென்று ஆசாரியரை அடைந்து, தாங்களிருவரும் க்ஷணிகலிங்கபூசை எழுந்தருளப் பண்ணிக்கொள்ளவேண்டுமென்றும், அதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்தல்வேண்டுமென்றும், விண்ணப்பஞ்செய்தார். இப்படியிருக்க, மற்றைநாட் காலையிலே ஒரு தூரதேசத்தவர் இரண்டு படிகலிங்கங்களுடன் அவர் தங்கியிருக்கும் இடத்திற்குவந்தார். நாவலர் அத் தூரதேசத்தவரைநோக்கி "நீர் இங்கு வருதற்குக் காரணம் யாது" என்று வினவ, அவர், "இந்த ஊரிலே அநேகர்வந்து சிவபூசை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு மீட்டுந் தங்கள் தேசங்களுக்குப் போதலுண்டு. அதுபற்றிச் சிவபூசை எழுந்

ருளப்பண்ணுங் கருத்துடையாராய்வந்துள்ளார் யாரு
க்காவது, இவ்விலிங்கங்களை விற்கலாமென்று சொல்
லுவதேன்" என்றார். அந்தச்சபையத்தில் அச் சை
வாசாரியரும் அவ்விடத்திற்கு எழுந்தருளிவந்தார்
நாவலர் அவைகளைப் பஞ்சசூத்திர விதிப்படி சோ
தித்தபொழுது, அவைகளிலொன்று குற்றமில்லாத்
தாயும், நான்காம்வருணத்தார் பூசித்தற்குரிய இலக்
ணங்களை யுடையதாயுமிருந்தது. பரிசோதித்ததை
கண்ட சிவாசாரியர் அவரை நோக்கி, "இவைகளெல்
லாவற்றையுமறிந்த தாங்கள் உடையவர் பூசை எழு
ந்தருளப்பண்ணுவிடின், வேறுயாவர் உடையவர் பூசை
பண்ணுதற்குத் தகுந்தவர்" என்று சொல்லி உடை
யவர்பூசையே எழுந்தருளப் பண்ணல் வேண்டுமெ
ன்று பலவாறாகக் கேட்டுக்கொண்டார். அவரு
ந்தமது காலத்தை நைட்டிகப்பிரமசாரிய ஒழுக்க
த்தாற் போக்குதற்கு எண்ணியிருந்தாராதலால் பழு
லிங்கபூசை எழுந்தருளப் பண்ணுதலில் யாதொரு
குற்றமு மில்லையென்று கண்டு, தாம் உடையவ
பூசையும், சதாசிவப்பிள்ளை க்ஷணிகலிங்கபூசையும்
ஆனந்த வருஷம் ஐப்பசிமீ ௰௮௨ ஆகிய சுபதினத்திலே
எழுந்தருளப் பண்ணிக்கொண்டார்கள். அங்கே சில
நாளிருந்து பூசை பழகிக்கொண்டு விரைவில் யாழ்ப்
பாணத்திற்குத் திருப்பினார். அப்போது அவருக்கு
வயசு ௩௨ ஆயிற்று.

ஒப்பய நிகழ்நாளிலே அவருடைய மாணாக்கருட
லர் அவரை விட்டு நீங்கி, இல்லறத்திலே புகுந்தா
ள். சிலர், யாத்திரைபண்ணவேண்டுமென்னும் விருப
த்தினாலே சிதம்பரம் முதலிய தலங்களுக்குப்போ
னார். அவர்களுள் ஒருவராகிய ஆறுமுகபிள்ளை,
திருவண்ணாமலையாதீனத்துச்சென்றுபோய், காஷாயம்பெ
று, அம்பட்டத்துத் தம்பிரானாய் இப்போதுமிருக்கின்
றார் இது நிற்க,

பரந்து வித்தியாசாலை என்றும் நிலைபெறும்பொரு
ட்டு மூலதனம் சேர்க்கவேண்டுமென்று நினைந்து, இந்த
நாட்டு சில வருஷங்களுக்குமுன்னே நிருபங்கள் எழுதிப
பல இடங்களுக்கும் அனுப்பியிருந்தார். கொழு
ம்பிலேயுள்ள செட்டிப் பிரபுக்களுள் ஒருவராகிய
D. கனகசிங்கமுதலியார் நள ௵ பங்குனிமீ
ரூபா அனுப்பியிருந்தார். அத்தொகையையே
முதலாகவைத்து, பிங்கள ௵ மாசிமீ ௰ச உ தவா
த்திராத்திரியிலே (Feb: 1858) அவ்வித்தியாசாலை
யிலே ஒரு சபைகூட்டி, அதன்வரலாற்றைப் பிரசங்கி
த்தார். அப்போது வந்திருந்த பிரபுக்கள் தங்கள்
தங்களால் இயன்றளவு உபகரித்தார்கள். * அநேக
வருஷங்களாக வேதனம் பெறாது படிப்பித்துவந்த
உபாத்தியாயர்கள் காலயுக்தி ௵ சித்திரைமீ முத
லாக வேதனம்பெற்றுப் படிப்பித்தார்கள். அவ்வித

* இதைப்பற்றிய வரலாறுமுழுவதையும் வண்ணார்பண்ணை ச
சைவப்பிரகாசவித்தியாசாலை ஆவேதனத்திற்காணக.

ருடடு ஒரு வர்த்தகசாலை வாங்கப்பட்டிருக்கின்றது. அப்பொழுது மு. தில்லைநாதபிள்ளை இவ் வித்தியாசாலையின் முதலுபாத்தியாயராக நியமனம்பெற்றார். அப்போது, அவருக்கு வயசு ௩௫ ஆயிற்று.

அவர், தமது வித்தியாசாலையைத் தம்மாணுக்கராகிய கு. ஆறுமுகச்செட்டியாரிடத்திலே ஒப்பித்துவிட்டு, காலயுக்தி௵ ஆனி௴ சென்னபட்டணம்போகப் பிரயாணப்பட்டார். பிரயாணப்பட்டு வேதாரணியம்போய்ச் சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு, அதைவிட்டு நீங்கிப் பலதலங்களையும் வணங்கிக்கொண்டு திருவாவடுதுறையாதீனத்தை அடைந்தார். அவ்வாதீனத்துப் பண்டாரசந்நிதிகளால் உபசரிக்கப்பட்டுச் சில காலந் தங்கிப்போகும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார். அவர்களுடைய கேள்விக்கிசைந்து, அம்மடத்திலே பிரசங்கங்கள் செய்துகெரண்டும், புராணங்களுக்குப் பொருள் சொல்லிக்கொண்டும் சிலநாளிருந்தார். அவைகளைப் பண்டாரசந்நிதிகள், சாஸ்திரிகள், வித்துவான்கள், தம்பிரான்கள், ஓதுவார்கள், பிரபுக்கள் முதலிய சமஸ்தருங் கேட்டு இனிது பாராட்டினார்கள். பின் அவ்விடத்தைவிட்டு நீங்கித் தருமபுரஆதீனத்தை அடைந்து, அங்கு சிலநாள் தங்கும்படி பண்டாரசந்நிதியால் கேட்கப்பட்டார். அங்கிருக்குநாளிலே, சை

வப்பிரசங்கங்கள் செய்தலிலே தம்நேரத்தைப் போக்கினார். பின்பு அவ்விடத்தைவிட்டகன்று, வழியிலுள்ள சீர்காழி சிதம்பரம் முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு சென்னபட்டணம்போனார்.

சென்னபட்டணம்போய்ச் சேர்ந்தவுடன் திருவாசகம், திருக்கோவையார் என்னும் இரண்டையும் பரிசோதித்து அவர் மாணாக்கராகிய சதாசிவப்பிள்ளை பேராலே சித்தார்த்தி௵ வைகாசி௴ வெளிப்படுத்தினார். அவ்வருஷத்திற்றானே இவைகளைத்தவிர வேறும் அநேகபுத்தகங்களையும் அச்சிட்டு வெளிப்படுத்தினார். அப்போது அவருக்கு வயசு ௩௭ ஆயிற்று.

கல்வி செல்வம் என்னும் இரண்டினும் மேம்பட்டவரும், வித்துவான்களுக்கு அவரவர் திறமைக்கேற்பச் சம்மானஞ்செய்பவரும், தம்மிடத்துவரும் யாசகர்களுக்கு வரையாதுகொடுக்கும் வள்ளலும், இராமநாதபுரத்து ஜெமீந்தாரின் மானேசருமாயிருந்த பொன்னுச்சாமித்தேவர், அவருடைய கல்வித்திறமையை அவர் பதிப்பித்த புத்தகங்களாலறிந்து, திருவள்ளுவர் பரிமேலழகருரையையும் திருக்கோவையார் நச்சினார்க்கினியருரையையும், தருக்கசங்கிரகம் அன்னம்பட்டீயத்தையும் பரிசோதித்து அச்சிடும்படிக்கும், அதற்குச் செலவு தாமே தருவேமென்றும் வேண்டிக்கொண்டார்.

அவ் வேண்டுகோளின்படி, முந்தியதை ரௌ திரி ௵ ஐப்பசி ௴த்திலும், பிந்திய விரண்டையு துன்மதி ௵ வைகாசி ௴த்திலும் வெளிப்படுத்தின இந்நூல்களைப் பரிசோதித்து வெளிப்படுத்தியபோ திருவாவடுதுறை யாதீனத்து மகாவித்துவானாகிய தி சிரபுரம் மீனாட்சிசுந்தரபிள்ளை சொல்லிய சிறப்ப பாயிரத்தின் ஒருபாகம் வருமாறு:—

"தரைசெய்தவப்பயனாகியமைந்தபெருவளப்புதுவைந்
தலைமையோன்பொன்
வரைசெய்நிதிப்பெருவாழ்க்கைமாகனவான்பெரும்புலவ
மறவாதென்று
முரைசெய்பெரும் புகழ்ப்பொன்னுச் சாமிநரேந்திரன்ம
துரைப்பக்கேட்டு [கூ
நரைசெய்விடையேறுயர்த்தநம்பிரானடிக்கன்பே
நயக்குநல்லோன்.

மன்னுபெருந்தமிழ்ப்பாடையிலக்கணமுமிலக்கியமும
வரம்புகண்டோன்
பன்னுசிவபுராணங்கள்பலதெரிந்தோன்சிவாகமநூற்
பரவைமூழ்கி
யுன்னுமநுபூதியெனும்விலைவரம்பிலாமணிகை
யுறக்கொண்டுள்ளா
னின்னுநயகுணத்தினனாய்ச்சைவமெனும்பயிர்வளர்க்கு
மெழிலிபோல்வான்.'

கழ்த்திருக்கேதீச்சரந்திருக்கோணாசலமிர்
வாணின்ற
கழ்த்தலம்பொலியாழ்ப்பாணத்துநல்லூர்வாழ்
ராக்கொண்டோன்
சமுருவமைந்தகந்தவேடவத்துதித்த
ல்வன்யாரும்
கழாறுமுகநாவலனைய்வாறச்சிற்
ப்பித்தானே.”

ந்தியந்தொல்காப்பியமுன்னையபலவிலக்கணமுஞ்
தியல்பல்விலக்கியமுஞ்சாற்றுபரமதநூலு
மெய்ப்பொருணூலுமதியமையப்பயின்றுணர்ந்து
யனுமனுபூதித்தோன்றலாயமர்பெரியோன்.
பரசமயவழியினைத்துமறமாற்றி
செஞ்சடிலத்தண்ணலாரருணெறியே
ம்படிவளர்த்துத்திகழுமாதவமுடையோன்
வனடியார்மேன்மைமுழுமையுமுணர்ந்தோன்.

விரவுதலைக்கழிக்குங்கண்மணியும்வெண்ணீறும்
நள்விரவு மைந்தெழுத்தும் பொருளாகக் கொண்டுவெட்
ரவிரவுசுத்தசைவசித்தாந்தப்பெருஞ்செல்வ [போன்
விரவுபரவுபுகழாறுமுகநாவலனே.”

“மன்னுகோணாசலமாகேதீச்சர
மென்னுமிரண்டுமிரண்டுகண்ணாகப்
பெற்றவீழத்திற்பிறங்கும்யாழ்ப்பாணத்
துற்றபல்வழனுக்குறைவிடனாகிச்
சொல்லூர்கழனிசூழ்தரக்கொண்டு
செல்லூர்பொழிலாற்சேர்ந்துலகழுந்து

வில்லூர்மாடமிகக்கொடிபொலியு
நல்லூர்வாழ்க்கைநயந்தருளறிஞன்
கந்தவேடவத்திற்கருதரன்பான்முன்
வந்தவேளென்னவந்தவதரித்தோ
னீற்றொடுகண்மணிநிறையப்பூண்பாற்
போற்றொடுபொலியும்புண்ணியபுருட
னவநெறியாயவனைத்துங்களைந்து
சிவநெறிவளர்க்குந்திட்பியகுணத்த
னெழுத்துமுதலாகவியம்பிலக்கணமு
வழுத்திலக்கியமும்வரம்புகண்டெழுந்தோ
சமயம்விசேடந்தருநிருவாணமென்
றமையுமுத்தீக்கையுமடைவுறப்பெற்றோன்
சுமங்கலவிசேடச்சுருதியாமூலா
கமங்களின்முப்பொருள்கருதுபேரருளான்
யுத்தியினமைத்துணர்ந்தோங்கனுபூதி
சித்தியுற்றமைந்தசிவசிந்தாமணி
கற்றுணர்புலவருட்களிக்கு
முற்றுணராறுமுகநாவலனே"

அப்போது திருவாவடுதுறையாதீனத்து மகாவி துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை மாணாக்கராகிய தி கராசச்செட்டியார் சொல்லிய சிறப்புப்பாயிரத்தி ஒருபாகம் வருமாறு:—

"செந்தமிழென்னுஞ்சுந்தரமங்கை
கரந்தரத்தழுகளிமங்கலநா
ணிலக்கணமனைத்துநலக்கவிளக்குந்
துலக்கமிகுந்ததுண்டாவிளக்குப்

ஆறுமுகநாவலர் சரித்திரம்.

புணர்தருழின்பமனை[illegible]பூரண
முணர்வோர்யார்க்குமெ[illegible]
நல்லறிவுறுத்தித்தொல்பவ[illegible]க்கும்
பல்கலைகட்கெலாம்புல்லுமோரில்லம்
பொய்தெரித்தகற்றிமெய்யிதுவென்னுஞ்
சைவசித்தாந்ததெய்வவைப்புக்
கண்ணுபுண்ணியங்கட்கண்ணியவுயிராந்
தண்ணியமாசிவபுண்ணியப்பிழம்பு
சிவனடியவரைச்சிவமெனமதிக்குந்
தவமதுவளர்க்குமவமறுசீல
னென்னுளங்குடிகொண்டிருக்கு
முன்னுசீராறுமுகநாவலனே."

"தென்மொழியென்னுமன்பெரும்பௌவ
மொருங்குகுடித்தபெருங்கும்பமுனிவ
னெல்காப்பெரும்புகழ்த்தொல்காப்பியமுத
லிலக்கணமெல்லாநலக்கவைத்தடுக்கிய
திருவநீண்டவொருபெரும்பேழை
யாரணம்புகலும்பூரணபுராணனே
பொருளெனப்புகலும்புராணவாகரஞ்
சொல்பலசமயமாந்துகளறவடித்துச்
சமயாதீதமாஞ்சைவசித்தாந்தத்
தெய்வவாரமுதம்பெய்துநிறைத்துப்
பொருவறவைத்தபூரணகும்பம்
பெறுபெ[illegible]தடைந்தவாறுமுகநாவலனே."

சிதம்பரத்திலே சைவப்பிரகாசவித்தியாசாலை தாபிக்கவேண்டுமென்னும் ஆசை மிகுதியினாலே, அந்தத்

தலத்திலே வித்தியாசாலை தாபிக்கமுயன்று, அத
தாபித்தலாலுண்டாகிய பிரயோசனத்தையும்,
அதைத் தாபிக்கின்றவர்களும் அதற்குதவி செய்கின்
றவர்களுமாகிய இருதிறத்தாரும் அடையும் பலத்தை
க் குறித்து, ரௌத்திரி௵ வைகாசி௴ வெளிப
டுத்திய, "தமிழ்நாடெங்கும் சைவசமயம் வளர்ந்தி,
ருதற்கு ஏதுவாகச் சிதம்பரஸ்தலத்திலே தாபி
ப்பிட்ட சைவப்பிரகாச வித்தியாசாலையைக்குறித்து
மனம்பொருந்திய சைவசமயிகளுக்கு யாழ்ப்பாண
நல்லூர் ஆறுமுகநாவலர் எழுதிய விக்கியாபன
மென்னும் பத்திரிகையிலே விரிவாகச் சொல்லியிரு
க்கின்றார். அவ்வாசை முற்றிற்று என்பதையும், அத
சைவசமயிகள் அடைந்த பிரயோசனத்தையும்
வருஞ் சரித்திரத்தினுலுணர்க.

சைவசமய நூலுணர்ச்சியினுந் தமிழ்க்கல்வியினு
ஞ் சிறந்தவரென்று பேர்படைத்து வருங்காலத்தில்
சென்னபட்டணத்துக்குச் சமீபமாயிருக்குந் திரு
ராப்பூரிலுள்ள திருவண்ணாமலை ஆதீனத்துச் சின்
னப்பட்டமாகிய ஆறுமுகதேசிகர், நாவலரைத்
பார்த்துக்கொள்ளல் வேண்டுமென்னும் ஆசையி
யினாலே அவரிடத்திற்குச் சில ஓதுவார்களையனு
ப்பித் தம்முடைய திருமடத்திற்கு அழைப்பித்து, அவ
ருடைய இலக்கணவிலக்கியத் திறமையையுஞ் சித்த

ழுணர்ச்சியையுங் கண்டு, மிகவுஞ் சந்தோஷங்கொ
, தாந் தரித்திருந்த உருத்திராக்ஷத்தை ஞாப
பொருட்டாக விருக்கட்டுமென்று அவரது மேனி
ல தமது திருக்கரங்களாற் சாத்தியருளினார்.

ன்பு ஆவசியகமாயப்பாணம் வரவேண்டியிரு
டியால் சென்னபட்டணத்தைவிட்டு, பல தலங்க
ம் வணங்கிக்கொண்டு சிதம்பரம்வந்து, சுவாமி
னஞ்செய்து, திருவாவடுதுறையை யடைந்தார்.
கே சிலநாள் தங்கும்படி நேரிட்டது. அங்கிருக்
நாளிலே உபய சந்நிதானங்களும் சித்தாந்த நூல்
லும் இலக்கிய இலக்கணங்களிலும் ஆராய்தலிற்
பொழுதுபோக்குவாராயினார்கள். அவர்கள், தங்கள்
த்திலேயே இருக்கவேண்டுமென்றும், அவ்வூரிலே
தியாசாலைகள் தாபிக்கவேண்டுமென்றும், அவரைக
டார்கள். அவர்களுடைய கேள்விக்கிசைந்து
டத்தையே தமக்கு உறைவிடமாக்கிக்கொண்
, தாம் பற்பல விடங்களிலுஞ்சென்று வித்தியா
கள் தாபித்தலும், சைவப்பிரசங்கங்கள் செய்த
, சுயாதீனமாயிருத்தலுமாகிய இவைகளெல்லாவ
ற்குந் தடையாயிருக்குமென்றெண்ணி, அதற்கு
ப்படாது மறுத்துவிட்டார். சிலநாட் சென்
ர் திருவாவடுதுறையைவிட்டு நீங்கி, வழியிலே
ள பல தலங்களையும் வணங்கிக்கொண்டு திருநா
காரோணத்துக்கு வந்து, அவ்வூரவர்களுடைய

வேண்டுகோளின்படி சைவப்பிரசங்கஞ்செய்து, நாட்டகங்கி, அவர்களுக்கு விடைகொடுத்த பின்பு, (ணியேறி, துன்மதிளுல் பங்குனிமீ யாழ்ப்பாணம் துசேர்ந்தார். அப்போது, அவருக்கு வயசு ஆயிற்று.

சிதம்பர சைவப்பிரகாசவித்தியாசாலை தாபித்த, மூலதனஞ்சேர்க்கும்பொருட்டு, துந்துபிளுல் வை சிமீ உகூ சனிவாரத்திரவிலே, யாழ்ப்பாண வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசா லே ஒரு சபைகூட்டி, மேலே சொல்லப்பட்ட வி யாசாலை தாபித்தலாலுண்டாகும் பயனையும், பிற றையும் விரித்துப் பிரசங்கித்தார். அப்போது விடத்திலே வந்திருந்த சைவசமயப் பிரபுக்கள் ; கள் தங்களாலியன்ற பொருளுதவிசெய்தார்கள். இ லும் அவ்வருஷம் ஆடிமீ உகஉ சோமவாரத்திர லே, பருத்தித்துறைச் சித்திவிநாயகர்கோயிலிலே, இ விஷயத்தைக்குறித்துப் பிரசங்கித்தார். அங்கே வ திருந்த பிரபுக்களுந் தங்கள் தங்களாலியன்ற பொ ளுபகரித்தார்கள். இதுவன்றிப் பருத்தித்துறையிலு புலோலியிலுமுள்ள சில வர்த்தகர்கள், தங்கள் வி பாரத்திலே இவ்வித்தியாசாலையை நடத்தும்பொ ட்டு, மகமை ஏற்படுத்திக் கொடுத்[illegible]ந்தார்கள். *

* இவ்வித்தியாசாலையைப்பற்றிய வரலாறு முழுவதைய சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலை ஆவேதனை விற் கண்டுகொள்க.

)ப்படி நிகழுநாளிலே, சைவசமய பத்தியுடையா
:கர், சைவப்பிரகாச வித்தியாசாலையிலே சைவப்
ிங்கங்கள் முன்போலச் செய்தல்வேண்டுமென்று,
'முறை வேண்டிக்கொண்டார்கள். சைவப்பிரசங்
கள் செய்தலிற்றானே தங்காலத்தைப் போக்கல்
ண்டுமென்னுங் கருத்தே அவருள்ளத்திற் குடி
ண்டிருந்தமைபற்றி, அவர்கள் வேண்டுகோளுக்கி
ந்து, சைவப்பிரசங்கங்கள் செய்துவந்தார்.

ைசவசமயநெறியில் வழுவாதொழுகுஞ் சைவப்பிர
கராகிய நாவலர், சமயதீக்ஷை, விசேஷதீக்ஷை,
வாணதீக்ஷை, ஆசாரியாபிஷேகம் என்னு மிவை
'ப் பெற்றுள்ளவர்கள், சிவதீக்ஷையில்லாத வைதி
பிராமணர்கையாலே விபூதி வாங்குதலைக்கண்டு,
ு சிவாகமவிரோதமென்று துணிந்து, அதனை நீக்
கருதி, அவர்களிடத்தே விபூதிவாங்காத ஒரு நியம
ந்தக்கொண்டிருந்தார். ஆகலின், சிவதீக்ஷையுடை
ார் அஃதில்லாதாரை வணங்குதலும், அவர்களைச்
ரத்தமுதலியவற்றிலே வரித்தலும், அவர்கள் கை
ாலே விபூதி வாங்குதலும், அவர்களைக்கொண்டு
'ாகமப்பிரகாரங் கட்டப்பட்டுப் பிரதிட்டைசெய்
பெற்ற கோயில்களிலே பூசை திருவிழாக்கள் செய்
ந்தலும் பிறவுமாகிய இவைகளெல்லாஞ் சிவாகம
ிரோதமென்பதையும், இப்படிச்செய்வோர் யாதொ

ருபயனையும் அடையமாட்டார் என்பதையும், சு
ஒருபிரகாரஞ் சனங்களுக்குப் பிரசங்கங்களிலே
ல்லிவந்தார். இப்படி நிகழுநாளிலே, வைதிகப்
மணர்களுள்ளே சிலர், தம்மிடத்திலே விபூதி வா
மையினால் அவர்மேற் கோபங்கொண்டு, புறம்பே
ரைத் தூஷித்தார்கள். அம்மட்டினில்லாது சிவ
மானின் திருமேனியாயும், ஆன்மாக்களுக்கு மலத்
க்கெடுத்து ஞானத்தையுதிப்பித்து மோக்ஷத்தைக்
டுக்கும் இயல்பினையுடையவைகளுமாயும், உள்ள
கமங்களையும் நிந்தித்தார்கள். அவர்கள் செய்யும்
தைகளைச் சில பிரபுக்கள் கேட்டு, மேலும்மேலும்
வாறுசெய்யும்படி, அவர்களை ஏவிவிட்டார்கள்.
மைத் தூஷித்தலைப் பொறுப்பினும், சிவாகமநிந்
சிவனடியார்நிந்தைகளை ஒருபோதும் பொறுக்கமா
டாத சைவப்பிரசாரகர், துந்துபி௵ மாசி௴
தமது வித்தியாசாலையிலே, வேதம் பொதுநூலெ
ன்றும், ஆகமம் சிறப்புநூலென்றும், வைதிகமார்க்க
லொழுகுவோர் புண்ணியலோகங்களை அடைவ
ரென்றும், சைவமார்க்கத்தொழுகுவோர் சாலோ
கம், சாமீபம், சாரூபம் என்னும் பதமுத்திகளை
சாயுச்சியமாகிய பரமுத்தியையும் அடைவர்களெ
ன்றும், அநேக பிரமாணங்களை எடுத்துக் காட்டிப்
சங்கித்தார். அப்பிரசங்கத்துக்கு விரோதமாக வை
திகப்பிராமணர் சிலர், சில பிரபுக்களையடுத்து, அவ

ப உதவியினாலே வைதிகமார்க்கத்திலொழுகு
ர் உயர்ந்தோரென்றும், அவர்களைச் சைவமா
லொழுகுவோர் வழிபடலாமென்றும், தாங்கள்
த் பூசைசெய்ய விதியிருக்கின்றதென்றும், தாபி
க்காக வெகு முறைகளிலே சனங்களைக் கூட்டி,
ா பெய்ச்சுபடியாகப் பொன்மலாங் கொடு
த்து இங்கிலிசுப் புத்தகங்களைக் கொண்டுவந்து,
திலே தாங்கள் சொல்லியவைகளுக்குப் பிர
களுண்டென வாய்ப்பறை யறைந்தார்கள். ஆ
அவர்களிலொருவராவது பிரசித்தசபையி லெ
பேசுதற்குச் சத்தியில்லாதவராயிருந்தபடி
தாங்கள் எடுத்தவிஷயத்தைத் தாபித்தற்கு
இல்லாமையாலும், மற்றக்கிழமை இவ்விஷயம
டுமென்று ஒவ்வொருகிழமையினுஞ் சொல்லி
லி, ஒரு கிழமையினும் பேசாது அலைத்துவிட-
இவைகளையெல்லாம் அறிந்த சனங்கள்
சொல்வதே நூற் சம்மதமெனவும், தங்களை
வர்களாகிய வைதிகப் பிராமணர்சொல்வது
தமெனவுந் தெளிந்துகொண்டார்கள். தெளி
வதிகப்பிராமணருக்கு அஞ்சலிவர்த்தனம் பண்
அநேகர் அது செய்யாதுவிட்டார்கள். பிரா
திவாகம் முதலிய கருமங்களிலே அவர்களை த
த்திரமாகக்கொண்ட அநேகர், கொள்ளாது
கள். வைதிகப்பிராமணரைக்கொண்டு பரா

ர்த்தபூசை செய்வித்த கோயிலதிகாரிகளு
அவர்களை நீக்கிச் சிவப்பிராமணரைக்கொண்
செய்விக்கத் தொடங்கினார்கள். வைதிகப்பி
கையாலே விபூதிவாங்கும் வழக்கத்தையுஞ்
தீக்ஷைபெற்ற அநேகர், அவர்கள் கையாலே
வாங்காதுவிட்டார்கள். இந்தப்பிரகாரஞ் சி
பெற்றோருக்கு மரியாதை நடத்தலையும்,
சைவர்களாலே வணங்கப்படுதற்கு யோக்
டையவரென்று சிவாகமங்களிலே சொல்லப
த்தலையும் அறிந்த வைதிகப்பிராமணருள்
சிவதீக்ஷைபெற்றுச் சிவபூசை எழுந்தருளப்ப
சிவாகமநெறியிலே ஒழுகத்தொடங்கினார்கள்
ப்பாணமெங்குஞ் சிவாகம ஆராய்ச்சியும், சி
சிறப்பும், தேவார திருவாசக பாராயணமு
சிவ பூசைக்கு இன்றியமையாச் சிறப்பின
பூசைமணியினோசையும் பரவத்தொடங்கின.
சமார்க்கத்திலும் அதிகமாகச் சைவமார்க்கம்
தோங்கியது. சைவமார்க்கத்தைப் பரப்புதற்
வவதாரஞ்செய்த சைவப்பிரசாரகராகிய ந
டைய கீர்த்தி தமிழ்நாடெங்கும் பரம்பிற்
வஞ்ஞத்துவமுள்ள. எமது பிதாவாகிய
மானுடைய கிருபையை என்னென்று செ
யார்க்கெடுத்துரைப்பேம்!!! அப்போது,
வயசு ௨௰ ஆயிற்று.

௧ ருதிரோற்காரி௵ மார்கழி௴ வித்தியா
யும், வர்த்தகசாலையையும், மூ. தில்லைநாதபி
த்தே ஒப்புவித்துவிட்டுச் சென்னபட்டணம்
துப் புறப்பட்டார். அடுத்த தைமாசத்திலே
ாதய புண்ணியகாலஞ் சமீபித்துவந்ததினால்,
நானம் பண்ணிக்கொண்டு போதல் வேண்டு
ம் ஆசைமிகுதியினாலே, இராமேச்சரம்போய்,
நானமும் சுவாமிதரிசனமும் பண்ணிக்கொ
ரிச் சிவராத்திரிக்கு மதுரைக்குப் போகவே
ண்டு நினைந்து, அங்குநின்றும் புறப்பட்டு, இரா
த்துக்குப் போயினார். அங்குள்ள திருவாவ
மடத்திலிருந்த சிவலிங்கத்தம்பிரானுடைய
கோளின்படி அம்மடத்திலிருந்தார். இதற்
வருஷங்களுக்குமுன்னே சென்னபட்டணத்
பொன்னுச்சாமித்தேவர் போயிருந்தபோது,
தும் இவருக்கும் ஒரு விஷயத்தைக்குறித்து
க்கொருவர் பகைவருத்தமிருந்தது. இப்படி
த்த மிருந்தபடியால், தேவரைக்காண விருப்ப
ிருந்தார். நாவலர் தமது சமஸ்தானத்து
கின்ற மடத்திலே வந்திருக்கின்றார் என்ப
கள்வியுற்ற பொன்னுச்சாமித்தேவர், ஒருநாள்
டய சமஸ்தானவித்துவா னொருவரையழை
நாவலர் அவர்கள் நம்முடைய தேசத்திலே
தும், நம்மைக் காணவில்லையே! எந்த வித்து

வாலும் இத்தேசத்துக்கு வந்தால் நம்மைக்
விருக்கிறதில்லையே. இஃதென்ன ஆச்சரியம்'
சொன்னார். அதற்கு அவர் "நான்போய்
கிறேன்" என்றுசொல்லி அவரிடத்திலேவந்
து, பல விஷயங்களையும் பேசியபின்பு, அவ
க்கி "தாங்கள் தேவரை இன்னுங் காணவி
என்று கேட்டார். அதற்கு அவர் "தேவரை
தற்கு எனக்கு இட்டமில்லை" என்றார்.
"தேவரைக் காணுதற்குத் தங்களுக்கு இட்ட
யாயினும் இத்தேசத்துக்கு வந்திருக்கிறபடி ப
டுகொண்டு போதலே தகுதி" என்று
போய்விட்டார். போய், "நாவலரவ
தங்களைக் காணுதற்குச் சற்றும் பிரியமில்ல
யிருக்கின்றார்கள்" என்று சொன்னார். தேவ
ரை நோக்கி, "நீர் எந்தவிதமும் நாவலர் அ
வரும்படி செய்தல்வேண்டும்; நம்முடைய தே
க்கு வந்திருந்தும் நம்மைக் காணாது போவா
யானால் நமக்கு அவமானமாகுமே" என்று செ
பின்னும் மற்றை நாள் அவரிடத்திற்கு அவ்வ
ப்பிவைத்தார். அனுப்பப்பட்டவர் அவரிட
வந்து, அவரை நோக்கி, "எந்த வித்துவானு
பிரபுவாவது, இந்தச் சமஸ்தானத்துக்கு வந்தா
வர் அவர்களைக் கண்டுபோதல் நெடுங்காலமா
வழக்கம்; அப்படியிருக்கத் தாங்கள் தேவர்

ணா விருப்பமில்லையென்று சொல்லுதல், நம
திசயத்தைத் விளைக்கின்றது. மேலும் தேவர
க் காணாது போதல் வித்துவானாயிருக்குந் தங
முறையல்லவே" என்று சொன்னார். அவர்,
த்தரமாக "ஒருவரைக் காண விருப்பமில்
ன்னைக் காணும்படி சொல்லுதல் உமக்குப் புத்
. இன்னும் பிரியமில்லாத ஒன்றைச் செய்
க்த வழக்கமுமன்று" என்று சொல்லி, அவ
யனுப்பிவிட்டார். அவர், தேவரிடத்திற் போய்,
ரக் காணவேண்டுமென்று நான் பலவாறாக
ர் அவர்களுக்குச் சொன்னேன்; சொல்லியும்
ர் சம்மதித்தார்களில்லை" என்று சொன்னார்.
தேவர் அவரை நோக்கி "நீர் இன்னுமொரு
ப் போய்ப் பார்த்துவாரும்" என்றார். அவர் மற்றை
ளையில் அவரிடத்திலே வந்து பண்ணிய சம்
பினால், தேவரைக் காணுதற்கு அவருக்கு ஒரு
கருத்தில்லையெனக் கண்டார். காணவே,
வருடைய ஆண்டன்மை, வீரம், துணிபு முத
ளை யறியாதவராதலால், பொன்னுச்சாமித்
டைய அதிகாரத்தையும், அவர் அவ்வதிகாரத்
வளவு பிறர்மேற் செலுத்தக் கூடியவரென்ப
அவரைப் பகைத்துக்கொண்டு அச்சமஸ்தா
விட்டு நீங்குதல் அரிதென்பதையும், இன்னு
பயனற்ற சொற்களையுஞ் சொன்னார். அவர்

தேவருடைய அதிகாரம், செல்வாக்கு முத...
களை எனக்குச் சொல்லுதலினால் நான் அ...
க்குப் பயந்து அவரைக் காணுதற்கு உடங்...
னென்று நினைந்து, இவரெனக்குச் சொல்லு...
இவருடைய சொற்களுக்குப் பயந்து அவரை...
தற்கு உடன்படுவேனாயின், நான் எடுத்துக்...
நன்முயற்சிகளையும் இன்னோரன்னோர்களுக்...
நெகிழவிட நேரிடுமே. அவ்வாறாயின் அ...
ற்சிகளை என்மனத்தோடுபொருந்தச் சிவபெ...
டைய திருவருள்வழிநின்று, அவ்வருளையே...
கொண்டு செய்யத்தொடங்கினேனல்லனோ...
வங்களுக்கு மாளாவேனென்று நடக்குள்...
ந்து, பொன்னுச்சாமித்தேவருடைய குறை...
அவராலும் அவரைச்சார்ந்தோர்களாலும்...
த்தார் படுமிடர்களையும் வெளிதிறந்து, அவர்...
யிற்பேசிக் கண்டித்து, அவரை யனுப்பிவிட்ட...
போய் இங்கே நடந்த சமாசாரமுழுவதையும்...
க்குத் தெரிவித்து, "இந்தப்பிரகாரமாகத்...
டைய சமஸ்தானத்திலே ஒருகாலத்திலும் ஒ...
பேசத்துணியவில்லை; அப்படியிருக்கத் தங்களு...
ரோதமாகப் பேசத்துணிந்தமை ஆச்சரியத்...
க்கின்றது. ஆதலால், தங்கள் அதிகாரத்தை...
க்குக் காட்டிவிடுதலே தகுதி" என்றார். அ...
அவர் உத்தரமாக "நாவலர் அவர்கள் இத்...

ருந்தும், நம்மைக் காணவில்லையே யென்றத
ர்களுக்கு நாம் விரோதஞ்செய்யத் தலைப்பபடு
ா, எங்களுக்கு அவர்களால் சம்பவிக்கும்
பல. எப்படியெனின், நாவலர் அவர்கள்
படித்தவர்களா யிருத்தலாலும், சென்னைப
ிலுள்ள உத்தியோகத்தர்கள் பிரபுக்களா
கள் அவர்களுக்கு இட்டர்களும் சிஷர்களுந
கவிலும், நாம் அவர்களைப் பகைத்துக்கொ
பில் நமக்கும் நமது இராச்சியத்திற்குந் தீங்
ும். அல்லாமலும், தற்காலத்து வித்துவான்
ாமேல், அவர்கள சிறந்தவித்துவானும் பிரபுவு
னென்றார்கள். அன்றியும் திருவாவடுதுறை
ஆதீனங்களிலேயுள்ள பண்டாரசந்நிதிகளால்
விலக்கியங்களிலும், சைவசித்தாந்தத்திலும்
ந்தவர்களென்றும், சமயவிஷயங்களையாவது
ந விஷயங்களையாவது, தருக்க சம்பிரதாயத்
ிரசங்கித்தலில் மிகச் சிறந்தவர்களென்றும்
திக்கப்பட்டிருக்கின்றார்கள். இத் தமிழ்நா
ள மற்றை வித்துவான்கள் நம்மிடத்திலே
ம் வாங்குதற்கும், நம்மால் மதிக்கப்படுதற்
ராசையுடையராய் நம்முடையதானத்துக்கு
ருகின்றார்கள். அங்ஙனமாக, நாவலரவ
ம்மிடத்திலே சம்மானம் பெறுதற்காவது,
ப தயவைப் பெறுதற்காவது, நம்மாலே வித்

தாரென் றழைக்கப்படுதற்காவது, விருப்ட
யர்களா யிருக்கவில்லையே. ஆதலால், அவர்களு
நையுஞ் சிநேகமும் நமக்கு வேண்டுமாயின்,
நனை நாமாக வலிந்து நமது தானத்திற்கு அழை
கொள்ளுதலே புத்தி" என்று சொன்னார்.
ஙியபின்பு அவரைத் தமது அவைக்களத்துக்கு
செய்தற்கு ஒருபாயத்தை ஆலோசித்து, சில
சைவ சாஸ்திரிகளை யழைத்து அவர்களைக்கொ
"தாங்கள் சைவசமயமே மெய்ச்சமயமென்று
கங்கள் செய்து வருகின்றீர்களென்று நாங்கள்
வியுற்றேம். தாங்கள், பிரபு அவர்களுடைய
க்களத்திலேவந்து சைவசமயமே மெய்ச்சமயமெ
தாபிப்பீர்களாயின், அதனை மறுத்து, விட்டுணு
மே மெய்ச்சமயமென்று தாபிப்போம்." என்ப
லிய பொருள்களை உள்ளடக்கிய கடிதமொ
எழுதுவித்து அனுப்புவித்தார். அக்கடிதப்
டனே, "எழுத்துச் சொற்பிழைகளில்லாமற்
மெழுதத்தானும் தெரியாத நீங்கள்தாமா, சமயப
செய்யத் துணிந்தீர்கள்? உங்கள் துணிவிருந்த
நன்று! நன்று" என்று பரிகாசஞ்செய்து அனு
ட்டார். தேவர், தம்முடைய ஆலோசனைக
றேனும் சித்திபெறாமையைக் கண்டு, பசுக்கன்
றையிட்டுப் பிரிந்தாலும், தாயானது தனதுகன்
குமிடந் தேடி, அதைச்சென்றணைந்து, அதற்கு

ன்போடும் பாலைச்சுரந்து கொடுத்தல்போல, தாங்க
ளும் நாமறியாது தங்களுக்குச் செய்திருக்குங் குற்ற
ங்களைப்பொறுத்து, இது கண்டவுடன் எழுந்தருளிவ
ரல் வேண்டும் என்னும் பொருளை உள்ளடக்கிய ஒரு
கவியைப்பாடி, பின்னுந் தம்முடைய வித்துவானிடத்
திற் கொடுத்து, அனுப்பிவைத்தார். அனுப்பப்பட்டு
வந்தவர், மிகுந்த பணிவோடும் அச்சீட்டுக்கவியை
அவருக்குக்கொடுத்தார். அவரதை வாசித்த பின்பு,
நம்மை யொருவர் பலவாறு வலிந்து அழைக்க, நாம்
போகாதிருத்தல் சிறப்பன்று என்று தமது உள்ளத்
தில் நினைந்து, பின்வருங் கட்டுப்பாடுகளைப் பண்ணி
க்கொண்டு தேவரிடத்திற்குப் போதற்குச் சித்தங்
கொண்டார். அக் கட்டுப்பாடுகளாவன:—அங்கவஸ்
திரந் தரித்துக்கொண்டும், பாதகுறடிட்டுக்கொண்டும்,
தம்மோடு கூடப்போகும் எல்லாரோடும், அரமனை
யிற்சேறல்; தேவரிடத்திலே பரிசுபெறாது விடுதல்;
தேவர் எழும்பொழுதெல்லாம் எழாதிருத்தல் முத
லியவைகளே. பின்பு,தாமிருந்த மடத்தைவிட்டு நீங்
கித் தமது பரிசனங்களோடும் அரமனைக்குச்சென்
றார். நாவலர் அவர்கள் வருவார்களென்று எதிர்
பார்த்திருந்த தேவர், அவரைக்கண்ட உடனே எதிர்
கொண்டழைத்து, ஆசனத்திருத்தி, அவரோடு கல்வி
விஷயங்கள் பலவற்றைப் பேசியபின்பு பிரசங்கிக்கு

மாறு வேண்டிக்கொண்டார். அவ்வேண்டுகோளுக் கிசைந்து, "சைவசமயமே சமயம் சமயாதீதப் பழம் பொருளை" என்னும் தாயுமானசுவாமிபாடற் செய்யுளையேபீடிகையாக எடுத்துக்கொண்டு, சிவனொருவனே பிறப்பிறப்பில்லாத கடவுளென்றும், அவரை வழிபடுவோர் அனுசரிக்குஞ் சமயமாகிய சைவசமயமே மெய்ச்சமயமென்றும், விட்டுணுமதத்தை அநேக பிரபலநியாயங்களாலே கண்டித்துப், அவ்வைணவசாஸ்திரிகள் முன்னிலையிலே பிரசங்கித்தார். தேவர் அப்பிரசங்கத்தை மிகப் புகழ்ந்து, ஒருகாலத்தும் ஒரு வித்துவானும் பெறுதனவும், ஒரு வித்துவானுக்குங் கொடாதனவுமாகிய இரண்டுசாதுராவைகளைச் சமர்ப்பித்து, அவைகளை ஏற்றுக்கொள்ளுமாறு பலவாறாக வேண்டிக்கொண்டார். இது முன்னே தாஞ் செய்துகொண்ட கட்டுபாட்டுக்கு விரோதமானதென்று மறுத்தும், தேவருடைய ஆராமையையும் அன்பையுங் கண்டு ஏற்றுக்கொள்ளச் சம்மதித்தபின்பு, தேவர் அவைகளைத் தமது கைகளாலெடுத்து அவருடைய மேனியிற் சாத்திவிட்டார். அதன்பின்பு தேவர், எட்டுப்பிரதிகளிலுள்ள கடினமான நூல்களைத் தாங்கள் பரிசோதித்து உலகத்திற்குப் பயன்படும்பொருட்டு அச்சிட்டு வெளிப்படுத்தல் வேண்டுமென்றும், அதற்குத் தம்மாலாய உதவிகளைக் காலந்தோறுஞ் செய்வேமென்றும், வாக்குக்கொடுத்தார். பின்பு, அவரும் அவரோடுகூடச்

ன்றவர்களும் அரமனையைவிட்டு நீங்கி மடத்துக் போனார்கள். மற்றநாள் திருவுத்தரகோசமங்கை ப்போய்ச் சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு மீட் அம்மடத்திலே வந்திருந்தார். பின் அவ்விடத் விட்டுப் புறப்பட்டு மதுரைக்குப்போயினார். அப் து அவருக்கு வயசு சக ஆயிற்று.

மதுரையிலுள்ள திருஞானசம்பந்தசுவாமிகள் ஆதீ னத்துப் பண்டாரசந்நிதிகளும் மற்றைச் சைவப்பிரபு ளும் கேட்டுக்கொண்டபடி அந்தத்தலத்திலே சில ர் தங்கியிருக்கும்பொழுது, கோயிலுக்குநியமமாகப் ாய்ச் சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு வருவார். படி யிருக்குநாளிலே, பண்டாரசந்நிதிகள் கேட்டு காண்டபடி, மீனாட்சி அம்மை சந்நிதானத்திலே, தத்தலத்தின் பெருமையையும், அதிலெழுந்தருளி ருக்குஞ் சொக்கலிங்கமூர்த்தியுடைய பெருமையை , சைவசித்தாந்தத்தினுடையஉயர்வையும்விரித்து, ரங்களுக்கு இனிது விளங்கும்படி பிரசங்கித்தார். -னே கோயிலருச்சகர், அம்மைக்குச் சாத்தியவிபூ பிரசாதமும், பரிவட்டமும், புட்பமாலையுங்கொண் ந்து, விபூதிப்பிரசாதத்தைச் சைவப்பிரசாரகருடை கயிற் கொடுத்து, பரிவட்டத்தைச் சிரசிலேகட்டி, லையைத்தோளிலிட்டு ஆசீர்வதித்தார். பின்கோயிலி ன்றுவாத்தியமுதலிய வரிசைகளோடு மடத்துக்கு ப்பப்பட்டார். அச்சனங்கள் இப்படிப்பட்ட பிரச

ங்கத்தை முன்னொருகாலத்துங் கேட்டிராதமையால், பிரசங்கத்திலாராமையையும், அவரிலன்பும்வைத்தார்கள். இன்னும் சிலநாட்சென்றபின் தங்களிடத்திலே பிரசங்கஞ்செய்வித்தார்கள். பிரசங்கம் முடிந்தவுடன் மகாசந்நிதானம் சந்தோஷங்கொண்டு தமது திருச்செவிகளில் அணிந்திருந்த சுந்தரவேடங்களைக் கழற்றி நாவலருடைய செவிகளிலணிய, அதுகண்ட சின்னச் சந்நிதானம் தாம் அணிந்திருந்த ஆறுகட்டிகளைக் கழற்றி அவ்வாறுசெய்ய, உபயசந்நிதானங்களும் பிரசங்கத்தை இனிது பாராட்டி வரிசையோடு அநுப்பிவிட்டார்கள். சின்னச்சந்நிதானம் இலக்கணக்கொத்திலுள்ள சந்தேகங்களைக் கேட்டு நிவிர்த்திபண்ணிக்கொண்டார். அங்கிருக்கும்பொழுது திருப்பூவணம், திருவேடகம் முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு திருப்பரங்குன்றத்திற்குப்போய், அந்தத்தலத்திலிருக்கின்ற சுப்பிரமணியப்பெருமானை வணங்கிச் சிலநா ளங்கிருந்து, மீட்டும் மதுரைக்குவந்தார். பின் உபயசந்நிதானங்களிடத்திலே அநுமதிபெற்றுக்கொண்டு பிரயாணப்பட்டு வரும்போது, வழியிலேயுள்ள திருப்புத்தூர் என்னுந் தலத்தை வணங்கிக்கொண்டு, மயூரகிரியென்று ஆன்றோராற்கூறப்பட்ட குன்றக்குடிக்குவந்தார். திருவண்ணாமலையாதீனம் இந்தத் தலத்திலே ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாதீனத்துப் பண்டாரசந்நிதிகள், தமது திருமடத்திலே சிலநாளி

ரது போகும்படி கேட்டுக்கொண்டார்கள். அங்கிரு
நநாளிலே, அவருடைய காலம் சித்தாந்தவிஷயத்தி
ல் பண்டாரசந்நிதிகள் செய்யும் ஆட்சேபங்களுக்
ச் சமாதானஞ் சொல்லுதலிற் போக்கப்பட்டது.
நநாள் சைவசித்தாந்தத்தினது உயர்வையும், அதன்
றி ஒழுகுவோர் எய்தும் பயனையுங் குறித்து, அத்
நமடத்திலே பிரசங்கிக்கும்படி பண்டாரசந்நிதிக
ால் கேட்கப்பட்டுப் பிரசங்கஞ்செய்தார். அப்
பாது பண்டாரசந்நிதிகள், சாஸ்திரிகள், தம்பிரான்
ர், சைவப்பிரபுக்கள், ஓதுவார்கள் முதலிய எத்தி
த்சவருநகிரத்தையோடு வந்திருந்து கேட்டார்கள்.
ரசங்கஞ்செய்து முடிந்தபின், வேறுமடத்துப் பண்
ாரசந்நிதிகள் தாலும் அத்திருமடத்து வீதிவழியே
ல்லக்கு ஏறிகொண்டுபோனால், தமது கட்டுப்பாடு
யழிந்துபோமென்று அதற்கிடங்கொடாத பண்டார
ந்நிதிகள். பல்லக்கொன்று திட்டப்படுத்தி, சித்தா
த சைவப்பிரவர்த்தகராகிய நாவலரை அதின்மே
லேற்றி, தம்பிரான்கள், ஓதுவார்கள், சாஸ்திரிகள்
முதலானவர்கள் சூழ்ந்து செல்ல, கட்டியத்தடி, வா
ளைத்தடி, கோணத்தடி, வெள்ளிக்கைப்பந்தி முதலிய
விருதுகளும், பெரிய மேளம் முதலிய வாத்தியங்க
ளும் முன் செல்ல, பட்டணப்பிரவேசஞ் செய்வித்தா
ர்கள். பின்னும் சிலநாள் மடத்திலேயிருந்து, பண்
டார சந்நிதிகளிடத்திலே விடைபெற்றுக்கொண்டு

திருப்பெருந்துறைக்குப்போனார். அங்குள்ள திருவாவடுதுறை ஆதீனமடத்திலிருந்த கட்டளைத்தம்பிரானால் உபசரிக்கப்பட்டு, அம்மடத்திலேயிருந்து, காலந்தோறுஞ் சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு வந்தார். இங்ஙனம் நிகழுநாளிலே, இராமநாதபுரம் இராமசுவாமிப்பிள்ளை திருவிளையாடற்புராணத்திலும், வன்றொண்டச்செட்டியார் நன்னூல் விருத்தியுரையிலுந் தங்களுக்குள்ள சந்தேகங்களைக் கேட்டு,நிவிர்த்திபண்ணிக்கொண்டார்கள். அவ்விடத்தைவிட்டு நீங்கித்தொண்டைமான் புதுக்கோட்டைக்குப்போனார்.

அங்கிருக்கும்போது நாட்டுக்கோட்டைவர்த்தகர்களால் நெடுங்குடிக்கும்பாபிஷேகத்தின்பொருட்டழைக்கப்பட்டு அரிமளத்தில்வந்திருந்தபோது, அங்குள்ள ஆலயத்திலே சைவப்பிரசங்கஞ்செய்யும்படி அவர்கள் பிரார்த்தித்துக்கொண்டார்கள். அவர்கள் பிரார்த்தனைக்கிசைந்து, அங்கேபோய்ச் சிவபெருமானுடைய மகிமைகளையும், அவரை வழிபடுவோர்தரிக்குஞ் சிவசின்னங்களின் வரலாறுகளையும் விரித்துப்பேசி, முடிவிலே அச்சின்னங்களைத் தரிப்பவர்கள் மாமிசபோசனமில்லாதவரா யிருத்தல்வேண்டுமென்று பிரசங்கித்தார். அப் பிரசங்கத்தைக் கேட்டமாத்திரத்தே அநேகர் தங்கள் வீடுகளுக்குப்போனவுடன் மாமிசம் பாகம் பண்ணும் பாத்திரங்களை உடைத்துவிட்டு, அன்று

ாடக்கம் மாகேசுரபோசனஞ் செய்வித்தார்கள். பின்
நியகுடிசென்று சுவாமிதரிசனஞ்செய்து பிரசங்க
ண்ணி மீட்டும் புதுக்கோட்டைக்குவந்து, அங்கு
ாறும் புறப்பட்டு திரிசிராப்பள்ளி, திருவானைக்கா,
நசாலூர் முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு கும்
'காணம்வந்தார். அங்கே சுவாமிதரிசனஞ் செய்து
ரண்டிருக்குநாளிலே, திருக்கேச்சரத்துக்குப்போ
சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு மீட்டும் கும்ப
ாணத்தில்வந்திருந்தார்.

நாவலர் கும்பகோணம் வந்திருக்கிறார் என்ப
தக் கேள்வியுற்ற திருவாவடுதுறை யாதீனத்துப்
ண்டாரசந்நிதிகள், வித்துவான்களிற் சிறந்தவரெ
று தமிழ்நாடெங்கும் புகழ்படைத்தவரும், தேவா
பெற்ற அநேகஸ்தலங்களுக்குப் புராணஞ்செய்த
வர வித்துவானுமாகிய மீனாட்சிசுந்தரம்பிள்ளையை
ம்,சில ஓதுவார்களையும்,அவரை மடத்துக்கழைத்து
கொண்டுவரும்படி, அனுப்பிவைத்தார்கள். அனுப
்பட்டு வந்தவர்களால் அழைக்கப்பட்டு மடத்திற
்சென்று அங்கிருக்குநாளிலே, பிரசங்கங்கள் செ
துகொண்டும், சித்தாந்தநூல்களிலும், இலக்கண
இலக்கியங்களிலும் அவர்களுக்கு உள்ள சந்தேகங்க
ளைத் தீர்த்தும் வந்தார். சந்தேகநிவிர்த்தி பெற்றவர்

களுள் ஒருவரான நமசிவாயதம்பிரான் முன் சென்ன பட்டணத்திலும் போயிருந்து சிலகாலம் அவரிடத்தி லே பாடங்கேட்டவர். இப்போது அவர் மேற்படி ஆதீனத்து இரண்டாம்பட்டமாயிருக்கிறார்.

அத் திருவாவடுதுறையைவிட்டு நீங்கிப்புள்ளிருக்கு வேளூர்சென்று, சுவாமியை வணங்கிக்கொண்டு புறப் பட்டு, பரசமயகோளரியாகிய திருஞானசம்பந்தமூர்த் திநாயனார் திருவவதாரஞ்செய்தருளிய சீகாழியின் எல்லையை அடைந்தமாத்திரத்தே கைகளைச் சிரசின் மீது குவித்து அந்தத் திருப்பதியை வணங்கி, பின்பு திருக்கோயிலினுள்ளே போய், அங் கெழுந்தருளியிரு க்குந் தோணியப்பரையும், பெரியநாயகியம்மையை யுந் தரிசித்துக்கொண்டு, சிதம்பரத்துக்குப் புறப்பட் டார். சிதம்பரம்வந்து சேர்ந்தவுடன். சிலமாசங்களு க்கு முன்னே பேலைவீதியிலே விலைக்கு வாங்கப்பட் டிருந்த நிலத்திலே, இரத்தாட்சி(வரு) ஆவணிமீ° கஉ ஒரு வித்தியாசாலைகட்ட ஆரம்பித்து, அடுத்த புரட் டாசிமாசத்திலே நிறைவேற்றினார். அவ்வித்தியாசா லைக் கட்டடத்துக்கு வேண்டிய மரங்களெல்லாந் தச் சுவேலை முற்றமுடிப்பித்து இணுவில் வேங்கடாசலைய ராலே கொடுக்கப்பட்டன.

அங்கே ஐப்பசிமீ உஅஉ சுக்கிரவாரமும் சுக்கில த்திரயோதசிதிதியும், ரேவதிநக்ஷத்திரமுங்கூடி சுபதினத்திலே, விருச்சிகலக்கினத்திலே, "சிதம சைவப்பிரகாசவித்தியாசாலை" எனப் பெயர்கொ — பள் ... தாபித்தார். தில்லைவாழந்த ர்கள், பூசகர்களாகிய சைவாசாரியர்கள ாகிய யாவருந் தங்கள் தங்கள் பிள்ளைகளைக் கல்வி ற்குரு இவ்வித்தியாசாலைக்கு அனுப்பினார்கள். இவ் த்தியாசாலையிலே கருவிநூல்கள் மாத்திர மன்றிச் ய நூல்களும் படிப்பிக்கப்படுகிறபடியால், சைவச யிகள்யாவரும் வித்தியாசாலையில்மதிப்பும், அதன் கர்மேல் அன்புவைத்தார்கள். திருவாவடுது யாதீனம், தருமபுரவாதீனம், திருவண்ணாமலையா ரம் முதலிய வாதீனத்துப் பண்டாரசந்நிதிகளும், றையவிடங்களிலுள்ள சைவப்பிரபுக்களும், சிதம் தரிசனத்தின்பொருட்டு வரும்போதெல்லாம் வித் யாசாலைக்குவந்து, பிள்ளைகளைப் பரீக்ஷைசெய்து, சம ர் எனக் காணப்பட்ட பிள்ளைகளுக்கு விலையேறப் ற்ற புத்தகங்களைப் பரிசாகக்கொடுத்து, வித்தியா லையினொழுங்கையும், அதிலே படிப்பிக்கும் உபாத் யாயர்களின் திறமைகளையும், அதனைத் தாபித்தவரு டைய நன்முயற்சிகளையும் பற்றி, வித்தியாசாலையிற்கு ர பலசனங்களெதிரே பாராட்டி வியந்து பேசிப் ாவர்கள். இவ்வித்தியாசாலைக் கட்டடமுதலியவை

களைச் சிரத்தையோடே நடத்திவந்தவர், சிதம்பரவாசத்தின்பொருட்டு இதற்கு ஏறக்குறைய ௨௰-வருஷத்துக்குமுன்னே யாழ்ப்பாணத்தினின்றும் போயிருந்த காசிநாதபிள்ளை. *

அம்மாசத்திலே சுவாமி தரிசனத்தின்பொருட்டு திருநாகைக்காரோணத்திற்குப் போயிருந்த பொழுது, நாட்டுக்கோட்டை வர்த்தகர்கள் சிலர், அவரைச் சிரத்தையோடும் உபசரித்து, சிதம்பர வித்தியாசாலைக்குத் தங்களாலியன்ற பொருளுதவி செய்தார்கள். அதைவிட்டகன்று, அவருடைய சிஷ்யர்களுள் ஒருவராகிய கா. வேலுப்பிள்ளையால் அழைக்கப்பட்டு திருவேட்டக்குடிக்குப்போய், சுவாமிதரிசனஞ்

---

* இவர் யாழ்ப்பாணத்தைச்சார்ந்த பச்சிலைப்பற்றுமணியகாரனின்புத்திரர். விவாகஞ்செய்த சிலகாலத்தால் மனைவியிறக்கக்கண்டு, பிரபஞ்சவாழ்விலே அமிழ்ந்திக்கிடத்தல் புத்தியன்றென்றுகருதி; சிதம்பரம்போய், சிவபூசை எழுந்தருளப்பண்ணி, மந்திரக்கிரியாபாவனையுடன் பத்தியாய்ச் சிவபூசைபண்ணிக்கொண்டும், திரிகாலத்திலும் நியமமாக சுவாமிதரிசனஞ் செய்துகொண்டும், சுவாமிக்குப்பூமாலை கட்டிக்கொடுத்தல் முதலியதிருத்தொண்டுகளைச் செய்துகொண்டும் வந்தவர். இப்படியிருக்குங்காலத்திலே, **நாவலர்** வித்தியாசாலைதாபிக்கும்பொருட்டு சிதம்பரம்வந்தபோது, அங்கே இவருடைய சிவபத்தியைக்கண்டு, வித்தியாசாலைக்கட்டடத்தை நடத்தும்பொருட்டு இவரிடத்திலே பணத்தை ஒப்பித்து, விரைவில் முடிக்கும்படி கற்பித்தார். அத

துகொண்டு தம்மோடுகூடச் சென்றவர்களுக்கு
டகொடுத்த பின்பு, அந்தத்தலத்தைவிட்டு நீங்கித்
க்கடலூர்சென்று, அங்கும் சுவாமிதரிசனஞ்செய்து
ண்டு மீட்டுஞ் சிதம்பரத்துக்குவந்தார்.

தம்பராலய பூசகர்களுள்ளே சிலர், சிவாகமங்
நிந்தித்து, அவைகளிற்கூறப்படுந் தீக்ஷைகளி
யாதொருபயனில்லையென்றும், அக்கருத்துப்ப
டைய நாங்கள் அவைகளைப் பிரமாணமெனக்கொ
ாதும் தீக்ஷைகளைப்பெறாதும் இருக்கின்றோமெ
ம், சிதம்பராலயகிரியைகள் முழுதும் வைதிககி
யைகளேயென்றுஞ் சொல்லிக்கொண்டு திரிந்தார்

லை ஏற்றச் சிரத்தையோடும் விரைவிலே நடத்திமுடித்
தமைகண்டு, சிதம்பரம்விட்டுச் சென்னபட்டணம்போ
கும்போது, அவரையே வித்தியாசாலைக்கு அத்தியட்ச
ராக நியமித்துவிட்டுப்போனார். சிதம்பரத்திலே வெகு
காலம் வாசஞ்செய்தவராதலானும், சிவபத்தியிற்சிறந்
தவராதலானும், யாவரையும் வசீகரிக்கத்தக்க நற்கு
ணமிருந்தமையானும், வித்தியாசாலையின் உபாத்தியா
யர்களும் பிள்ளைகளும் அவருடைய கட்டளைகட் கமை
ந்து நடந்தார்கள். **நாவலர்** சுக்கில௵ யாழ்ப்பாணம்
வரும்போது அவருடன் கூடிக்கொண்டுவந்து, அவரு
றைவிடத்திலே அவருக்கு அநேக உதவிகளைச் செய்து
கொண்டிருக்குங்காலத்திலே, சுரத்தாற்பீடிக்கப்பட்டு
ஆறுநாட் சுகவீனமாயிருந்து, பிரமாதி௵ வைகாசி௴
சிவபதமடைந்தார். அவருடைய அபரக்கிரியைகள்
யாவும் **நாவலரால்** சிறப்பாக நடப்பிக்கப்பட்டன.

கள். அபேதனதிலகர்களாகிய சிலர் இவர்களுடைய சொல்லையே மெய்யென நம்பியிருந்தார்கள். அந்நிந்தைகளைக் கண்டுங் கேள்விப்பட்டு மறிந்தமாத்திரத்தே சிவாகம நிந்தைசெய்வோரைக் கண்டித்தலே அவைகளையருளிச்செய்த சிவபிரானுடையகட்டளையென்று தெளிந்து, அப்பூசகர்கள் அநுட்டிக்கும் வைதிகக்கிரியைகளைச் சொல்லும் வேதம் பொதுநூலென்றும், முத்தியின்பத்தைக் கொடுக்கமாட்டாதென்றும், அவர்கள் நிந்திக்கின்ற சிவதீக்ஷைகளைப்பற்றிப் பேசுஞ்சிவாகமமே சிறப்புநூலென்றும், அதுவே பதிபசுபாசமென்னுந் திரிபதார்த்தலட்சணங்களைப்பற்றிச் சொல்வதென்றும், பரார்த்தபூசைக்கு விதிகள் அதிற்றானே சொல்லப்பட்டிருக்கின்றனவென்றும், அச்சிவாகமத்திற் பேசப்படுகின்றனவாகிய தீக்ஷைகளே எத்தீக்ஷையினுஞ் சிறந்தவையென்றும், அவைகளே பாசம் மூன்றையுந் தவிர்ப்பனவென்றும், சிதம்பராலயக்கிரியைகளின்பொருட்டு ஆதிகாலத்திலே தில்லைவனத்திலே சிவபெருமான் தமது அருட்சத்தியாகிய சிவகாமியம்மையார் காணத் திருநிருத்தஞ்செய்யத் தரிசிக்கப்பெற்றவராகிய பதஞ்சலிமகாமுனிவர் சிவாகம முறைப்படி ஒருபத்ததி செய்தருளினாரென்றும், ஆதியிலேயிருந்த தில்லைவாழந்தணர்கள் சிவதீக்ஷைகளைப்பெற்றிருந்தார்களென்றும், இப்போதுள்ளவர்கள் சிவாகம அறிவுஞ் சிவதீக்ஷையுமில்லாது பூசைசெ

சிவாகமத்துக்குஞ் சிவாகமத்தைச் சிரமேற்கொ
முனிவர்களுடைய அனுஷ்டானத்துக்கும் வி
மென்றும், மார்கழிமீ ரதோற்சவதினத்திற்கு
றினமாகிய உற்சவதினத்திலே, வெகுசனங்க
ரே, சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலையி
அதிபிரபல நியாயங்களோடும் எடுத்துக்காட்டி,
ர்களாற் சொல்லியவைக ளெல்லாவற்றையுங்
டித்துப பிரசங்கித்தார். அந்தஸ்தலத்திலே சில
ருந்து; பின்சென்னபட்டணம் போனார்.

நம்பராலய பூசகர்களுடைய சிவநிந்தை, 'சிவாக
தை, சிவனடியார்நிந்தையெல்லா மொருபுறத்தி
. கருங்குழி இராமலிங்கபிள்ளை யென்னு மொரு
ரஞ் சிவானுபூதிபெற்றவரென்றும், ஓதாதுணர்
ரென்று தம்மைச்சொல்லியும், அம்மட்டிலதில்
உள்ளபடி சிவானுபூதிச் செல்வர்களாகிய
ஞான சம்பந்தமூர்த்திநாயனார், திருநாவுக்கரசுநா
, சுந்தரமூர்த்திநாயனார், மாணிக்கவாசகசுவாமி
முதலிய உண்மைநாயன்மார்கள் சிவானுக்கிர
தம்பெற்று, அவ்வனுக்கிரகத்தினாலே அவர்கள
:செய்த அருட்பாக்களைத் தள்ளித் தாஞ் செய்து
ட பாக்களை ஆன்மார்த்தபூசை பரார்த்தபூசை
யும் உற்சவங்களிலும் சந்தியாகாலங்களிலும்
னேந்திரர்களாகியசிலரைப்பாராயணம்பண்ணு

ம்படிசெய்தும், தம்மைத் திருவருட்பிரகாசவள்ளலெ ன்றும், தாஞ்செய்த பாக்களை அருட்பாக்களென்று நாமாகச்சொல்லியும், பிறரைக்கொண்டுசொல்லுவி த்தும், அம்மட்டில்நில்லாது மாணிக்கவாசகசுவாமி கள் அருளிச்செய்த திருவாசகம், திருக்கோவையார் என்னு மிரண்டையும் சபாநாயகர் தமது அருமைத் திருக்கரங்களால் எழுதியதுபோல வந்து எழுதுவா ரென்றும், அவைகளையெழுதும் பொருட்டுப் பொய் யேனும் பொன்னெழுத்தாணியுந் தாம்செய்த ரசவா தத்திலே பெற்றுக்கொண்ட பொன்னிலே செய் தல்வேண்டுமென்றும், அம்மட்டோ அத்திரவியத்தை க்கொண்டுத் தானே பார்பதிபுரமெனப் பெயர்பெற்ற ஒரு ஆலயமும் அதனுள்ளே ஒருகனகசபையுங் கட்டி சசிதம்பரசபாநாயகரை அதிலே எல்லாருங்காண நடு ப்பகலில் எழுந்தருளிவந்து நின்று திருநடம்பண்ணும் படி செய்வேமென்றும், அம்மட்டில்நில்லாது செத் தவர்களை உயிர்ப்பிப்போமென்றும், புத்திரரில்லாதவ ர்களுக்குப் புத்திரபாக்கியங் கொடுப்போமென்றும், குருடர், செவிடர் முதலானவர்களுடைய குறைவு பாடுகளை நீக்குவோமென்றும், பசித்தவர்களெல்லா ருக்கும் அன்னங்கொடுப்போமென்றும், தண்ணீரா ல் விளக்கெரித்தோமென்றும், பிரமவிட்டுணுக்களா லுந் தேடி அறிதற்கரிய கடவுள் பருக்கைக்கற்

றைந்த சென்னபட்டணத்தெருவிலே அர்த்த
ிரியிலே நடந்துவந்து தமது வீட்டுக்கதவைத்
டித்து, பகனே! இதைவாங்கிக்கொள் என்று தம
ான்று தந்தாரென்றும், அம்பட்டிலில்லாது
ிக்கவாசகசுவாமிகள் சிதம்பரத்திலே சபாநாயக
ன் இரண்டறக்கலந்ததுபோலத் தாமுங்கலப்போ
ன்றும், இன்னும் இவைபோலப் பல பிரயோசன
) வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு திரிவா
ர்.

ராமலிங்கபிள்ளை தமக்கு இட்டுக்கொண்ட வ்
ப்பெயர்களையாவது, நாமெவ்வளவோ அற்புதங்
ச்செய்தோம் செய்கின்றோம் செய்வோமென்று
ல்லதையாவது, தம்முடைய பாக்கள் மிகச்சிற
வையென்பதையாவது, சிவபெருமான் சாக்கிரத்
ு தம்மோடுகலந்து பேசுகின்றார் என்பதையா
பொறுப்பினும், சிவஞானச்செல்வர்களாகிய சம
ாரியர்கள் திருவாய்மலர்ந்தருளிய அருட்பாக்களை
ந்தித் தமது பாக்களைப் பாராயணம்பண்ணுவித்
தும், தம்மை அச்செல்வர்களோடு சமத்துவமு
யர் என்பதையும், தமது பாக்கள் அவர்களுடைய
களினுஞ் சிறந்தவையென்பதையும் ஒருவாற்று
சகிக்கலாற்றாத நாவலர், பலசனங்களெதிரே,
பாரதிருவாசக முதலியவை பசுகரண நீங்கிச் சிவ
ரம்பெற்ற நாயன்மார்களாலே அருளிச்செய்யப்

பட்டணமென்றும், இவைகளை சிவாலய நித்திய நைமித்தியங்களிலும் சந்தியாவந்தனம் சிவபூசை முதலியவைகளிலும் ஓதத் தகுவனவென்றும், இவைகளே வேதத்திலும்பார்க்கத் தமக்கு அதிக பிரீதியுள்ளவைகளென்று எமது பிதாவாகிய சிவபெருமான் தமது அருட்சத்தியும் நமது உலகமாதாவுமாகிய உமாதேவியார் கேட்கும்படி திருவாய்மலர்ந்தருளிய சிவரகசியத்திலே கூறப்பட்டிருக்கின்றன என்பவை முதலிய பல முக்கியபிரமாணங்களைக் காட்டிப் பிரசங்கித்தார். அப்பிரசங்கங்களுக்குப் பின்பு பிள்ளையின மாணாக்கர்கள் சிலர் வேண்டியவாறே அவருக்கு விரோதமாகத் தூஷித்தார்கள். தூஷித்தும், தமது மனச்சான்றுக்கு விரோதமில்லாமலும் பரங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமானின் திருவருளையே முன்னிட்டு, அவரால் அருளிச்செய்யப்பட்ட வேதசிவாகமங்களின் விதிவிலக்குகளையும், அவருடைய மெய்யடியாரின் மகிமைகளையும் பேசினாராதலால், அவர்களுடைய தூஷணம் அவருக்கு ஒரு தீமையையுஞ் செய்திலது. அப்போது அவருக்கு வயசு ௪௨ ஆயிற்று.

சைவப்பிரகாச வித்தியாசாலைகளுக்கு மூன்றும் பாலபாடம் அவசியம் வேண்டியிருந்தபடியால், வேதசிவாகமங்களிலும், இதிகாசபுராணங்களிலும், நீதிநூல்களிலும் உள்ளவைகளைத் திரட்டி வசனரூபமாகவெழுதி, இறுதியிலே ஔவையாருளிச்செய்த

யாக்குண்டாம் நல்வழியையும், சிவப்பிரகாசசுவாமி கள் அருளிச்செய்த நன்னெறியையும் உரையுடன் சேர்த்து அச்சிட்டார். அதன்பின் பெரியபுராணம் சூசனத்தோடும் கந்தபுராணம் திருவிளையாடற்புராண மும் வசனரூபமாகவும் அச்சிற் பதிப்பித்துக்கொண் டிருந்தார். அங்ஙனம் வேலை நடந்துவருங்காலத்திலே, பெரியபுராணசூசனத்தில் அதிக கவனஞ் செலுத்திவ ந்தபடியால், சரீரமெலிவும், நித்திரையின்மையும், அன்னத்துவேஷமும் உண்டுபட்டன. அவ்வேதுவி னால் அவைமுடியாமல் இன்னுங் குறைவேலையாயிருக் கின்றன. நாலைந்துமாசம் அவ்வேலைகளைச்செய்யா திருந்து, தமக்கு உண்டுபட்ட நோய்களைத் தீர்த்துக் கொண்டு, பின்பு பொன்னுச்சாமித்தேவருடைய வே ண்டுகோளின்படி சேதுபுராணத்தைப் பரிசோதித்து அட்சய௵ புரட்டாதிமீ த்திலும், திருவாவடுதுறைச் சிவஞானமுனிவரருளிச்செய்த இலக்கணவிளக் கச்சூறாவளி, தொல்காப்பியச்சூத்திரவிருத்தி என்னு மிரண்டையும், மேற்படி ஆதீனத்து சுவாமிநாததேசி கர் அருளிச்செய்த இலக்கணக்கொத்தையும் இப் போது எழுந்தருளியிருக்கும் மகாசந்நிதானம் சுப் பிரமணியதேசிகரது கட்டளைப்படி பரிசோதித்து, அட்சய௵ கார்த்திகைமாசத்திலும் அச்சிட்டு வெ ளிப்படுத்தினார். இன்னும் அம்மாசத்திலே ஏட்டுப் பிரதியிலுள்ள கந்தபுராணத்தையும், வேறநேகபுத்த

கங்களையும் பரிசோதித்தும், நூதனமாக வியற்றியு வெளிப்படுத்தியபின்பு, அடுத்த மார்கழிமாசத்தி ஆர்த்திரா தரிசனத்தின்பொருட்டுச் சிதம்பரத்துக் வந்தார். அப்போது அத்தேசமெங்கும் மகாமா யுண்டுபட்டதால், அநேகாயிரக் கணக்கானசனங்க ஒவ்வொருநாளும் இறப்பாராயினார்கள். இப்படியி க்கவும் பகற்காலத்திலே தமது வித்தியாசாலையி போயிருந்து, பயப்படவேண்டாமென்று சனங்க க்குத் தைரியஞ்சொல்லுதலிலும், இராக்காலத்தி தமது உறைவிடத்தில் வருவோர்களுக்குக் கட ளுடைய மகிமையையெடுத்துப் பிரசங்கிப்பதிலும் பொ ழுதுபோக்குவார். அப்போது அவருக்கு வயசு ஆயிற்று.

பின்பு, சென்னபட்டணம்போய் வசிக்குங்காலத்தி லே அங்குள்ள சிவபத்திமான்களிற் பலர், சைவப்பிர சங்கஞ் செய்யும்படி பிரார்த்தித்துக்கொண்டார்கள் அவர்கள் பிரார்த்தனைக்குடன்பட்டு, தமதுறைவிடத் திலே சுக்கிரவாரந்தோறுஞ் சைவப்பிரசங்கங்கள் செய்தார். அப் பிரசங்கங்கள் எல்லாருக்கும் பயன்பட் டனவென்பது சத்தியம். அடுத்த வருஷமாகிய பிர வவருஷத்திலே சில புத்தகங்கள் அச்சிட்டு வெளிப் படுத்தினார். இவ்வருஷத்திலே யாழ்ப்பாணத்திலு ள்ள சைவப்பிரகாசவித்தியாசாலையின் முதலுபாத்தி யாயராயிருந்த மு. தில்லைநாதபிள்ளை தமது நாற்பத்

நான்காம் வயதாகிய பிரபவஹ ஆனிமீ தேகவி யோகமானார். அவருடைய இடத்துக்கு மா. வைத் தியலிங்கபிள்ளை நியமிக்கப்பட்டார். சென்னபட்ட ணத்திலுள்ள சிவபத்தியாளர்களிற் சிலர், தொண்டை நாட்டிலுள்ள தேவாரப்பெற்ற சிவஸ்தலங்கள் சில மாயிருத்தலால், அவைகளை ஜீர்ணோத்தாரணஞ் செய் யும்பொருட்டு, பொருள்சேர்க்கவிரும்பி, பிரபவஹ மார்கழிமீ ௨௨௳ சென்னபட்டணத்திலே, பெத்து நாயக்கன்பேட்டையிலே, சுப்பிரமணியமுதலியார் தெ ருவிலே, கோ. வி. அய்யாசாமிமுதலியார் வீட்டிலே, ஒரு சபைகூட்டி, அதற்குத் திருத்தொண்டைநாட்டுப் பதிபுண்ணியபரிபாலனசபையெனப் பெயர்தந்து, அச் சபைக்கு நாவலரை அக்கிராசனாதிபதியாய் வீற்றி ருக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். அச்சபைக்கு அக்கிராசனாதிபதியாயிருந்து சபையின் விருத்தாந்த ங்கள் வாசிக்கப்பட்டபின்பு, அச் சிவபுண்ணியத்தின் பெருமையைச் சபையார்களுக்குப் புலப்படும்பொரு ட்டுப் பிரபல நியாயங்களோடும் எடுத்துப் பிரசங் கித்தார்.

அப் பிரசங்கங்கள் வருமாறு:—

"கனம்பொருந்திய சைவசமயப்பிரபுக்களே!

தங்கள் தங்கள் சமயம் இது எனவும், அதற்குரிய கடவுள் இவர் எனவும், அக்கடவுள் ஆன்மாக்கள் செ

ய்யும் வழிபாட்டைக்கொண்டருளும் முறைமை இது எனவும், அவரை ஆன்மாக்கள் வழிபடும் முறைமை இது எனவும், அறிதலும், அறிந்தபடி அநுட்டித்த லும், எல்லாச்சமயத்தாருக்குங் கடனாகும். ஆதலி னால் நம்முடைய சமயக்கிரமத்தை அறிதலும், அறி ந்தபடி அநுட்டித்தலும், சைவசமயிகளாகிய நமக் குக் கடனேயே.

நாமெல்லாம சைவர்கள். சைவர் என்னுஞ் சொ ற்குச் சிவனை வழிபடுவோர் என்பது பொருள். ஆக வே, சிவனை வழிபடுவோர் யாவர். அவரெல்லாஞ் சைவரெனப்படுவர். சைவர் ஆதிசைவரும், மகா சைவரும், அநுசைவரும், அவாந்தரசைவரும், பிரவ ரசைவரும், அந்தியசைவரும் என அறுவகைப்படுவர். அவர்களுள்ளே ஆதிசைவராவார் அநாதிசைவராகிய சதாசிவமூர்த்தியுடைய ஐந்துதிருமுகங்களினுந் தீக்ஷி க்கப்பட்ட பஞ்சருஷிகோத்திரத்துச் சிவப்பிராமணர். மகாசைவராவார் வைதிகப்பிராமணருள்ளே சிவதீ க்ஷைபெற்றவர். அநுசைவராவார் க்ஷத்திரியருள்ளும் வைசியருள்ளும் சிவதீக்ஷைபெற்றவர். அவாந்தர சைவராவார் சூத்திரருள்ளே சிவதீக்ஷைபெற்றவர். பிரவரசைவராவார் அறுவகையநுலோமருள்ளும் சிவ தீக்ஷைபெற்றவர். ஒழிந்தசாதியா ரெல்லாருள்ளும் சிவபெருமானை வழிபடுவோர் அந்தியசைவரெனப்ப

டுவர். இதனாற் பிராமணர் முதற் புலையரீறாகிய எல்லாச்சாதியாரும் சிவபெருமானை வழிபடுதற்கு உரியர்கள் என்பது பெறப்பட்டது. ஆயினும், வழிபடற்கிரியைகள் வருணந்தோறும் சில வேறுபாடுடையனவாம்.

சிவபெருமான் புறத்தே சிவலிங்க முதலிய திருமேனியும் தமது மெய்யடியாருடைய திருவேடமும் இடமாகக்கொண்டு நின்றும், அகத்தே உயிர் இடமாகக் கொண்டு நின்றும், ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டைக்கொண்டருளுவர். லிங்க என்னும் தாது சித்திரித்தல் எனப் பொருள்படுதலால், படைத்தல் காத்தல் முதலியவைகளினாலே உலகத்தைச் சித்திரிப்பதாகிய சிவத்தினுடைய பிரபாவமே இலிங்கம் எனப்படும். அவ்விலிங்கத்தினது விளக்கத்துக்கு இடமாகிய வாணம் சைலம் முதலியவைகளும் உபசாரத்தினால் இலிங்கம் எனப்படும்.

இலிங்கம் ஆன்மார்த்தலிங்கம் எனவும் பரார்த்தலிங்கம் எனவும் இரண்டுவகைப்படும். அவைகளுள் ஆன்மார்த்தலிங்கமாவது ஆசாரியரிடத்தே எழுந்தருளப்பண்ணிக்கொண்டு மரணபரியந்தம் தன்பொருட்டுப் பூசிக்கப்படும் இலிங்கமாம். இது இட்டலிங்கம் எனவும் பெயர்பெறும். பரார்த்தலிங்கமாவது பிறர்பொருட்டுச் சர்வசங்காரகாலமளவும் பூசிக்கப்

படும் இலிங்கமாம். அதுவே திருக்கோயிலுள்ளிரு க்கும் இலிங்கம். அது சுயம்பு, காணம், தைவிகம், ஆரிடம், மானுடம் என ஐவகைப்படும். சிவலிங்கம அசைவில்லாததாதலினாலே தாவரம் எனப்படும்.

சைவசமயத்தை அடைந்தவர் சிவபெருமானுடைய திருவடியைச் சேர்தற்குரியமார்க்கம் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்குவகைப்படும். அவைக ளுள்ளே, சரியையாவது புறத்தொழிலினாலே உருவத் திருமேனியைநோக்கிச் செய்யும்வழிபாடு. கிரியை யாவது புறத்தொழில் அகத்தொழில் என்னும் இர ண்டினாலும் அருவுருவத் திருமேனியை நோக்கிச்செ ய்யும் வழிபாடு. யோகமாவது அகத்தொழிலினாலே அருவத் திருமேனியை நோக்கிச்செய்யும் வழிபாடு. ஞானமாவது புறத்தொழில் அகத்தொழில் என்னும் இரண்டுமில்லாமல் அறிவுத்தொழின் மாத்திரத்தினா லே அம் மூன்றுதிருமேனிக்கும் மேலாய் அகண்டா கார நித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பாய் நிறை ந்து நிற்கின்ற சிவத்தினிடத்தேசெய்யும் வழிபாடு. இந்த நான்குமார்க்கத்தில் ஒழுகுவோர்களே மெய்ய டியார்கள். இவ்வடியார் திருமேனி அசைவுடையதாத லாற் சங்கமம் எனப்படும்.

சிவபெருமான், எங்கும் வியாபகமாய்நிற்பினும், சிவலிங்கமுதலிய திருமேனியும் மெய்யடியார் திரு

வேடமுமாகிய இவ்விரண்டிடத்துமாத்திரமே தயி ரில் நெய்போல விளங்கிநிற்பர்; மற்றையிடங்களினெ லலாம் பாலில் நெய்போல வெளிப்படாதுநிற்பர். ஆதலினாலே, சைவசமயிகளாகிய நாமெல்லாம் நமது பரமபதியாகிய சிவபெருமானை இலிங்கமும் சங்கமமு மாகிய இவ்விரண்டிடத்தும் விதிப்படி சிரத்தையோடு வழிபடல்வேண்டும்.

இவ்வழிபாடு மேற்கூறிய சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்குமார்க்கத்தாராலும் செயற் பாலதேயாம். மலநீங்கிய ஞானிகளும், பூர்வமலவா சனை தாக்காமைப்பொருட்டும், சிவானந்தம் மேன் மேல் வளர்தற்பொருட்டும், சிவலிங்கமுதலிய திரு மேனியையும், மெய்யடியார் திருவேடத்தையும், வழி படல்வேண்டும் என்று சிவஞானபோதமுதலிய ஞான நூல்களில் உணர்த்தப்பட்டது. நித்திரைசெய்வோர் கையிற் பொருள் அவரறியாதுதானே நீங்குதல்போ லச் சிவஞானிகளுக்குச் சரியாதிகள் தாமே தவிர்வன வன்றி அவர் அவைகளைத் தவிர்ப்பாரல்லர். சரி யாதிகளைத் தாமே விடுத்தவர் நரகத்தாழ்வர். இவ் வுண்மை உமாபதிசிவாசாரியர் அருளிச்செய்த சங்க ற்பநிராகரணமுதலிய உண்மைநூல்களினாலே துணி யப்படும்.

ஒரு பிரபுவினுடைய பணிகளுள்ளே உட்டொழில் செய்வார் புறத்தொழிற்கும் உரியராவர்; புறத்தொழில்செய்வார் உட்டொழிற்கு உரியராகார். அதுபோலவே சிவபெருமானுடைய உண்மைப்பணிகளாகிய ஞானமுதலிய நான்கனுள்ளும் மேற்பணிசெய்வார் கீழ்ப்பணிக்கும் உரியராவர்; கீழ்ப்பணிசெய்வார் மேற்பணிக்கு உரியராகார். ஆதலினாலே, ஞானி ஞானமுதலிய நான்கினுக்கும் உரியன்; யோகி யோகமுதலிய மூன்றினுக்கும் உரியன்; கிரியாவான் கிரியைமுதலிய இரண்டற்குமுரியன்; சரியாவான் சரியையொன்றற்கே உரியன் என்பது பெறப்படும். இவ்வாறே சிவஞானசித்தியாரினும் செப்பப்பட்டது. இதனாலே திருக்கோயிலுள்ளிருக்கும் சிவலிங்கப்பெருமானை வழிபடல் ஞானிமுதலிய நான்குதிறத்தாருக்கும் இன்றியமையாக்கடனேயாம் என்பது துணியப்பட்டது. சிவாநுபூதிப் பெருவாழ்வுடையர்களாகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்திநாயனார், மாணிக்கவாசகசுவாமிகள் என்னுஞ் சமயாசாரியர்கள் நால்வருந் தலந்தோறுஞ்சென்று சிவலிங்கப்பெருமானை வணங்கித் திருப்பதிகஞ்செய்தமையே இதற்குச் சான்றாகும். இது ஞானத்திற் சரியை எனப்படும். அது சதமணிக்கோவையிலே

வெண்பா.

"வன்றொண்டர் சம்பந்தர் வாகீசர் மற்றுமுளோர்
பொன்றிய ஞானம்புகுந் திருக்கச்—சென்று
பதிதோறும் பாடிப்பணியுமதென் மாட
மதிதோயருட்டுறையாய் வந்து."

என்னும் வினாவாலும் "ஞானத்திற் சரியை" என்னும் விடையாலும் அறிக.

சிவலிங்கவழிபாடு நான்குபாதத்தாராலும் செய்யப் படுமாயினும், அது அவரவர் கருத்துவகையால் வேறுபடுமட்டிலே, அவருக்குச் சிவபெருமான் அருள் செய்யும் முறைமையும் வேறுபடும். அதனைச் சிறிது சொல்வாம். சரியையாளர்கள் பகுத்தறிதலில்லாது சிவலிங்கமுதலிய திருமேனியே சிவமெனக்கண்டு வழிபடுவார்கள்; அவர்களுக்குச் சிவபெருமான் அங்கே வெளிப்படாது நின்று அருள்செய்வர். கிரியையாளர்கள் அருவப்பொருளாகிய சிவபிரான் ஈசானமுதலிய மந்திரங்களினாலே சிவலிங்கமுதலிய திருவுருக் கொண்டார் என்று தெளிந்து மந்திரநியாசத்தினால் வழிபடுவார்கள்; யோகிகள் யோகிகளுடைய இருதயத்தேயிருக்கும் சிவபிரான் இந்தத் திருமேனியிலும் இருந்து பூசைகொண்டருள்வர் என்று தெளிந்து சாத்தியமந்திரங்களினால் வழிபடுவார்கள்; இவ்விருதிறத்தார்களுக்கும் சிவபெருமான் கடைந்தபோது தோன்

றும் அக்கினியும் கறந்தபோதுதோன்றும் பாலும் போல அவ்வம்மந்திரங்களினாலே அவ்வவர் விரும்பியவடிவமாய் அவ்வத்திருமேனிகளில் அவ்வப்போது தோன்றிநின்று அருள்செய்வர். ஞானிகள் இடமுந்நிறந்தாரும்போல ஓரிடமாகக்குறியாது அன்புமாத்திரத்தால் அங்கே வழிபடுவர்கள். அவர்களுக்குச் சிவபெருமான் கன்றைநினைந்த தலையீற்றுப்பசுவின் முலைப்பால்போலக் கருணைமிகுதியினாலே அவ்வன்பே தாமாகி எப்பொழுதும் வெளிப்பட்டு நின்று அங்கே அருள்செய்வர்.

"ஆரணவுருவார்தில்லையம்பலமெய்தப்பெற்றோ
ரோருணர்வாவரென்றுமொன்றலரொன்றாரல்லர்
காரணராகாரொத்தகருத்திலர்கருத்தலின்பப்
பூரணரவர்கள்வாழும்புவனமும்பொதுவாமன்றே."

என்னும் கோயிற்புராணத் திருவிருத்தத்தினாலே சிவாநுபூதியான்கள் எழுந்தருளியிருக்குந் தலமுஞ் சிதம்பரமேயென்று அறிவுறுத்தப்பட்டது. அங்ஙனமாகவும், சிவாநுபூதிமான்களாகிய சமயாசாரியர்கள் தலந்தோறுஞ்சென்று சிவலிங்கவழிபாடு செய்தாராகளாயின், சரியையாளர் கிரியையாளர்களாகிய நம்போலிகட்குப் பேசவேண்டுவதென்னை! இங்ஙனமாகவும், தற்காலத்திலே சிலர் பரஞானமாகிய அநுபவஞானத்தை யுடையாரும், அபரஞானமாகிய சாத்திரஞானத்

தையுங் குருசந்நிதியிற் கிரமமாகப்பெறுதும், தங்களை ஞானிகளெனத் தங்கள் வாயினாலே பாராட்டிச் சரியை கிரியைகளை இகழ்ந்து எரிவாய் நரகத்துக்கு இரையாகுகின்றார்கள். அது நிற்க.

ஞானத்தின் மிக்க முத்திநெறியும் ஞானாசாரியரின் மிக்க ஆசாரியரும் இல்லாமையாலும், ஞானாசாரியர்களுள்ளும் மிக மேலாயினோர்கள் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் முதலிய சமயகுரவர்களே யாதலாலும், காமுகனாயினோன் தன்னைப் புகழ்ந்து தன்னாலுரைக்கப்பட்ட வாக்கினும் தன் காமக்கிழத்தியர்வாய்த் தோன்றியவாக்கில் விருப்பமிக்குடையனாய் அதனால் வசீகரிக்கப்படுமாறுபோலச் சிவபெருமான் தம்மைப் புகழ்ந்து தம்மாலுரைக்கப்பட்ட வேதத்தினும் தம மெய்யன்பர்களாகிய சமயாசாரியர்கள் வாய்த்தோன்றிய தேவார திருவாசகங்களில் விருப்பமிக்குடையராய் அவைகளால் வசீகரிக்கப்படுவராதலாலும், அவர்களால் வணங்கப்பட்டு அவர்கள் திருப்பதிகங்களைப் பெற்ற சிவஸ்தலங்களே உத்தமோத்தம சிவஸ்தலங்களாகும்.

"ஆதலினால், சைவசமயிகளாகிய நாமெல்லாம், அந்தச் சிவஸ்தலங்களை விதிப்படி சிரத்தையோடு வழிபடுதலும், அவைகளுள்ளே சிலமாயினவைகளை ஜீர்ணோத்தாரஞ்செய்தலும், நித்திய பூசைமுதலியவை

கள் இல்லாத ஸ்தலங்களிலே நித்தியபூசை முதலியவை நடத்துவித்தலுமே உத்தமோத்தம சிவபுண்ணியங்கள்.

திருக்கோயின்முதலியவை அழிந்தால், அவைகளை முன்போலச் செய்தவர் பெறும்பயன் அவைகளை முதற் செய்தவர்கள் பெற்ற பயனிலும் ஆயிரமடங் கதிகமாகும். திருக்கோயின் முதலியவைகளிலே ஒருறுப்புக் கிலமாயின், அதனை முன்போலச்செய்தவர் பெறும் பயன் முன்செய்தவர் பெற்றபயனிலும் நூறுமடங்கதிகமாகும்.

இதற்குப்பிரமாணம்:—

சிவபுண்ணியத்தெளிவு.

"மாதவர்மடங்களாதிவரதன்மந்திரங்களாதி
நாதமாமிலிங்கமாதிநளினபுட்கரிணியாதி
சேதமுற்றிடின்முன்போலச்செய்கின்றோர்க்குறும்பலந்தா
னோதுமுன்செய்தோர்தம்மிலாயிரங்குணிதமாகும்.

உரைத்திடுமடங்களாதியுறுப்பினிற்சிதையிலொன்றற்
றெரித்திடுமுளறேயநன்றாத்தெளிவுறச்செய்கின்றோர்க்கு[ய்
வரைத்திடின்முன்னஞ்செய்தோர்மருவிடும்பலத்தின்மேலா
விரித்திடும்பலமுநூறுமடங்கெனவிளம்புமாதோ."

சிவாலயங்களிலே நித்தியபூசை முதலியவை காலந் தோறுந் தவறாமற் சிரத்தையோடு விதிப்படி செய்

படுமாயின், உலகத்திலே காலந்தோறும் மழை தவறாது பெய்யும்; நென்முதலாகிய வளங்கள் பெருகும், ஆரோக்கியம் உண்டாகும்; அரசநீதி நடக்கும்: நித்திய பூசைமுதலியவைகள் சிரத்தையோடு விதிப்படி செய்யப்படாதொழியின், உலகத்திலே மழையின்மையும் பஞ்சமும் மசூரிகை விஷூசிமுதலிய கொடுநோய்களும் கன்னம் களவுமுதலிய தீத்தொழில்களுமே விருத்தியாகும்.

இதற்குப்பிரமாணம்:—

திருமந்திரம்.

"ஆற்றருநோய்மிகுமவனிமழைகுன்றும்
போற்றருமன்னரும்போர்வலிகுன்றுவர்
கூற்றுதைத்தான்றிருக்கோயில்களானவை
சாற்றியபூசைகடப்பிடிற்றானே.

முன்னவனார்கோயிற்பூசைகண்முட்டிடின்
மன்னர்க்குத்தீங்குளவாரிவளங்குன்றுங்
கன்னங்களவுமிகுத்திடுங்காசினிக்
கென்னருணந்தியெடுத்துரைத்தானே."

கிலமாயுள்ள ஸ்தலங்களை ஜீர்ணோத்தாரஞ்செய்தற்கும் நித்திய பூசைமுதலியவை இல்லாத ஸ்தலங்களிலே நித்திய பூசைமுதலியவை நடத்துதற்கும் பெரும்பொருள் வேண்டுமாதலாலும், தனித்தாயினும்

சிலர்மாத்திரம் கூடியாயினும இவைகளை முடித்தல் இயலாமையாலும், சைவசமயிகளாகிய நம்மவர்களெல்லாரும் ஒற்றுமையுடையவர்களாய் ஒருங்கு கூடல் வேண்டும். அப்படிக் கூடாதவழி இக்கருத்துச் சித்திபெறாது. தமிழர்களாகிய நம்மவர்கள் யாதாயினும ஒருகருமத்தை நடத்துதற்கு ஒருங்குகூடுதல் அரிது. ஒரோவழிக்கூடினும் ஐக்கியத்தோடு நிலைபெற்று எடுத்த கருமத்தை நிறைவேற்றல் மிக அரிது. அவர்கள் ஐக்கியமேயின்றிப் பெரும்பான்மையுந் தங்கள் உள்ளத்தில் விளையும் பகையையே பாராட்டிக் கலகம்விளைத்து எடுத்த கருமத்தை கைநெகிழவிடுதலே வழக்கம். இது பற்றியே நம்மவர்கள் லௌகிகநெறி வைதிகநெறி என்னும் இரண்டினும் மேன்மையடையாது, அன்னியதேசத்தார்களும் அன்னியபாஷையாளர்களும் அன்னியசமயத்தார்களுமாய் உள்ளவர்களாலே அவமதிக்கப்பட்டுத் தலைகவிழ்கின்றார்கள். சகோதரர்கள் பலர் தங்கள் பிதாவினுடைய வீடுமுதலியவற்றிற்கு இடையூறு நிகழும்பொழுது தங்களுள்ளே எத்துணைப்பகை இருப்பினும் அதனைச் சிறிதும் பாராட்டாது ஒற்றுமையுடையர்களாய்த் திரண்டு அவ்விடையூற்றை நீக்கி அப்பிதாவுக்கு இனியர்களாய் ஒழுகுவது இயற்கை: அதுபோலவே சைவசமயிகளாகிய நாமெல்லாம் நமது பரமபிதாவாகிய சிவபெருமானுடைய திருக்கோயின்முதலியவற்றிற்கு இடையூறு நிக

மும்பொழுது நம்முன்னே எத்துணைப்பகை இருப்பி னும் அதனைச் சிறிதும் பாராட்டாது ஒற்றுமையுடை யர்களாய்த் திரண்டு அவ்விடையூற்றை நீக்கி அச் சிவ பிரானுக்கு இனியர்களாய் ஒழுகுவதன்றோ அழகு. இப்படிச் செய்பவர்களன்றோ சைவசமயிகளென்னும் பெயருக்கும் அதனாற் பெறற்பாலதாகிய பெரும்பய னுக்கும் பாத்திரராவார்கள். இவ் வியல்பில்லாதவர் கள் அங்ஙனம் ஆவார்களா! ஆகார்கள் ஆகார்கள்.

“நம்மவர்களெல்லாரும் பொறாமை பகை முதலிய வைகளின்றி ஐக்கியமுடையவர்களாய்க் கூடும்பொரு ட்டும், தங்கள் தங்களால் இயன்றமட்டும் வாக்காலும் காயத்தாலும் பொருளாலும் சகாயஞ்செய்து மேற் சுட்டிப்போந்த உத்தமோத்தம சிவபுண்ணியங்களை விதிப்படி சிரத்தையோடு நிறைவேற்றிப் பெரும்புக ழையும் பெரும்புண்ணியத்தையும் அடையும்பொருட் டும், திருவருள் சுரக்கும்படி பரமகாருண்ணிய சமுத் திரமாகிய சிவபெருமானுடைய திருவடிகளைப் பிரா ர்த்திக்கின்றோம்.”

திருத்தொண்டைநாட்டுப் பதிபுண்ணிய பரிபாலன சபையின் இரண்டாம்முறைக் கூட்டம் பிரபவஹு மாசிமீ கஉ சென்னபட்டணத்திலே பச்சையப்பமு தலியார் பாடசாலையிலே கூடிற்று.

அதுசமயத்தில் அக்கிராசனாதிபதி அவர்கள் அச்சிவபுண்ணியத்தின் பெருமையைச் சபையார்களுக்கு விளங்கும்பொருட்டுப் பிரசங்கித்தார்கள்.

அந்தப்பிரசங்கம் வருமாறு:—

இறைவனூற்பயன்.

"தமக்கினிமைவஞ்சகரேதாந்தமுதற்சாரார்
தமக்கினியார்தம்முதற்சார்ந்தார்."

இத்திருக்குறள் தமக்குத் தாம் வஞ்சகராவார் இவரென்பதும், இனியராவார் இவரென்பதும் உணர்த்துகின்றது. இதன்பொருள், தமக்கு இனிமை தாம் வஞ்சகர் தம்முதற் சாராரே - தங்களுக்கு இனிமையாயுள்ளதிலே தாங்களே வஞ்சகர்களாயுள்ளவர்கள் தங்கள் நாயகரை அடையாதவர்களே;—தமக்கு இனியார் தம்முதற் சார்ந்தாரே - தங்களுக்கு இனியர்களாயுள்ளவர்கள் தங்கள் நாயகரை அடைந்தவர்களே. எ-று. தாமென்றது பசுக்களாகிய ஆன்மாக்களை. தம்முதலென்றது பசுபதியாகிய சிவபெருமானை. இனிமை - இன்பம்.

துன்பத்தில் வெறுப்பும் இன்பத்தில் விருப்பும் ஆன்மாக்களுக்கு இயற்கையேயாயினும், அவர்கள் இன்பம் இது துன்பம் இது துன்பத்தினின்று நீங்கி

இன்பம் பெறுநெறி இது என உள்ளபடி அறிதற்கும் துன்பத்தினின்று நீங்கி இன்பத்தைப் பெறுதற்கும் சுதந்திரசத்தி யுடையர்களல்லர். சுதந்திரர் சிவபெருமானொருவரே ஆன்மாக்களோ பரதந்திரர்கள். ஆன்மாக்கள் இவ்வுண்மையை அறிந்து சிவபெருமானது திருவருள் வழிபட்டொழுகினன்றி இன்பத்துன்பங்களை அறிதலும் துன்பத்தினின்று நீங்கி இன்பத்தைப் பெறுதலும் இயலாவாம். நித்தியமாகிய பேரின்பம் முத்தியின்பமொன்றே; மற்றை யின்பங்களெல்லாம் முட்பூவிற்றேன்போல்வனவாம்.

சிவபெருமானை அடைதலாவது அவரை விதிப்படி சிரத்தையோடு வழிபடுதல். அவ்வழிபாட்டுக்கு மிக மேலாகிய கருவி சிவஞானம். இவ்வழிபாடே முத்திக்குவாயில். சிவஞானம் ஏழு பகுதிகளை உடையது. அவையாவன அத்துவசுத்தியாகிய நிருவாணதீக்ஷை பெற்றுக்கொண்டு சிவஞானநூல்களாகிய சைவசித்தாந்தசாத்திரங்களை ஓதல், ஓதுவித்தல், அவற்றின் பொருளைக் கேட்டல், கேட்பித்தல், கேட்டதைச் சிந்தித்தல், சிந்தித்ததைப் பின்பு தெளிதல், தெளிந்தபடியே அதன்பின் நிட்டைகூடல் என்பனவாம்.

இச்சிவஞானத்துக்கு ஏதுக்கள் சிவாகமத்தில் விதிக்கப்பட்ட சரியை கிரியை யோகங்களாகிய பதிபுண்ணியங்களாம். பதிபுண்ணியமெனினும் சிவபுண்ணியமெனினுமொக்கும். ஸ்மிருதியில் விதிக்கப்பட்ட

யாகமுதலியவை பசுபுண்ணியங்களாம். ஞானம் யோகமின்றியும், யோகம் கிரியையின்றியும், கிரியை சரியையின்றியும் சித்தியாவாம். அது "விரும்புஞ் சரியைமுதன் மெய்ஞ்ஞான நான்கு—மரும்புமலர் காய் கனிபோ லன்றோ பராபரமே" என்னுந் தாயுமான சுவாமி பாடலாலறிக.

சரியை சிவசாலோக்கியத்தையும், கிரியை சிவசாமீப்பியத்தையும், யோகம் சிவசாரூப்பியத்தையும், ஞானம் சிவசாயுச்சியத்தையுங் கொடுக்கும். யாகமுதலிய பசுபுண்ணியங்களோ சுவர்க்கத்தைக்கொடுக்கும். இவைகளெல்லாவற்றையும அறிதலும் அநுட்டித்தலும் கல்விகேள்விகளாலன்றிக் கூடாமையால, வித்தியாசாலைகளைத் தாபித்தலும் சைவப்பிரசாரஞ் செய்வித்தலுமே முக்கியதருமங்களாம். இவைகளின்றேனே மேற்கூறிய சிவதருமங்களும் சிவஞானமும அபிவிருத்தியாகும். இவைகளை விருத்திசெய்தலின் மிக்க புண்ணியமும், விருத்திசெய்யாமையின் மிக்க பாவமும் இல்லை இல்லை.

இதற்குப்பிரமாணம்:-

சிவதத்துவவிவேகவிருத்தியில் உத்தரிக்கப்பட்ட சுலோகத்தின் மொழிபெயர்ப்பு.

"நிகராகச்சிவதருமசிவஞானத்தை
விருத்திசெய்வோனினுமுயர்ந்தோனிலத்தினில்லை

பகர்பரமசிவயோகியவனேயாகும்
 பரிவினிறுத்திடுமாற்றல்படைத்துமுய்தி
யகலுமயலானிறுத்தாதொழிந்தோன்யோகி
 யாயினுமீசுரப்பிரியனல்லனென்றன்
புகருறுநிரகினிடைவீழ்ந்துபுன்கண்
 பொருந்திடுவனெனமறைகள்புகலுமன்றே.''

ஆதலினால், இப்பதிபுண்ணியங்களை அபிவிருத்தி செய்தற்பொருட்டு இங்குள்ள சைவசமயப்பிரபுக்கள் "திருத்தொண்டைநாட்டுப் பதிபுண்ணியபரிபாலனசபை" எனப் பெயர்கொண்ட ஒரு சமாசந்தாபித்தார்கள். சைவசாத்திரங்களைக் கற்பிப்பித்தலும் சைவப்பிரசாரஞ் செய்வித்தலுமே எல்லாச் சிவபுண்ணியங்களையும் சிவஞானத்தையும் வளர்க்குங் கருவிகளாய்ச் சிறந்துள்ள உத்தமோத்தம சிவபுண்ணியங்களாமாயினும், அவைகள் பரமதருமமென்பது கல்வியறிவுடையராகிய சிலருக்குமாத்திரமன்றி மற்றவர்களுக்கு விளங்காமைபற்றி அவைகளுக்குப் பொருளுபகரிக்க உடன்படுவோர் தற்காலத்தில் அரியராதலாலும், சிவாலயத்திருப்பணிகள் பரமதருமமென்பது கல்வியறிவுடையவரும் கல்வியறிவில்லாதவருமாகிய எல்லாருக்கும் விளங்குதல்பற்றி அவைகளுக்குப் பொருளுபகரிக்க உடன்படுவோர் பலராதலாலும், சைவசாத்திரபடனத்துக்கும் சைவப்பிரசாரத்துக்கும் முக்கியஸ்தானங்கள் சிவாலயங்களாயாதலாலும், சிவால

யங்களுள்ளே பல கிலமாயிருத்தலாலும், அவைகளைத் தற்காலத்திலே ஜீர்ணோத்தாரஞ்செய்யாவிடின் விளையுங்கேடு பெரிதாதலாலும், இச்சபையார் முன்னே சிவாலயத்திருப்பணிகளை நடத்துங் கருத்துடையர்களாயினார்கள்.

சிவாலயத்திருப்பணிகளுக்குப் பொருள் கொடுப்பவர்களும் அப்பொருளை வாங்கிச் சிவாலயத்திருப்பணிகளைச் செய்பவர்களும் முத்தியை அடைவார்கள்.

இதற்குப்பிரமாணம்:—

சைவசமயநெறி.

"திருப்பணிசெய்வார்க்குஞ்சிவனையுன்னிச்செம்பொன்
விருப்புடனீவார்பெறுகவீடு.
உய்வாருதவுநிதிவாங்கித்திருப்பணியைச்
செய்வார்பெறுகசிவம்."

சிவபத்தர்கள் தங்களிடத்துள்ள திரவியத்தை மூன்றுபாகம்பண்ணி ஒருபாகத்தைத் தங்கள் சீவனத்தின் பொருட்டு வைத்துக்கொண்டு மற்றை யிரண்டுபாகங்களையும் சிவபுண்ணியங்களுக்குக் கொடுத்தல்வேண்டும் என்று சிவாகமங்கள் சொல்கின்றன. இப்படிச்செய்தல் அரிதாயினும், சைவசமயிகளாகிய நம்மவர்களெல்லாரும் உலோபஞ்செய்யாது, இச்சபையார் எடுத்துக்கொண்ட சிவபுண்ணியத்தின் பொருட்டுத்

தங்கள் தங்களால் இயன்றபடி சிறிதாயினும் திரவியம் உபகரிக்கக்கடவர்கள். இப்படிச்செய்யின் "ஆயிர மாகாணி அறுபத்திரண்டரை" என்றபடியே நம்மவ ர்களால் உபகரிக்கப்படும்பொருள் மிகப் பெருகிவள ர்ந்து, சபையார் உத்தேசித்த சிவபுண்ணியங்களெல் லாம் இனிது நிறைவேறுதற்குக் காரணமாகும்.

கனம்பொருந்திய பிரபுக்களே, இத்தேசத்தவர் இவ்வூரவர் இவ்வியல்புடையவர் என்று உங்களாலே நன்றாக அறியப்படாதவர்களும் தருமத்தை நடத்து தற்கு அறிவும் ஆற்றலும் இல்லாதவர்களும் தருமத திரவியத்தின் வரவு செலவு கணக்கை உலகத்தார் அறி யுமவண்ணம் வெளிப்படுத்துதற்கு உடன்படாதவர்க ளுமாய் உள்ளவர்கள் உங்களிடத்தே தனித்தனி வந்து தருமத்தின்பொருட்டு யாசிக்கும்பொழுது, நீங்கள் பெரும்பான்மையும் தடைபேசாது உங்கள் உங்க ளால் இயன்றமட்டும் திரவியம் உபகரிக்கின்றீர்களே. அத்திரவியத்தைப் பெறுவோர்களுள்ளே தாங்கள் சு ட்டிய தருமத்தைத்தொடங்குவோர் சிலர். அவர்களு ள்ளும் பெற்ற திரவியமுழுதையும் அத் தருமத்தில் உபயோகப்படுத்துவோர் மிகச் சிலர். திரவியம் பெ றும்பொழுது முழுதையுந் தருமத்தில் உபயோகப்படு த்துங் கருத்துடையவருக்கும் அக்கருத்து அத்தருமம் முடிவுபெறும்வரையும் நிலைபெறுதல் அரிது. "ஒரு

போது நிலைபெறினும், அவர்காலத்திலே அத்தருமம் நிறைவேறாவிடத்து, அவருக்குப்பின் அத்திரவியம் அத்தருமத்திலேசேர்வது மிக அரிது அரிது. பெற்ற திரவியத்தைக்கொண்டு தருமத்தை முடிப்பவருள்ளும் சிலர் தாம் கல்வியறிவில்லாதவராதலாலும், கல்வியறிவுடையவரோடு சிறிதும் பரிசயமில்லாதவராதலாலும், எடுத்ததருமத்தை விதிப்படி நடத்தாதொழிகின்றனர். இங்ஙனமாதலின், நீங்கள் வருந்திச் சம்பாதித்ததிரவியம் தருமத்தின்பொருட்டுக் கொடுக்கப்பட்டவிடத்தும், தருமத்தில் உபயோகப்படுவது சிறுபான்மை. இதற்குக்காரணம் நம்மவர்களுள் ஒருதருமத்தை ஒருவரே தனித்து நடத்துதலாம்.

தருமங்களையும் அவைகளின் பலங்களையும் அவைகளைச்செய்யும் முறைமைகளையும் அறியவும் அறிவிக்கவும் வல்லவர் கல்வியுடையவராதலாலும், அவைகளைத் திரவிய முபகரித்து முடிக்கவல்லவர் செல்வமுடையவராதலாலும், இவ்விருதிறத்தாருள்ளும் பலர் சபையாகத்திரண்டு விதானங்கள் செய்துகொண்டு அவ் விதானங்களின்படியே தருமங்களை நடத்தப்புகுவார்களாயின், அத்தருமங்களெல்லாம் விதிப்படி நிறைவேறும். அவற்றின்பொருட்டுக் கொடுக்கும் பொருண்முழுதும் தருமத்திற்றானே உபயோகப்படும். ஆதலினால், நம்மவர்களுள்ளே தருமஞ்செய்யக் கருத்து

டையவர்கள் யாவரும் இச்சபையிற்சேர்தலே உத்த மோத்தமம்.

யாவராயினும் ஒருதருமத்தின்பொருட்டுத் திரவியம் உபகரிக்கச் சங்கற்பித்தாராயின்,சங்கற்பித்த அக்கணமே அத்திரவியம் தருமத்திரவியமேயாய் விடும். ஆகவே, அத்திரவியத்தைப் பின்பு கொடாதொழிந்தவர் தருமத்திரவியத்தை அபகரித்த அதிபாதகராகி எரிவாய்நரகத்தில் விழுந்து வருந்துவர். இது உண்மைநூற்றுணிவு. ஆதலினால், நீங்கள் தருமத்தின் பொருட்டுச் சங்கற்பித்த பொருளைச் சிறிதாயினுந் தடையின்றி அச்சத்தோடும் அன்போடுங் கொடுத்து விடல்வேண்டும்.

புண்ணியத்தையேனும் பாவத்தையேனும் செய்தல் செய்வித்தல் உடன்படல் என்னும் மூன்றும் தம்முளொக்குமாதலால், நீங்கள் இத்தருமத்துக்கு உபகரித்தன்மாத்திரமன்றி, உங்கள் உங்கள் பெந்துக்கள் இஷ்டர்கள் முதலாயினோருக்கும் சமயம்வாய்க்கும் பொழுதெல்லாம் நல்லறிவுச்சுடர்கொளுத்தி, அவர்களையும் இயன்றமட்டும் இத்தருமத்துக்கு உபகாரர்களாக்க முயலல்வேண்டும்.

தெய்வப்புலமைபொருந்திய ஔவையாராலே "சான்றோருடைத்து" என்று புகழப்பட்ட இத் திருத்

தொண்டைநாட்டின்கண்ணதாகிய இச்சென்னபட்டணம் இராஜதானியாயும் கல்வி செல்வம் அதிகாரம் முதலியவற்றினாலே பிரசித்திபெற்றதானமாயும் விளங்குதலினால், இப்பட்டணத்திலே தாபிக்கப்பட்ட இச்சபையார் எக்காலமும் ஐக்கமும் தருமத்திலேசிரத்தையும், இடையறுமுயற்சியும் உடையர்களாகி எடுத்த தருமங்களை விதிப்படி நிறைவேற்றிக்கொண்டு வருவார்களாயின், மற்றைநாட்டார்களும் தங்கள் தங்கள் நாடுகளில் இப்படியே சபை தாபித்துச் சிவபுண்ணியங்களைப் பரிபாலனஞ்செய்து வருவார்கள். அப்பொழுது, அவைகளுக்கெல்லாம் இச்சபையார்களே மூலகாரணர்களாதலால், அப்புண்ணியபலங்களிலும் இச்சபையார் பாகம் பெறுவார்களென்பதற்குச் சந்தேகம் உண்டோ இல்லை இல்லை.

இப்பொழுது நாம் கூறியவாறே நடத்தப்படின், சிவபுண்ணியங்களும் சிவஞானமும் அபிவிருத்தியாகும், ஆகவே, சபையார்களாகிய நீங்கள் உங்களுக்கும் பிறருக்கும் பயன்பட்டு உங்களுக்கு இனியர்களாகி உங்களுக்கு உங்களிலும் இனியராகிய சிவபெருமானுடைய திருவருளைப்பெற்று வாழ்ந்திருப்பீர்கள். நமக்கு நம்மிலும் இனியர் சிவபெருமான் என்பதற்குப் பிரமாணம்:—

திருநாவுக்கரசுநாயனார் தேவாரம்.

"என்னில் யாரு மெனக்கினி யாரில்லை
யென்னி லும்மினி யானொரு வன்னுள
னென்னு ளேயுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கு மின்னம்ப ரீசனே."

பிரசங்கம்முடிந்தபின் அக்கிராசனாதிபதி அவர்களுக்குத் துதிகள்சொல்லிச் சபையைமுடித்தார்கள். அதுநிற்க.

சந்தானாசாரியர்களுள் ஒருவரும் தில்லைவாழந்தணர்களுள் ஒருவருமாகிய கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியர் அருளிச்செய்த கோயிற்புராணத்துக்குப் புத்துரைசெய்து, பிரபவவருஷம் தைமீ வெளிப்படுத்தினார். முன்பதிப்பித்த வேறநேகபுத்தகங்களும் இவ்வருஷத்திலே இரண்டாம்பதிப்பு, மூன்றாம்பதிப்பு, நான்காம்பதிப்பாகப் பதிப்பிக்கப்பட்டன. அப்போது அவருக்கு வயசு ௪௫ ஆயிற்று.

பின்பு, மறைஞானசம்பந்தசிவாசாரியர் அருளிச்செய்த சைவசமயநெறிக்கு, தம்மிடத்தே சிலகாலம் பாடங்கேட்டவரும், தருமபுரவாதீனத்தைச் சார்ந்த காசி மடாலயத்துக் கட்டளைத்தம்பிரானா யிருந்தவருமாகிய பரமசிவசுவாமிகளுடைய வேண்டுகோளின்படி புத்துரைசெய்து, விபவவருஷம் புரட்டாதிமீ வெளிப்படுத்தினார். அம்மாசத்திற்றானே தொல்காப்

பியம் சேனாவரையருரையைப் பரிசோதித்து வெளிப் படுத்தினர்.

அவர் மாணாக்கராகிய சதாசிவப்பிள்ளையும், பாரதம், கொலைமறுத்தல், வைராக்கியதீபம், வைராக்கியசதகம், திருவுந்தியார், தாயுமானசுவாமிபாடல் முதலிய நூல்களை அவர்முன்னிலையிற் பரிசோதித்து, வெளிப்படுத்தினர். இவ்வருஷத்திலே வெளிப்படுத்திய விஞ்ஞாபனத்தின் ஒருபாகம் வருமாறு:—

"தமிழ்நாட்டில்வாழுஞ் சைவசமயிகளுக்கு,

நான், ஐயவருஷ முதலாக பீற்றர்பார்சிவல்துரையுடைய இங்கிலிஸ்வித்தியாசாலையிலே இங்கிலிஸ்கற்றேன். பிலவவருஷ பார்சிவல் துரைக்குத் தமிழ்ப்பண்டிதனாயினேன். பிதிராச்சிதம் நான் பெறவில்லை. என்னுடைய தமையன்மார்கள் நால்வருங் இயன்றமட்டும் பொருளும் உத்தியோகமும் உடையவர்களாயிருப்பவும், அவர்கள் பொருளுதவியும் நான்பெறவில்லை. இங்ஙனமாகவும், மேற்கூறப்பட்ட விருத்தியை நான் கீலகவருஷ புரட்டாதிமீ பரித்தியாகஞ் செய்தேன். பார்சிவல்துரை "நான்தங்களுக்கு உயர்வாகிய வேதனம் தருவேன். தாங்கள் என்னை விடலாகாது" என்று பலதரம் வற்புறுத்திச் சொல்லியவழியும், நான் அவ்விருத்தியில் விருப்பம்வைக்கவில்லை.

நான்இங்கிலீசிலே அற்பவிற்பத்தியாயினும் பெற்றி ருந்தும் என்னோடு இங்கிலிஸ்கற்றவர்களுள்ளும் என க்குப்பின் இங்கிலிஸ்கற்றவர்களுள்ளும் அநேகர் தங் கள்தங்கள் சத்திக்கேற்ற உத்தியோகம் பெற்றுவா ழ்ந்திருக்கக்கண்டும், நானும் என்சத்திக்கேற்ற உத் தியோகத்தின்பொருட்டு முயற்சிசெய்யின் அதுஅ ப்பொது சித்திக்குமென்றறிந்தும், அஃதில்லாமை யால் விளையும் அவமதிப்பைப்பார்த்தும் உத்தியோ கத்தை விரும்பவில்லை. தமிழ்க்கல்வித் துணைமாத் திரங்கொண்டு செய்யப்படும் உத்தியோகம் வலிய வாய்த்தபொழுதும் அதையும் நான் விரும்பவில்லை. கன்னிகை நாயகனிடத்து ஒருதுட்டாயினும் வாங் காது வீடு விளைநிலம் தோட்டம் ஆபரணம் முதலி யவற்றோடு விவாகஞ்செய்துகொடுக்கும் வழக்கமே யுடையது என்சென்மதேசமேயாகவும், நான் இல் வாழ்க்கையிலே புகவில்லை. இவைகள் எல்லாவற் றிற்குங் காரணம் சைவசமயத்தையும் அதன்வளர் ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல்வே ண்டுமென்னும் பேராசையேயாம்.

இப்பேராசையினால் இருபதுவருஷகாலம் நான்செ ய்தமுயற்சிகள்பல. அவைகளுள்ளே சித்திபெற்ற வை மிகச்சில. சைவசமயிகள் யாவரும் சைவசம யத்திலே சிரத்தையுடையர்களாகித் தங்கள்தங்களா

லியன்ற உதவிசெய்வார்களாயின் நான் எடுத்த முயற்சிகள் எல்லாம் இதற்குமுன்னமே நிறைவேறிவிடும். நிறைவேறின் என்னைப்போலவே, பிறரும் அங்கங்கே நன்முயற்சிகளைச்செய்வார்கள். செய்யிற் கல்வியுஞ் சமயமுந் தழைத்தோங்கும்.

தன் இம்மைப்பயன்களெல்லாம் இழந்தும் கையாறுவேண்டாதும் இருபதுவருஷகாலம் சுவசமயவிருத்தியின்பொருட்டு முயற்சிசெய்வோனொருவன் மற்றைச் சமயத்தார்களுள் விருப்பானாயின் அவனெடுத்தமுயற்சிகளுள் யாதுசித்திபெறாது. நம்முடைய சைவசமயிகள் தங்கள்சமயமும் பாஷையும் விருத்தியடையும்பொருட்டு நான்செய்யும் முயற்சிகளுக்கு உதவிசெய்யாமை மாத்திரையினமையாது, பெரும்பான்மையும் அவமதிப்பும் இடையூறுமே செய்கின்றார்கள். இதனால் எனக்கு யாதாயினும் ஓர்குறைவு உண்டு என்னுங் கவலை எனக்குச் சிறிதுமில்லை. எனக்குச செயப்படுவனவற்றைக் காணுந்தோறும் கேட்குந்தோறும், பிறருக்குத தமிழ்கற்றலின்கண்ணும தமிழ்க்கல்வியையும் சைவசமயத்தையும் வளர்த்தலின்கண்ணும் ஊக்கங்கிளராவண்ணம் தடைவிளைக்கின்றதே யென்னுங்கவலை எனக்குப் பெரிதுமுண்டு. பூர்வகாலத்திலே சைவசமயவிருத்தியின் பொருட்டு முயன்றபெரியோர்களுக்குச் சுவசமயிகளாலே நன்குமதி

திப்பும் பரசமயிகளாலே இடையூறும் செய்யப்பட்டன. தற்காலத்திலே சைவசமயவிருத்தியின்பொருட்டு முயலும் எனக்கு சுவசமயிகளாலேயே அவமதிப்பும் இடையூறும் செயப்படுகின்றன. பரசமயிகளோ எனக்கு இடையூறு செய்யவுமில்லை. என்னை அவமதிக்கவுமில்லை. இஃதென்னை! ஆச்சரியம்!! சைவசமயவிருத்தியின்பொருட்டு முயலுமெனக்கு நம்மவர்களாலே அவமதிப்பும் இடையூறுஞ்செய்யப்பட்டபோது, நான்தமிழ்க்கல்வியையும் சைவசமயத்தையும் வளர்த்தற்குவேண்டும் முயற்சிகளிலும் போக்குங்காலத்தை முன்போயின்று இங்கிலீசிலேயேபோக்கி உத்தியோகமுஞ் செல்வமும்பெற்று நம்மவர்களாலே நன்குமதிக்கப்படல்வேண்டும் என்று விரும்பாவண்ணம் திருவருள்சுரந்த சிவபெருமானுடைய பெருங்கருணைத்திறத்தை மறவாதிருத்தலே எனக்குவாய்ப்புடைத்தாயதோர் பெருஞ்செல்வம்" அப்போது அவருக்கு வயசு ௪௯ ஆயிற்று.

அவர் யாழ்ப்பாணத்துக்கு வரவேண்டியதாயிருந்தபடியால் சுக்கிலஹு ஆனிமீ சென்னபட்டணத்தைவிட்டகன்று சிதம்பரமார்க்கமாய் வந்தார். வரும்போது சிதம்பரத்திலே ஆனித்திருமஞ்சனகாலஞ் சமீபித்ததால் நடேசதரிசனத்தின்பொருட்டு, தாமதித்துப் போகவேண்டுமென்று நினைத்து அங்கேயிருந்

தார். இருக்குங்காலத்திலே அவருக்கும் இராமலிங்க பிள்ளைக்கும் இராமலிங்கபிள்ளைபட்சத்தாராகிய தீக்ஷிதருக்கும் இடையே அநேகவாதங்களும், வியாச்சியங்களும் சம்பவித்தன. திருமஞ்சனத்தன்று ஆயிரக்கான்மண்டபத்திலே அவரைத்தூஷித்தார்கள். தூஷித்தபின்பு அவரும் அவரைச்சார்ந்தோரும் தங்களை அடித்தார்கள் என்னும் பொய்வழக்கை எடுத்தார்கள். அவ்வழக்கு தீக்ஷிதர்களைச்சார்ந்த ஒரு சுதேச நீதியதிபதியினால் விளங்கப்பட்டுப் பொய்வழக்கெனக்காணப்பட்டபடியால் தள்ளுப்பட்டது. அவ்வெதுவாகச் சிதம்பரத்திலே எட்டுமாசம்வரையில் இருந்து, அதைவிட்டுநீங்கி மாயூரத்துக்குவந்து, அதற்குச் சமீபத்திலுள்ள தருமபுரவாதீனத்துக்குப் போயினார். அவ்வாதீனத்திலே எழுந்தருளியிருந்த சச்சிதானந்ததேசிகரால் கேட்கப்பட்டு அங்கே இருபது நாட்டங்கியிருந்தார். அங்கிருக்குநாளிலே மாயூரம் காவேரிக்கரைக் கொட்டாரத்திலே, அங்குள்ளவர்களால் வேண்டப்பட்டுச் சைவப்பிரசங்கஞ் செய்தற்குடன்பட்டு, சர்வலோகைகநாயகராகிய சிவபெருமானுடைய மகிமையையும் அவரை வழிபடும் முறைமையையும் அதனாலெய்தும் பயனையும் உலகத்திற்குப் பிரசங்கித்தலின் மிக்கபுண்ணியம் பிறிதொன்றுமில்லை யென்றுகண்டு, அதனையேதமக்குத் தொழிலாகப்பூண்ட சைவப்பிரசாரகராகிய நாவலர், பிரசங்க

தினத்தைக்குறித்து, அத்தினத்திலே சிவபெருமானொருவரே பிறப்பிறப்பில்லாத கடவுளென்றும், சிருட்டி திதி சங்காரம் திரோபவம் அநுக்கிரகம் என்கின்ற பஞ்சகிருத்தியங்களைச் செய்யுங் கருத்தாவென்றும், தம்வயத்தராதல், தூயவுடம்பினராதல், இயற்கையுணர்வினராதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என்னும் எட்டுக்குணங்களுமே அவருடையதிருவருட்குணங்களென்றும், ஒவ்வோர்காலத்திலே அரிபிரமேந்திராதி தேவர்களும் தாந்தாம் விரும்பிய வரங்களைப் பெறும்பொருட்டு அவரையே வழிபட்டு அவ்வவ்வரங்களைப் பெறுதலாகிய அநுக்கிரகங்களைப் பெற்றார்களென்றும், அறுபத்துமூன்றுநாயன்மாரும், மற்றைய அடியார்களும் சிவாநுக்கிரகத்தைப்பெற்று முத்தியடைந்தபோதெல்லாம் விட்டுணுமுதலிய தேவர்கள் அவர்களை நணுகப்பெறாது தூரத்தேநின்றார்களென்றும், அவரை வழிபடுஞ்சமயமே சரியை கிரியை யோகம் ஞானங்களையறிவித்து, அவை வாயிலாக சாலோக சாமீப சாரூப சாயுச்சியமுத்திகளை யடையப்பண்ணுஞ் சமயமென்றும் விரித்துரைத்தார். இன்னும் விட்டுணு பதியல்லர் என்பதற்கு வியாக்கிரபாதமுனிவருடைய புத்திரராகிய உபமன்னியுமகாமுனிவர் விட்டுணுவின் அவதாரமாகிய கிருஷ்ணருக்கு சிவதீக்ஷைசெய்து சிவபூசை எழு

ந்தருளப் பண்ணிக்கொடுத்தார் என்னும் உண்மை
யைச் சைவபுராணம், கூர்மபுராணம், மகாபாரதம
முதலிய நூல்களாலும், சிதம்பரத்திலே இவ்விருடிக
ளுள் நாமொருவரென்று சபாநாயகரால் எடுத்துச
சொல்லப்பட்ட தில்லைவாழந்தணர் வமிசத்திலே ஆதி
சேடனின் அவதாரமாய்த் திருவவதாரஞ்செய்தருளிய
அப்பய தீக்ஷிதர் * விட்டுணுமதத்தைக் கண்டித்துச
செய்த கிரந்தங்களாலும், சிவபெருமானே முழுமுத
ற்கடவுளென்னு முண்மையைச் சகலருமறிந் துய்யும
பொருட்டுப் பிரசங்கித்தார். அச்சமயத்திலே எவ
ளவோ வைஷ்ணவபண்டிதர்கள் வந்திருந்தும், அவர்
பிரசங்கித்தவைகளெல்லாம் ஆட்சேபத்துக் கிடமில்
லாதவைகளாயும ஒருவராலும் மறுக்கப்படாதவைக
ளுமாயிருந்தபடியால், எல்லாரும் சித்த சமாதானத்
தோடும் கேட்டுக்கொண்டிருந்துபோனார்கள்.

---

* இவர் வேதாகமங்களை நன்றாயோதியுணர்ந்தவர். சிவாக
மத்திலே விதிக்கப்பட்ட தீக்ஷைகளே மிகச்சிறந்தவை
யென்றுணர்ந்து, சமய விசேட நிருவாணதீக்ஷைகளைப்
பெற்றுச் சிவபூசை எழுந்தருளப்பண்ணி, மிகுந்த பத்தி
யோடும் சிவபூசைபண்ணிக்கொண்டுவந்தவர். அந்தரி
யாகபூசையிலே ஆதிசேடனது வடிவமாக விருப்பா
ரென்றும், அப்பூசையின்பின் முன்னையவடிவமாய் வி
டுவாரென்றும் பெரியோர்சொல்வர். விட்டுணு பத்தி
யிற்சிறந்த தாதாசாரியனை, சிவனைத்தூஷித்துத் தம்மை
அவமானஞ்செய்ததற்காக, சின்னக் காஞ்சீபுரத்திலே
இடியிடித்துச் சாகும்படிசபித்தவர். விட்டுணுமதத்
தைக்கண்டித்து எண்பத்துநான்கு கிரந்தஞ்செய்தவர்.

மாயூரத்தைவிட்டகன்று திருவிடைமருதூர் சென்று சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு, பிறையாற்றுக்குவந்து அங்குள்ள திருவேட்டக்குடிக்குப்போய்ச் சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு, காரைக்கால்வந்து அங்கும் பிரசங்கஞ்செய்தபின்பு, அதைவிட்டகன்று வேதாரணியம்வந்தார். அங்குள்ள கோயிலிலே பிரசங்கஞ்செய்யும்படி அக்கோயிற் றருமகர்த்தாவினாலே வேண்டப்பட்டு, அவ்வேண்டுகோளுக்கிசைந்து பிரசங்கஞ்செய்தார். அடுத்தநாள் கோடியக்கரைவந்து யாழ்ப்பாணம்வரும்படி தோணியேறி யாழ்ப்பாணம் பேருத்துறையில் சுக்கில௵ மாசி௴ ௨௭௳ வந்திறங்கினார்.

சைவசித்தாந்தப் பிரவர்த்தகரும் நெறியிற்செல்லாது நம்மையெல்லாம் ஆட்கொண்டருளிய பரமாசாரியருமாகிய **நாவலர்** யாழ்ப்பாணம்வருகின்றார் என்பதையறிந்து, அவர்வரவை எதிர்பார்த்து, வீதிகடோறும் பந்தரிட்டு, வாழைகள் நாட்டி, தோரணங்கள் நிரைத்து, பூமாலைகள் தூக்கி, பூரணகும்பங்கள் வைத்து, விளக்கேற்றியிருந்த சைவசமயபத்திமான்கள் யாவரும், அவர் வந்திறங்கியவுடன் அவரைப் பூம்பல்லக்கிலேற்றி, பலவாத்தியங்களொலிக்க, "இன்றன்றோ நாமெல்லாம் உய்ந்தோம்! உய்ந்தோம்!!" என்று ஒருமொழியாக ஆரவாரித்து, அழைத்துக்கொண்டுவெ

ந்து, சைவப்பிரகாசவித்தியாசாலையிலே அலங்கரிக்கப்பட்ட ஆசனத்தின்மீது இருந்தார்கள். அப்போது சனங்களெல்லாம் எளிதில் விளங்கிக்கொள்ளுந்தக்கதாகப் பதி பசு பாசம் என்னும் திரிபதார்த்தலட்சணங்களை விரித்துப் பிரசங்கித்தார். பிரசங்கம் முடிந்தபின் அவர்கள் அவரை மடத்துக்கு அழைத்துக்கொண்டுபோய்விட்டார்கள்.

மற்றைநாள் யாழ்ப்பாணத்திலுள்ள பிராமணகுருமார்கள், சைவகுருமார்கள், வித்துவான்கள், பிரபுக்கள் என்னு மெத்திறத்தவரும், அவரைத் தரிசிக்கவந்தார்கள். அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி, "தாங்கள் யாழ்ப்பாணத்தைவிட்டுச் சென்னபட்டணம்போயபின்பு, புறச்சமயத்தவர்கள் நமது சமயத்துக்கு விரோதமாகப் பிரசங்கங்கள் செய்தும், நமது சமயநூல்களினும் சமயக்கிரியைகளினும் பற்பல ஆட்சேபங்களையுஞ்செய்தார்கள். அவைகளுக்கு மாறாக நமது சமயத்தைப் பிரசங்கிக்கவாவது, அவ்வாட்சேபங்களுக்குச் சமாதானஞ்சொல்லவாவது, இங்குள்ளவர்களுள் ஒருவராலும் முடியாமற்போயிற்று. தாங்கள் இங்கே எழுந்தருளிவரப்பெற்றுக்கொண்டேம். இனி, நாங்கள் பரசமயத்தவர்களால் ஆட்டுண்ணோம். தங்கள் வித்தியாசாலையிலே எங்கள்மீதிரங்கிச் சைவப்பிரசங்கங்கள் செய்

யிர்களாயின், இம்மையிலே தீயவழியிற் செல்லா தொழிவேம்; மறுமையிலே நரகதியையும் அடைவேம்" என்று, விண்ணப்பஞ் செய்துகொண்டார்கள். கொடிகட்டி அன்னதானஞ் செய்வோனொருவனிடத்திலே ஏழை ஒருவன் வந்து, "நீர் கொடிகட்டி அன்னதானஞ்செய்கின்றீர் என்பதைக் கேள்விப்பட்டு, உம்மிடத்தில் வந்தேன். இப்போது, பசி என்னை மிக வருத்துகின்றது. ஆதலால், எனக்கு அன்னந்தருவீராக" என்று வேண்டுவானாயின், அவ்வேழைக்கு அத்தாதா எவ்வளவு சந்தோஷத்தோடு அன்னத்தைக் கொடுப்பானோ, அதுபோல "ஆலமே யமுதமாக வுண்டுவா னவர்க்களித்துக்—காலனை யார்க்கண்டற்காக் காய்ந்தனை யடி யேற்கின்று—ஞாலநின் புகழேயாக வேண்டு நான்மறைகளேத்துஞ்—சீலமே யாலவாயிற் சிவபெருமானேயென்றார்" என்று பரசமயகோளரியாகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் மதுரைச் சோமசுந்தரக்கடவுளை வேண்டிக்கொண்டபிரகாரமே, தாமும் பரமகருணாநிதியாகிய சிவபெருமானுடைய புகழை உலகத்திற்குப் பரப்புதலையே தமக்குச் சதாதியானமாகவுந் தொழிலாகவும் பூண்ட சைவப்பிரசாரகரும், தாமே சைவப்பிரசங்கங்கள் செய்யவேண்டியிருக்க, இவர்கள் தம்மிடத்திலேவந்து சைவப்பிரசங்கங்கள் செய்யுமாறு விண்ணப்பஞ் செய்தமையிற் சந்தோஷங்கொண்டு, சைவப்பிரசங்கம் என்

னுந் தேவாமிர்தத்தைச் சைவநூலுணர்ச்சியில்லாத அவ்வேழைகளுக்கு வார்த்தார். அதனால் அநேகர் சைவநூல் அறிவை மிகவிரைவிலும் எளிதிலும் அறிந்துகொண்டார்களென்பது அனுபவத்தினால் அறிந்த சத்தியம். அப்போது அவருக்கு வயசு ௩௯ ஆயிற்று.

அ. ஆறுமுகச்செட்டியாரால், வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையின்பொருட்டு, தருமசாதனஞ்செய்யப்பட்ட நிலத்திலே கட்டப்பட்டிருந்த கூடம் பழுதடைந்தமையால், அந்நிலத்திலே பெரிதாயும் பெலமுள்ளதாயும் பிறிதொன்று கட்ட நினைத்து, அது கட்டி முடிவுபெறும்வரையும் வித்தியாசாலை வைத்தற்காக வாடகைக்கு வாங்கப்பட்ட வண்ணார்பண்ணை வைத்தீசுரன்கோயில் நிலத்திலே ஒரு கூடத்தை பிரசோற்பத்திவருஷம் கட்டுவித்தார். மேற்படி வித்தியாசாலை அந்தத்தானத்திலேயே நடைபெற்று வருகின்றது.

இந்தப்பிரகாரம் சைவப்பிரசங்கங்கள் செய்துகொண்டும், தமது வித்தியாசாலையைச் செவ்வையாய் நடாத்திக்கொண்டும் வருங்காலத்திலே, யாழ்ப்பாணத்திலுள்ள உவெஸ்லியன்மிஷன் அங்கிலவித்தியாசாலையிலே இங்கிலிஷ்கற்ற சைவசமயப்பிள்ளைகளுளநேகர், விபூதி தரித்துக்கொண்டு பள்ளிக்கூ

டத்துட் பிரவேசித்தமையினால், அப்பள்ளிக்கூடத்தின் அதிபதியாகிய பாதிரியினால் வெளியே துரத்தப்பட்டார்கள். துரத்தப்பட்ட பிள்ளைகளெல்லாரும் பரசமயகோளரியுஞ் சுவமதஸ்தாபகருமாகிய நாவலரிடத்திலே வந்து, "விபூதிதரித்துக்கொண்டு பள்ளிக்கூடத்துட் பிரவேசித்தமையால், பள்ளிக்கூடத்தினின்றும் நீக்கப்பட்டோம். விபூதி தரியாது போவேயாயின், பள்ளிக்கூடத்தினுட்பிரவேசித்துப் படிக்கும்படி விடப்படுவேம். ஆயின், சைவசமயிகளாகிய நாங்கள், அச்சமயத்திற்குரிய சிவசின்னமாகிய விபூதியை, தரியாதுபோதல் எங்களுக்குச் சம்மதமன்று. ஆதலால், தாங்கள் எங்கள்மீதிரங்கி எங்களுக்காக ஒரு அங்கிலவித்தியாசாலை தாபிப்பீர்களாயின், நாங்கள் எல்லாரும் வந்து கல்விகற்றுக்கொள்ளுவேம். அதுவாயிலாகப் புறச்சமயம் போதிக்கப்படுவதினின்றும் நீங்கிக்கொள்ளுவோம். சைவசமயிகளாகிய எங்கள்பொருட்டு இப்பெருநன்மையைச் செய்தல் வேண்டும்" என்று பிரார்த்தித்துக்கொண்டார்கள். ஒரு அங்கிலவித்தியாசாலையை நடாத்துதற்கு வேண்டியபொருள் ஒரு சிறிதுமில்லாதிருந்தும், பிள்ளைகள்கொடுக்கும் வேதனத்தைக்கொண்டும், கவர்ண்மேண்டாரிடத்திலே உதவிபெறலாமென்ற நம்பிக்கையைக்கொண்டும், பிரசோற்பத்திவருஷம் தைமீ (1872) "வண்ணார்பண்ணைச் சைவ அங்கில

வித்தியாசாலை" எனப்பெயர்கொண்ட ஓர் வித்தியாசாலையைத் தாபித்தார். அவ்வித்தியாசாலை பிள்ளைகளினுடைய வேதனத்தைக்கொண்டுந் தமது பொருள் கொண்டுஞ் சிலகாலம் சிறப்பாக நடத்தப்பட்டது. பின்னர், பிள்ளைகளினுடைய வேதனங்குறைந்ததனாலும், சமீபத்தில் வேறு பள்ளிக்கூடங்களிருக்கின்றனவென்று போக்குச்சொல்லிக் கவர்ண்மெண்டார் உதவிசெய்யமாட்டோமென்று மறுத்ததினாலும், சைவசமயிகளுடைய உதவி சிறிது மில்லாதிருந்ததனாலும், அதில்வைத்த ஊக்கத்தைக் கைநெகிழ்விட்டார். விடவே, உபாத்தியாயர்களுட்சிலர் தங்களுக்குக்கிடைக்கும் வேதனம் முன்னையிலும் பின்னர் அதிகங் குறைந்தமையால் ஆங்கிரச வருஷத்திலும், சிலர் ஸ்ரீமுகவருஷத்திலும் பள்ளிக்கூடத்தைவிட்டு நீங்கினார்கள். சிலர் அற்பவேதனத்தைப் பெற்றுக் கொண்டு தாதுவருஷம் வரையிலும் கற்பித்துக் கொண்டிருந்து, பிள்ளைகளில் அநேகர் இப்பள்ளிக் கூடத்திலே கவர்ண்மேண்டுப் பரீக்ஷை இல்லையென்று சொல்லிக்கொண்டு வேறுபள்ளிக்கூடங்களுக்குப் போகின்றதைக்கண்டு, அதிபதியவர்களிடத்திலே உத்தரவு பெற்றுக்கொண்டு வித்தியாசாலையைவிட்டனர். அப்போது அவருக்கு வயசு ௬௬ ஆயிற்று.

ஆங்கிரசவருஷத்திலே கோப்பாயிலும் புலோலியிலும் சைவப்பிரகாச வித்தியாசாலைகள் தாபித்தார்.

அவைகளுள்ளே புலோலி வித்தியாசாலை அவ்வூரவர்கள் கொடுத்த பொருள்கொண்டு நடத்தப்படுகின்றது. கோப்பாய் வித்தியாசாலைக்குப் பொருள் சேராமையால் தமது வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாசவித்தியாசாலைப் பொருள்கொண்டு சிலகாலம் உபாத்தியாயரை நியோகித்து நடத்திவந்தார். இது நிற்க.

இற்றைக்கு ஏறக்குறைய ௨௫-வருஷகாலமாக நல்லூர்க் கந்தசுவாமிகோயிற் கிரியைகள்யாவும் சிவாகம விரோதமென்று கண்டு, அக்கோயிலுக்குப்போகாது விடுத்திருந்தார். இப்படியிருக்குங்காலத்திலே, தங்கள்கோயிலுக்கு அவரையழைத்து அவரைக்கொண்டே தங்கள்கோயிலைத் திருத்துவித்தல் வேண்டுமென்றுகருதி, ஆங்கிரச௵ ஆனி௴ அக்கோயிலார்கள் அவரிடத்திலே வந்து, "எங்கள்கோயிலிலே இற்றைத்தினம் தெய்வயானையம்மை திருக்கல்யாணப் படிப்புத்தினமாதலால், தாங்கள் எங்கள் கோயிலுக்கு வரல்வேண்டும்" என்றும், "தெய்வயானையம்மை திருமணப்படலத்துக்குப் பொருள்சொல்லல்வேண்டும்" என்றும் அவரை வேண்டிக்கொண்டார்கள். அப்போது அவர், "உங்கள்கோயில் சிவாகமத்துக்கு முழுவிரோதமாக நடத்தப்படுகின்றபடியால், நான் உங்கள் கோயிலுக்குவரேன்" என்று

அவர்களுக்குச்சொன்னார். அவர்கள், "தாங்கள் சிவாகம சம்மதமென்று எவைகளைச் சொல்லுவீர்களோ, அவைகளையெல்லாஞ் செய்தற்கு யாதொருதடையுமில்லை" என்றுசொல்லி, அவரைத் தங்கள் கோயிலுக்கு அழைத்தார்கள். சிவாகமப்பிரகாரம் அக்கோயிலை நடத்துவிக்கலாமெனநினைந்து, அக்கோயிலுக்குப்போய் முற்கூறிய படலத்துக்குப்பொருள் சொல்லி, முடிவிலே கற்பக்கிரகத்திலே வேலாயுதப்பிரதிட்டை செய்து இருபுறத்திலும் தெய்வநாயகி வள்ளிநாயகி விக்கிரகங்களை வைத்துப் பூசித்தல் ஆகமவிரோதமென்றும், அவைகளைநீக்கிச் சிலாவிக்கிரகந் தாபித்தல்வேண்டுமென்றும் பிரசங்கித்தார்.

சிலாவிக்கிரகந் தாபித்தலும், கோயிலைப்பிரித்துக் கட்டுதலும், சிவதீக்ஷையுடையோரைக்கொண்டு பூசை செய்வித்தலுமாகிய இவைகளெல்லாம் அவர்களுக்குச் சம்மதமாயிருந்தமைபற்றி, அக்கோயிலதிகாரி ஆயிரங்கடிதம் அச்சிற்பதிப்பித்துப் பரப்பிச் சனங்களையழைத்து ஆங்கிரசஹு தைமீ ௨௨ சனிக்கிழமை ஒருசபைகூட்டி, அச்சபையிலே எழுந்துநின்று நாவலரை நோக்கி, "இச்சபை[illegible]ரை இன்றைக்கு இங்கே யழைத்தகாரணத்தைப்பற்றி, தாங்களே இவர்களுக்குப் பிரசங்கித்தல்வேண்டும்" என்று வேண்டிக்கொண்டார். அவருடைய வேண்டுகோளின்படி சப்

பிரமணியப்பெருமானுடைய இலக்கணங்களைப்போதி த்தபின்பு, சபையார்களைவிளித்து, அக்கோயிற் கிரி யைகள்யாவும் ஆகமவிரோதமென்றும், கற்பக்கிரக முதலியவைகளைப்பிரித்து ஆகமப்பிரகாரம் கருங்கல் லினாலே கட்டுவித்து விக்கிரகப்பிரதிட்டை செய்வித் தல்வேண்டுமென்றும், அதற்குவேண்டுந்திரவியம் நீங் களே உபகரித்தல்வேண்டுமென்றும், அவ்வாறுபகரி க்கப்படும் பொருள்கொண்டே திருப்பணிநடத்துத ற்கு ஒருசபை உங்களாலே தெரிவுசெய்யப்படல் வே ண்டுமென்றும், பிரசங்கித்தார். அப்போது அங்கிரு ந்தவருட் சிலர் திருப்பணிச்சபையாராகத் தெரிவு செய்யப்பட்டார்கள். தெரிவுசெய்யப்பட்டபொழுது சனங்கள், "நாவலரவர்கள் இச்சபையி லொருவ ராயிருந்தாற்றான் கையொப்பம்வைப்போம்" என்றும், "கையொப்பப்பணந்தருவோம்" என்றும் தங்கள் அபி ப்பிராயத்தை வெளிப்படுத்தினார்கள். அவர் தாம் அச்சபையிலே சம்பந்தமுடையராய் இருத்தற்குச் சற்றேனும் பிரியமில்லாதவராயிருந்தும், அச்சபை யிலே தாம் ஒருவராய்ச் சேராவிட்டால் திருப்பணி நடவாமற் போய்விடும் என்னுங்கருத்தால் ஒருவரா யிருத்தற்குச் சம்மதித்தார். அதன்பின் சனங்கள் அவரையே சபாநாயகமாக வைத்துக்கொண்டு கை யொப்பஞ் சேர்த்தார்கள். அச்சமயத்தில் ஏறக்கு றைய ரூ - ரூபா வரையில் கையொப்பஞ் சேர்ந்

வண்ணார்பண்ணையிலுள்ள த. இராகவப்பிள்ளை கு.செல்வநாயகம்பிள்ளை என்னுமிருவராலே கட்டுவிக்கப்பட்ட நல்லூர்க்கந்தசுவாமிகோயிற் றெற்குவீதி மடத்திலே, பவ௲ வைகாசிமீ உ௰௳ திங்கட்கிழமை மூலநட்சத்திரத்திலே, திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் குருபூசையும், அக்கோயில் வசந்தமண்டபத்திலே பிரசங்கமுஞ் செய்யப்பட்டன. அப்பிரசங்கத்திலே திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் மூன்றும்வயசிலே உலகமாதாவாகிய உமாதேவியார் பொற்கிண்ணத்திலே கறந்து சிவஞானத்தைக்குழைத்து ஊட்டிய திருமுலைப்பாலை உண்டமாத்திரத்திலே சிவாநுக்கிரகத்தினாலே பாடிய "தோடுடையசெவி யன்விடை யேறியோர் தூவெண் மதிசூடிக்—காடுடை யசுட லைப்பொடி பூசியென் னுள்ளங் கவர்கள்வ—னேடுடை யமல ரான்முனை நாட்பணிந் தேத்தவருள்செய்த—பீடுடை யபிர மாபுர மேவிய பெம்மானிவனன்றே" என்னுந் திருவிருத்தத்தையே பீடிகையாக எடுத்து, அதன்பொருளை முன்னர்விளக்கிப் பின்னர்ச் சிவபெருமானுடைய திருச்செவிகள் இரண்டினுள் ஒன்றிலே சங்கக்குண்டலமும் மற்றயைதிலே திருத்தோடுமிருக்க, பிள்ளையார் திருத்தோடணிந்த திருச்செவியைச் சிறப்பித்துப்பாடியது என்னை? என வினவி, அதற்கு அதிப்பிரபல நியாயங்களால் விடைகூறி முடித்ததுமன்றி, அத்திருப்பாட்டினுள்ளே இலை

மறைகாய்போல் மறைந்துகிடந்த வேதப்பொருளை யும் எடுத்து இனிதுகாட்டிப பிரசங்கித்தார்.

கந்தசுவாமிகோயிற் றிருவிழாச்சமீபித்தபடியால், தேவாரத்திருக்கூட்டச சிறப்பையும், தேவாரம் முதலியவை திருவிழாக்காலத்திலே சுவாமிக்குப்பின்னாக ஓதுவதால் சனங்களுக்குண்டாகும் கடவுட்பத்தியையும், இவ்வியாழ்ப்பாணத்துச் சனங்களுக்குக் காட்ட நினைந்து, திருவாவடுதுறையினின்றும் சில ஓதுவார்களை அழைப்பித்து, திருவிழாக்காலத்திலே அவர்களுக்கும் இங்குள்ள மற்றைச் சைவர்களுக்கும் தெற்குவீதிமடத்திலே சிலபுண்ணியவான்களைக்கொண்டு மாகேசுரபூசை செய்வித்து, சுவாமிவீதியிலே உற்சவங் கொண்டருளும்பொழுது, சுவாமிக்குபபின்னாக அவர்களைக்கொண்டு தேவாரம் ஓதுவித்துக் கொணடுவந்தார். இவர்கள் தமிழ்வேதமாகிய தேவாரத்தை ஓத, அதனைக்கண்ட பிராமணர் தாங்களும்வந்து, சுவாமிக்குப்பின்னாக வேதம் ஓதுவாராயினார்கள். அவரும் விபூதி உத்தூளனஞ்செய்து, திரிபுண்டரந்தரித்துத் தலையிலே சிரமாலையும் கழுத்திலே கண்டிகையும் கையிலே பௌத்திரமுந்தரித்து, யாவருக்கும் பத்தியைவிளைக்கத்தக்க சிவவேடப் பொலிவோடு திருக்கூட்டத்தலைவராய் நின்றார். அத் திருக்கூட்டத்தின் சிறப்பை என்னென்று சோல்

வோம்! எதற்கொப்பிடுவோம்!! ஆதியிலே சுப்பிர மணியப்பெருமானின் அவதாரமாய்விளங்கிய திரு ஞானசம்பந்தமூர்த்திநாயனார் மேசூத - திருக்கூட்டத் தோடுதோற்றிய சிறப்புக்கொப்பிடலாம். இவ்வரு ஷத்திருவிழாவின் கிரமசாந்தியிலே ஆடுவெட்டா துவிட்ட இக்கோயிலார்கள், ரதோத்சவதினத்திற்கு முதற்றினமாகிய சப்பிரத்திருநாளிலன்று தேர்முட் டுப்பறிக்கும்போது சிலதுட்டருடைய சொல்லைக் கேட்டு, ஆட்டைவெட்டிவிட்டார்கள். தமதுயனைச் சான்றிற்கும் கட்டுப்பாட்டுக்கும் தம்மையாட்கொண் டருளிய கலியுகவரதராகிய சுப்பிரமணியப்பெருமா னுக்குப் பூசையுற்சவம் முதலியனவிதிக்கும் குமார தந்திரத்திற்கும் இதுவிரோதமாதலால், அன்றுதொ டுத்து அக்கோயிலுக்குப்போகாது விட்டார். பொது நன்மையை விரும்பி அக்கோயிற்குற்றங்களை எடுத் துக்காட்டிச் சிலபத்திரிகைகள் எழுதி அச்சிற்பதிப் பித்து வெளிப்படுத்திவிட்டார். கோயிலார்களும் வேறுசில கலகப்பிரியர்களும், சிலபுறச்சமயத்தவர்க ளைக்கொண்டும் சிலதுட்டரைக்கொண்டும் அப்பத்தி ரிகைகளிலே சொல்லப்பட்டவைகளுக்கு ஒருசிறி தும் நியாயமில்லாத சிலபத்திரிகைகளை, எழுதுவித் து வெளிப்படுத்திவிட்டார்கள். அவைகள் நியாய மில்லாதவைகளாயிருந்தன் மாத்திரத்தில் அமையா

து, நமது சைவசமயக்கடவுளைத் தூஷித்தலும் புறச்சமயக்கடவுளைப் புகழ்தலுஞ் செய்தன. கோயிலார்கள் முன்கையொப்பம் வைத்தவர்களிடத்தும் மற்றவர்களிடத்தும் பொருள்பெற்றுத் திருப்பணியை நடத்தலாமென்று நினைத்துப் பலமுறை முயன்றும் தங்கருத்துச் சித்திபெறாமைகண்டு வாளாவிருந்தனர். அப்போது அவருக்கு வயசு ௫௨ ஆயிற்று.

அடுத்த யுவ தாது ஈசுர வெகுதானியவருஷங்களிலே நன்னூல் விருத்தியுரை, நைடதவுரை, திருவிளையாடற்புராணம், நன்னூற்காண்டிகையுரை முதலியநூல்களைத் திருத்துவதிலும், சிவபூசாவிதி, அநுட்டானவிதி (ந) குரு சிஷ்யக்கிரமம், பூசைக்கிடம் பண்ணும்விதி, சிராத்தவிதி, தருப்பணவிதி, போசனவிதி, தமிழ்அகராதி, தமிழ்சம்ஸ்கிருதஅகராதி, தமிழ் இங்கிலிஷ் அகராதி முதலியநூல்களைப்புதிதாய் எழுதுவதிலும், சைவப்பிரசங்கங்கள் செய்தலிலுந் தங்காலத்தைப்போக்கினர்.

தாது ௵ புட்டாதிமீ பருத்தித்துறையைச்சார்ந்த புலோலிச் சைவப்பிரகாசவித்தியாசாலையிலே, கல்வி கற்கும் பிள்ளைகளைப் பரீக்ஷிக்கப்போயிருந்தபோது, அ. சிவசம்புப்புலவர்பாடிய பாடல்கள் வருமாறு:—

வெண்பா.

ஆறுமுகநாவலன்சீரான்றதமிழ்க்காவலன்மெய்
வேறுபடும்பொய்மதத்தோர்மேலலன்றன்—வீறுபுகழ்ச்
சைவப்ரகாசவித்தியாசாலைமிகவோங்கிடுக
வெவ்வெப்பகலுமினிது.

விருத்தம்.

ஆறுமுகநாவலனுமறிஞர்கோனு
லணிதிகழும்புலோலியினிலமைக்கப்பெற்ற
வேறுபுகழ்க்கழகத்திற்கற்றுமைந்த
ரிருஞ்சபையிற்காட்டியநூலியல்புமுற்ற
ஆறுமகிழ்வொடுதெரிந்தாமிவருக்கிவ்வா
றொருசின்னளினிற்றேற்றமுதிப்பச்செய்த
மாறுபெருமதிக்குரவர்முயல்வையின்னும்
வளர்த்திடுதல்சிவன்கருணைமாண்பதாமே.

ஈசுர௵ புரட்டாதி௴ மேற்படி வித்தியாசாலைப் பரீக்ஷைக்குப்போயிருந்தபோது அ. சிவசம்புப்புலவர் சொல்லிய பாடல்கள் வருமாறு:—

வெண்பா.

சைவமதமாதுந்தமிழ்மாதுமாட்டுகந்த
தெய்வசபையைப்புலமைச்சீர்வாய்ந்த—மெய்வளரு
மாறுமுகநாவலனுமான்றபெரும்புண்ணியனு
லேறியகல்லூரியென்பதென்.

கலிவெண்பா.

ஆரூர னும்புகலி யப்பனுமெய்ந் நாவரசுஞ்
சீரூரும் வாதவூர்த் தேசிகனும் பேரருள
பொன்னா டொருசிறிய புன்னா டெனப்புரியத்
தென்னாடு காத்தசெங்கோற் சீரியரு முன்னாளு
மூத்த வறிவினரு முச்சங்கப் பாவலரு ம
வாய்த்தமர பானோர்பி மன்னனைவைத்த வேத்துதகைச்
சைவமத முந்தமிழும் பின்னா டனிபாகுந்
செவ்வியரில் லாமற் றிறம்பாழாந் செவ்விமிடைக
குன்றெறிந்த செவ்வேற் குகனருளோ தென்புலியூர்
மன்றுதிகழ் வோனருளோ வாய்த்தவனை நன்றுபெற
நாமமன்றுட் செய்துவைத்த நற்றவத்தா லென்றுலகின்
மேம்படுநல் லோர்சைசிர மேலேற வேம்பநீ
டப்புமுலகு முளவளவும் வாழ்க வெனச்
செப்பிடுமெய் வாழ்த்தெண் டிசைமுழங்க மெய்ப்பினல்லூர்
நண்ணியசீ ராறுமுக நாவலனு மொண்பழவப்
புண்ணியனு மின்பப் புலோலிநகர்க் கண்ணிலவுஞ்
சாலுநய வாய்மைபெறுஉஞ் சைவப்ர காசவித்யா
சாலையிடைக் கற்குந் தனயர்பால் மாலிய
ராரணமோ கோவையோ வந்தாதி யோகிகண்டோ
சீரணவுஞ் சுத்த சிவாகமமோ போரணவு
காவியமோ வாய்ந்த கணக்கோ விலக்கணமோ
நாவியலு நீதித் துறைகளோ தாவிலா த
தங்க புராணமோ தர்க்கமோ நாளுநம
பக்குவமாய் வீறிப் பலிக்கவுநும் மக்கடமைக்

காணிலேக ரென்னுங் கருத்தாற் பிறபுலத்தி
னேனையே வைத்தி ரேமராங்காள் [illegible]
கல்விசில வாண்டுமுள காண்பினெனிற் சைவபத்தி
செல்வமுண்டோ மெய்நூற் றெளிவுண்டோ [illegible]
சன்னல்லைக்குங் கையாது காணியம மென்பானை
யிந்நிலத்திற் கண்டவர்கள் யார்.

ஈசுர௵த்திலே மழைகுறைந்தமையால சோழ தேசம் பாண்டிதேசங்களிலும், இலங்கையிலும் முன் வருஷங்களைப்போல நெல்விளைவில்லை. இதனால் யாழ்ப்பாணத்திலும் பஞ்சமுண்டாயிற்று. அதனைக்கண்ட **நாவலர்** தமதுகையாற் சிறிது பொருளுதவி, சில புண்ணியவான்களைக்கொண்டு ஏழைகளுக்குக் கஞ்சி காய்ச்சி வார்ப்பித்தார். பஞ்சம் நீங்குமளவும் இந் நன்முயற்சிக்கு உதவிசெய்து, அத்தருமத்தைநடத்து வோர் இலராதல்பற்றி, அத்தருமத்தை விட்டுவிடும் படி நேரிட்டது. அச்சமயத்தில் கல்வி, செல்வம். கொடை முதலியவற்றிற் சிறப்புற்றோங்கிய அத்தாவ க்காத்தாகிய சி. விறிற்றோ (Advocate C. Brito.) கொழும்பினின்றும் யாழ்ப்பாணம்வந்திருந்தார். அப பொழுது, ஏழைகள் பசியினால் வருந்துதலையும், அவ ர்களுக்குக் கஞ்சிவார்த்தல் இல்லாமற்போதலையுங் கண்டுங் கேட்டு மகிழ்ந்தவராகிய இப்பிரபு, தம்பொரு ள்கொண்டு சிலநாள்நடத்திவந்தார். அதன்பின் சில பிரபுக்களையழைத்து, ஒரு கூட்டங்கூட்டி, அதற்குக்

"கஞ்சித்தொட்டிக்கூட்டம்" எனப் பெயர்தந்து, அஞ்சித்தொட்டி நிலைபெறும்பொருட்டுப் பொருள் சேர்த்து, கஞ்சிவார்த்தலையொழித்து, அன்னங் கறி கொடுக்கும்படி ஏற்பாடுகளைச்செய்தார். அது ஆடிமாசமுதல் தைமாசமிறுதியாகிய எட்டுமாசங்களாக நடத்தப்பட்டது. தைமாசத்திலே மழை எங்கும்பெய்து, தானியமுதலியவைகள் மிகவிளைந்தமையால், ஏழைச்சனங்களெல்லாம் துன்பநீங்கி இன்பமுற்றார்கள். அப்போது கஞ்சித்தொட்டி நிறுத்தப்பட்டது. அத்தருமத்துக்குச் சேர்ந்ததொகையிலே செலவழித்துஎஞ்சிய தொகை ஏறக்குறைய ௭௱-ரூபா வரையில் யாழ்ப்பாண ஒரியன்றல்வங்கியில் (Jaffna Oriental Bank.) கட்டப்பட்டிருக்கின்றது. இது நிற்க.

ஈசுரவருஷம் தைமீ இலங்கைத் தேசாதிபதி யாழ்ப்பாணத்துக்கு வந்தபோது, யாழ்ப்பாணத்தாருக்கு அத்தியாவசியகம் வேண்டற்பாலனவாகிய சில விஷயங்களைக்குறித்து, ஒரு விண்ணப்பம் பண்ணியிருந்தார்.

வெகுதானியவருஷம் புரட்டாசிமீ மேற்படி வித்தியாசாலையிலே கல்விகற்கும் பிள்ளைகளைப் பரீக்ஷித்துச் சைவப்பிரசங்கங்கள் செய்தபோது, அ. சிவசம்புப் புலவர் சொல்லியபாடல்கள் வருமாறு:—

ஆறுமுகநாவலர்சரித்திரம்.

வெண்பா.

சைவப்ர காசவித்யா சாலையினிற் கற்பினுறாஉ
மெய்யெய் பயனு மெனக்கேட்டுந்—தெய்வசீர்
அற்றகழ கந்தோறு மன்னேதங் காதலரைப்
பெற்றவர்விட் டாரென் பெற.

எங்கெங்குஞ் செந்தமிழ்நூ லெங்கெங்குஞ் சைவமுந்
மெங்கெங்கும் பத்திநெறி யேறியவே—யெங்கெங்கு
நன்னணியசீ ராறுமுக நாவலனல் லைப்பதிவா
ழுன்னனுளத் தின்கருணை யால்.

கலித்துறை

மூன்றுடு நால்வர் முதலாப்தர் தென்னன் முதன்மன்னட
பன்று ளினிது வளர்த்தமெய்ச் சைவமும் பைந்தமிழும்
பின்றுளி ளாறு முகநா வலனெம் பெருந்தகையோன்
றன்றுலவ் வாறு நிகழக்கண் டோமிது தான்வியப்பே.

காவலர் வைகியென் செல்வர்கள் வாழ்ந்தென் கலைஞர்பிற
ரோவற வைகியென் மற்றவர் வைகியெ னுணைமைத்தோன்
லாவலிற் கற்பவர் பாலெளி தூட்டிடு மாறுமுக [ஞா
நாவல ஞரிருந் தாலுயிர் யாவுக்கு நற்சுகமே.

விருத்தம்.

நன்றுசெயுங் கருத்தினிரே னவையில் சிர்த்தி
நல்லைநக ராறுமுக நாவலன்முன்
பொன்றிலருந் தமிழ்பொன்றும் சைவம் பொன்றும்
பொன்றிடா மேபுரிவார் புவிக்கணில்லை

யென்றுமுணர் வீரியவினை யூழி மட்டு
மீண்டிருத்தி யருளெனவுற் றிரந்துடோழை
மன்றனடித் துணையில்வரங் கிடப்ப வின்னோ
வம்மினோ நமரங்காண் மறுக்கலீரே.

மாறுபடு சத்துகைப்பொய்ம் மதங்க ளாய
வல்லிருண்முற் றும்வெருவி மடிந்துவீழ
வாறுமுக நாவலனு மலரி வான்மை
யருப்பிரசங் கச்சுடரோ டிணையவாய்ந்த
பேறுடைய தெனிற்றொல்லைப் புலோலி யூரிற்
பிறங்கியகல் லூரியிதிற் பிரிவுறாமற்
றேறுமகிழ் வொடுகற்குஞ் சிறுவ ரின்னுந்
திருந்துவரென் பதற்கையஞ் சிறிதுமின்றே.

அப்போது ம. முத்துச்சுவாமிக்குருக்கள் சொல்லிய பாடல் வருமாறு:—

பஃறொடைவெண்பா.

சீரேறு நல்லைத் திருநல்லை யென்றுலகிற்
பேரேறு தெய்வப் பெரும்பதியி னேரேறு
கங்கா குலமாங் கவின்றிலகும் வாண்பரவை
மங்கா துதித்து வளர்பதியாம் பொங்குபுகழ்ப்
பாவலர்கள் போற்றும் பண்பேறு மாறுமுக
நாவலனென் றேயுரைசெய் நல்லறிஞ ரேவலுடன்
புந்தியெனு மந்தரத்தாற் பூரணமாம் பல்கலையென்
சிந்து வினைமதித்துச் செம்பொருளாம் புந்திமகிழ்

செவ்வியதோர்பேரமுதத்தீஞ்சுவையைத்தேர்ந்தெடுத்தாங்
கவ்வியமில் சிந்தை யரும்புலவர்க் கெவ்வமிலா
நேயமுட னூட்டியே நெஞ்சை மகிழ்வித்தான்
ஞாயனையன் றண்ணளியான் ஞான்.

அப்போது அ. வேன்மயில்வாகனர்சொல்லிய பாடல்கள் வருமாறு:—

கலித்துறை.

வரமுடை யாறு முகநா வலனென்னு மாமுகில்போய்ப்
பரமுடைக் கல்வி யெனுங்கடல் வற்றப் பருகிவந்தே
புரமுடைப் பூதல மாந்தர்த நெஞ்ச வுயர்செறிவிற்
றிரமுடைப் போதனை யாமழை தூய்ச்சிவந் தேக்கியதே.

விருத்தம்.

ஆறுமுக நாவலன்சீர் கேட்டே யஞ்சி
யருந்தமிழ்சே ரகத்தியனும் பொதியஞ் சார்ந்தான்
வீறுடைய சேடனும்பா தலம்போய் வீழ்ந்தான்
வேறுள்ள புலவரெல்லாம் வெருவி நின்றார்
பேறுடைய விவர்பெற்றி யிவ்வா றென்னிற்
பெருமைசேர் பசுபதியைப் பேணு ராகி
மாறுபடத் திரித்துணர்ந்து பசுவைப் பேணு
மாந்தரெல்லா மென்செய்வார் மாள்வா ரன்றே.

வெண்பா.

சீரேறு நல்லைநகர்த் தேசிகனா நாவலனார்
நாரேற நாமுன்செய் நற்றவத்தால்—நேரேறப்
போந்திலரேற் சைவமெங்கே பூதியெங்கே கண்டியெங்கே
யேந்துபுக ழைந்தெழுத்தெங் கே.

அவ்வித்தியாசாலையிலே அம்மாசம் ௨௯-ல் சைவப பிரசங்கஞ் செய்தருளியபின் ஒரு பெருமழைபெய்தது. * அப்போது அ. சிவசம்புப்புலவர்சொல்லிய பாடல் வருமாறு:--

கலித்துறை.

அன்பர்கண் ணீர்மழை யுஞ்சிவ ஞானமெய் யருண்மழைய
மன்பிர பந்த மழையும் பிரசங்க மாமழையுங்
கொன்புனை நீலப் புயலின் மழையுங் கொடைமழையு
மின்னொடு மல்கப் புலோலிமெய் வாழ்வினி லேறியதே.

அப்பொழுதுசெய்த பிரசங்கங்களொன்றிலே, புறச்சமயமாகிய சமணசமய வழி ஒழுகிய செட்டிச்சியாகிய கண்ணகையைத் தெய்வமென வணங்குதலும், அம்மாத்திரத்திலல்லாது சிவகுமாரர்களாகிய விக்கினேசுரக்கடவுளையும், சுப்பிரமணியக்கடவுளையுங் கண்ணகையினிருபக்கத்திலும் வைத்து இவர்களோடு அக்கண்ணகையைச் சமத்துவப்படுத்திப் பூசித்தலும் அதிபாதகமென்றும், இப்படிப் பூசிப்பவர்களும் வணங்குபவர்களும் யாதொருபயனையும் அடையமாட்டார்களென்றும், பயனையடையாமை மாத்திரத்திலல்லாது அச்சிவகுமாரர்களுடைய கோபத்துக்கு இவர்கள் இலக்காவார்களென்பது சத்தியமென்றும், இக்கண்ணகையின் சரித்திரமும், இக்கண்ணகையின் கணவனாகிய கோவலன் சரித்திரமும் இலக்கியங்களுளொன்றாகிய

சிலப்பதிகாரத்திலே சொல்லப்பட்டிருக்கின்றதென்றும் விரித்துப்பிரசங்கித்தார். அதன்பின்பு சிலநாளிருந்து மீட்டும் யாழ்ப்பாணம்வந்தார். அவ்வருஷம் பங்குனிமாசத்தில் சுரத்தாற் பிடிக்கப்பட்டு இருந்தார். அப்பொழுது அவரைத் தரிசிக்க வந்தவர்கள் அவருடைய அசௌக்கியத்தைக் குறித்துத் துக்கப் படும் பொழுதெல்லாம், சரீர நிலையாமையைக்குறித்துப் பலவாறுகச்சொல்லி, அவர்களைத் தைரியப்படுத்துவார். அச்சுரம் சிலநாட்களில் நீங்கிவிட்டது. அப்போது அவருக்கு வயசு ருசு ஆயிற்று.

சைவசித்தாந்த சமயாசாரியராகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் சிவசாயுச்சியமடைந்த திருநக்ஷத்திரமாகிய வைகாசிமாச மூலநக்ஷத்திரத்திலே வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாசவித்தியாசாலையிலே சைவப்பிரசங்கஞ் செய்தபோது, பிரசங்கத்துக்கு வந்திருந்த சனங்களைவிளித்து "நான் உங்களிடத்தே கைம்மாறுபெறுதலைச் சிறிதுமெண்ணாது, நச்சமயத்தவர்களோடும் புறச்சமயத்தவர்களோடும் பெரும்பகையையெடுத்து, முப்பத்திரண்டுவருஷகாலமாக உங்களுக்குச் சைவசமயத்துண்மையைப் போதித்துவந்தேன். எனக்குப்பின் சைவசமயங் குன்றிப்போமென்று பாதிரிமார்கள் சொல்லுகிறார்கள். ஆதலால், நான் உயிரோடிருக்கும்போதே உங்களுக்காக ஒரு சைவப்பிரசாரகரைத் தேடிக்கொள்ளுங்கள். இன்னும், என்

னைப்போலே படித்தவர்களும் சன்மார்க்கர்களுமாய் அநேகர் வருவார்கள். ஆனால் உங்களுடைய வைவைக் கேட்டுக்கேட்டு கைம்மாறுகருதாது சமயத்தைப்போதிக்க என்னைப்போலே ஒருவருமவரார்" என்று அவர்களுக்குச் சொல்லியருளினார்.

பிரமாதிஸு கார்த்திகைமீ ௰௨ உ செவ்வாய்க்கிழமையிரவு அவருக்கு அஜீரணக்கியமுண்டானது. மற்றைநாள் ஸ்நானம்பண்ணக்கூடாதிருந்தமையால வேதாரணியத்துச் சைவாசாரியர் ஒருவரால் அவருடைய பூசைசெய்யப்பட்டது. அப்போது நாம அநுஷ்டியாகஞ்செய்து, புறமண்டபத்தினின்று புஷ்பாஞ்சலித்தியஞ்செய்து இருந்தனர். மற்றைநாளும் அவ்வாறேசெய்தனர். மற்றைநாள் அநுஷ்டியாகஞ்செய்து, புறமண்டபத்தினின்று பூக்களைக் கைநிறைய ஏற்று, அப்பூக்களை ஒவ்வொன்றாக எடுத்து, தமது சிரசிலே போட்டுக்கொண்டு, அஞ்சலிசெய்து, திரும்பிவந்து சயனத்தின் மீதுபடுத்தனர். அன்றிராத்திரி ஐந்துநாழிகைவரையில் அறிவிற் சற்றேனும் பேதமில்லாதவராயிருந்து தேவாரமுதலிய அருட்பாக்களை ஓதும்படி கட்டளையிட்டு, அவைகளோதப்படும்போது சிதம்பரம், காசி, மதுரை, திருச்செந்தூர்முதலிய புண்ணியஸ்தலங்களின் விபூதியணிந்து, உருத்திராக்ஷம்பூண்டு, கங்காதீர்த்தமுட்கொண்டு, கைகளைச் சிரசின்மேற்குவித்து, உயிர்க்குயிராயுள்ள சிவபெருமானுடைய திருவடிகளிலே

சிரசைத்தவைத்து, தமது ஐம்பத்தாறும்வயசும் ௰௧-ம மாசமுமாகிய பிரமாதிஸு கார்த்திகைமீ ௨௧வ சுக்கிர வாரமும் மகநக்ஷத்திரமும் சத்தமிதிதியும் கூடிய புண்ணியகாலத்திலே, இரவு ௰ நாழிகையிலே ஸ்ரீ நடராஜப்பெருமானுடைய குஞ்சிதபாத நிழலை யடைந்தார். இருபத்திரண்டாந் தேதியாகிய சனிக்கிழமை அவருடைய திருமேனி விபூதி உருத்திராக்ஷமுதலிய சிவசின்னங்களாலும், பிறவற்றாலும் அலங்கரிக்கப்பட்டு, மிகச் சித்திரிக்கப்பட்ட பூந்தேரின்மேல் ஏற்றப்பட்டு, எண்ணில்லாத சைவசமய பக்தர்கள் சூழ்ந்துசெல்ல, அருட்பாக்களை ஓதுவார்க ளோதிக்கொண்டுவர, வனத்தின்கண்ணே கொண்டு போகப்பட்டு, அங்கே வரணி கபணவாய் ஆதீனத்தார் முன்னிலையில் வேதாரணியத்துச் சைவாசாரியரால் சமயவிசேட நிர்வாண அந்தியேட்டிகள் செய்யப்பட்டு, அன்றிராத்திரி எட்டுநாழிகைவரையில் பரிமள மிகுந்த சந்தனப்பூம்பள்ளியிசைத் தருவித்துத் தகிக்கப்பட்டது. பாஷாண ஸ்தாபனமுதலிய கிரியைகளும் முறையே செய்யப்பட்டன.

திருச்சிற்றம்பலம்.

முற்றிற்று.

ஆறுமுகநாவலர்திருவடிவாழ்க.

தமிழ்நாட்டிலுள்ள சைவசமயிகளை ஈடேற்றும்பொருட்டுத் திருவவதாரஞ்செய்தருளிய சற்குருநாதசுவாமிகளென்னும் திவ்வியதிருநாமத்தையுடைய **ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர்** அவர்கள் கார்த்திகைமாசத்து மகநக்ஷத்திரத்திலே விதேகமுத்தி யடைந்தார்களாதலின், அவர்களிடத்தே கல்வி கற்றுக்கொண்டவர்களும், அவர்களாலே தாபிக்கப்பட்ட சைவப்பிரகாசவித்தியாசாலைகளிலே கல்வி கற்றுக்கொண்டவர்களும், அவர்களுடைய பிரசங்கங்களாலும், புத்தகங்களாலும், பத்திரிகைகளாலும் பயனை எய்தினோர், எய்துகின்றோர், எய்துவோர்களுமாகிய எல்லோரும், அம்மாச நக்ஷத்திரத்திலே அவர்பொருட்டுக் குருபூசை செய்யத்தக்கது. இன்னும் அவர்களை நினைப்பிக்கும்பொருட்டுத் தங்கள் தங்கள் வீடுகளிலே அவர்களாலே செய்யப்பட்ட புத்தகங்களை வாங்கிவைத்து வாசிக்கத்தக்கது.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

———·*:———

வேதாகமோக்த சைவசித்தாந்தப் பிரவர்த்தகரும், சிவாகமவிற்பன்னரும், திருநெறித்தமிழாகிய தேவார திருவாசகங்களின் உண்மைப்பொருளுணர்ந்தவரும், இலக்கண விலக்கியக்கடலை நிலைகண்டுணர்ந்தவரும், சிவனடியாரைச் சிவனெனமதிக்கும் மெய்யடியாரும், தமிழ்நாடெங்கும் நல்லறிவுச்சுடர்கொளுத்தி மெய்யறிவை யூட்டிய சைவாசாரியரும், நிருவாணதீக்ஷிதரும், நைட்டிகப்பிரமசரியவொழுக்கத்திற் றவறாதவரும், சைவப்பிரசங்கமென்னும் விடாமழையைப் பொழியுந் திருவாயையுடையவரும், காலந்தோறுஞ் சிவனடியாருக்குத் திருவமுதுகொடுக்குஞ் சைவப்பிரபுவும், பரசமயிகளை ஓட்டெடுக்கச்செய்த பரமாசாரியரும், சிவஞானநூல்களை ஓதல், ஓதுவித்தல், கேட்டல், கேட்பித்தல், கேட்டதைச் சிந்தித்தல் என்னும் ஞானயாகஞ்செய்தவருமாகிய **ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுக நாவலரவர்கள்**, ஸ்ரீசிதம்பர நடராஜப்பெருமானுடைய குஞ்சிதபாதநிழலை யடைந்தபொழுது, சொல்லப்பட்ட செய்யுட்கள் வருமாறு:—

சென்னபட்டணம்:

ம ா. ா. ஸ்ரீ

சி. வை. தாமோதரம்பிள்ளை.

—————:*:—————

விருத்தம்.

வேதம்வலி குன்றியது மேதகுசி வாகம
விதங்கள்வலி குன்றி னவடற்
சூதன்மொழி மூவறுபு ராணம்வலி குன்றியது
சொல்லரிய சைவ சமயப்
போதம்வலி குன்றியது பொற்பொதிய மாமுனி
புகன்றமொழி குன்றி யதுநம்
நாதனிணை ஞாலமிசை நாடரிய ஆறுமுக
நாவல ரடைந்த பொழுதே.

வெண்பா.

நல்லைநகர் ஆறுமுக நாவலர்பி றந்திலரேற்
சொல்லுதமி ழெங்கே சுருதியெங்கே—எல்லவரும்
எத்தும்பு ராணாக மங்களெங்கே ப்ரசங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே யறை.

சிலேடைக்கலித்துறை.

தகைசேர் தமிழ்க்குத் தனிமுதல் வன்கந்த வேள்குமர
னகுவே றலமிசை யான்புல வோன்குரு நல்லையறு
முகநா வலனர ஞர்க்கினி யான்புகழ் மொய்ம்பணிம்பர்
இகல்சூர் மதப்பகை செற்றீச ஞருல கெய்தினனே.

நக்ஷத்திர வெண்பா.

கார்த்திகைமா தத்துமகங் காசினிக்குச் சைவத்தே
பார்த்திப் பரசமயஞ் சேதித்துச்—சீர்த்திபெற
மோவுதமிழ் தந்தகந்த வேணல்லூ ராறுமுக
நாவலர்வீ டுற்றதிரு நாள்.

குறள்.

நாயனார் நாற்குரவர் நாவலர்தென் ஞாலமுய்ய
மேயினா ரீசனருள் மேல்.

உடுப்பிட்டி:

ம. ள. ள. ஸ்ரீ

அ. சிவசம்புப்புலவர்.

நேரிசை வெண்பா.

தேவாசு மெய்ந்நூற் றிறம்பலவு மாருயிருக்
காவலினாற் போதித்த வாறுமுக—நாவலனார்
சீர்முகத்தைக் கண்டவர்க டேண்டிரைப்பூ மண்டலத்தில்
யார்முகத்தைக் காண்ப தினி.

கற்றார் பிறரெல்லாங் காசினிப்பொய் வாழ்விலலைந்
துற்றார் செயற்பால வுன்னாராய்—முற்றார்
நயத்தகைய வாறுமுக நாவலனே யென்றுஞ்
செயத்தகைய செய்தான் றெளிந்து.

எழுபத்திரண்டுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நருமேவு பொன்னுலக நிகரான நல்லைத்
தலத்திலமர் சிந்தாமணி
சாலப்பன் னுடக்கந்த வேள்செய்து வைத்தவொண்
டவவித்தின் வந்தவிளைவு
சான்றாம துரைச்சங்க மூன்றுமிங் கொன்றாய்த்
தலைப்பட்ட பெரியசங்கஞ்
சமபூ சாங்கியம மேத்திய நயிட்டிகந்
தவறாப் பிரமசாரி
சம்ஸ்கிருத புராஷா வியாகரண சித்தாந்த
தர்க்கவே தாந்தநிலையந்
தகையுறும் பதிபாச பசுலக்ஷணப்ரபல
சைவாக மப்பொக்கிஷஞ்
சார்ந்தவர் தமக்கரிய நுண்பொருட் குவைதருஞ்
சகலசாஸ் திரசாகரஞ்
சத்யசிவ தர்மனித் தீக்ஷாவி சிட்டவா
சாரிபச மூகதிலகந்
தண்டமிழ்ப் பாவையை மூகந்துயிர்ப் பயிர்களைத்
தழைவித்த பருவமேகந்
தமிழ்நிலக் கனகவட பர்வத மூகட்டிற்
றயங்குமா ணிக்கதீபந்
தன்றுணை வழியினிற் பச்சைவ நாட்டையொரு
தனிபுரந் திடுமெய்யரச
தழனிரைய வாய்ப்புகுத் திடுமிதர சமயத்
தமத்தினைப் பருகுமென்றாம்.

மருமேவு வெண்கமல வாணிநட மகலா
மகத்வப்ர தாபமன்றம்
வழிவழித் தலைநின்ற பரமாப்த பரசிவ
மதாசார தெய்வசொருப
மாதவநன் மாணவகர் நெஞ்சகக் கோயிலில்
வளர்ந்திடுஞ் சேமவைப்பு
மாணிக்க வாசகர் முதற்குரவ ரோடறிஞர்
வாழ்த்தியேத் தியமெய்க்குரு
வாடும் பசிப்பிணிக் கறுசுவையு ணாத்தினம்
வழங்கிடுங் காமதேனு
வள்ளன்மை யொழியா திலங்குமா டம்பர
மகாராச ராசபிரபு
மதுரப்ர சங்கவமிர் தத்தினா லுலகத்தை
வாழ்வித்த சற்பாத்திர
மாண்புபெற முற்றியுண் ணெகிழ்ந்தின்ப மாமது
வழிந்திடும் பத்திக்கனி
வந்திரப் பவர்குறை விளக்கமுன் வேண்டுவ
மகிழ்ந்துதவு பாரிசாதம்
வாலறிவி னோருட் பாடனற வொழுகுறாஉ
மணிவளப் பூர்ணகும்ப
மண்டல மெலாம்பெரிது மேற்கொளமெல் கிக்குளிரு
மங்களசு கந்தபுஷ்பம்
வரசாது சனசங்க பூச்யபூ ஷணநடுவில்
வாய்ந்தநா யகரத்தினங்;

ருமேவு முயிர்களுக் கானந்த மெய்ந்நிலைமை
காட்டிய தெருட்ப்ரகாசங்
கவினும்வீ ணுபுர மகேபதி சிரத்தினொளிர்
காஞ்சன மணிக்கிரீடம்

கல்லூரி யூர்தொறு மமைத்துச் சிறூர்க்கினிய
கல்வியமு தூட்டுமன்னை
கற்பியல் வழாவகை நிரம்பிய வியுற்பனக்
கவினுருக இருகண்மணி
காதலிற் பலகாலு மோடிமெய்க் கல்விக்
கடற்கரைகள் கண்டவங்கங்
கங்கா குலப்புனித க்ஷீரோ ததித்தலைக்
காண்டகவுதித்தமதியங்
கலபமயி லூருமெம் மான்புகழ்ப் பணிகளமா
கதிர்செயு மணிப்பேடகய
கலைஞராம் பொன்னுயர்வு தாழ்வுக டெரித்திடுங்
காமர வரஞ்சியாணி
கலகப்ர சங்கவிப சங்கமிட லெஞ்சிக்
கலங்கச்செய் விசயசிங்கங்
கனிவுடைச் செந்தமிழ்க் கலைதலை யெடுத்துக்
களிப்புறச் செய்தவழுதி
கமையறி வடக்கமுத லாஞ்சிகர முடனெழூஉங்
கனசுகுண மாபூதரங்
காவலர்க ளேனையர்கள் காணிக்கை யொடுநிதங்
கைதொழுந் தேவாலையர்;

திருமேவு மன்னவர் தமக்குமுத் யோகத்
திறந்தேற்று மதியமைச்சு
தேசாபி மானமுஞ் சமயாபி மானமுஞ்
சிதையாமல் வாழ்ந்தவாழ்வு
சேர்ந்தவர் செயுங்குறையை யன்றே மறந்திடுஞ்
சித்தசுத் தித்தயாளு

திகழ்நாத பரியந்த விளைவெலா முடியத்
தெளிந்திடும் பெரியயோகி
தேற்றுறும் போதனு நியமசா மர்த்திய
சிரேட்டசன் மார்க்கபீடம்
திரிபகல நூலுரைகள் பலவுலகு வந்திடச்
செய்தவதி யூகசாரன்
சிற்றம் பலத்தாடு மானந்த நாடக
தியானபுண் ணியஸ்ரீமு
ஸ்ரீயாறு முகநா வலன்வரசு காணு'பூ
தித்தகைய சைவமுதல்வன்
செறிதரும் பிரமாதி வற்சரத் தேண்மதித்
தேதியிரு பத்தொன்றினிற்
செயசுங்க வாரமக ளாளபர பக்கமுறு
திதியெனுஞ் சத்தமியினிற்
றேசோ மயானந்த வாசாம கோசர
திகம்பர சமஸ்தசுரபூ
சிதவகில சகதண்ட நாதநித் தியசுத்த
சிவபதத் தெய்தினனே.

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வரமேவு தூய்யமறை யாகம வழக்கொடுநன்
மக்கள்பயி றேசமதனில்
வளர்தவச் சாதியி னுதித்திரா மதமுறு
மாபாக்ய மாண்புகுலவித்
தரமேவு கலைமுழு துணர்ந்துவாழ் வெனுமயற்
சாகரந் தப்பிமிடியிற்
றளரா தடக்கநிறை வாய்மைகொடை யாதிய
தழீஇயுயிர்கண் மாட்டன்புறீஇத்

திருமேவு மருணடப் பதிபாச பசுவிய
    றெரிந்துமெய்ப் பத்திவாய்ந்து
சிவபூசை செய்துதமிழ் நாட்டினைத் தனியரசு
    செய்துபல நூல்பரப்பி
யுரமேவு சைவப்ர சங்கஞ்செய் திளைஞர்கட்
    குணர்வுதரு கழகநிறுவி
யோங்குபுக ழாறுமுக நாவலன் பெற்றவுயர்
    வொருசேர் யார்க்குமிலையே.

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

ஓங்கியதொல் காப்பியத்திற் குரைமுன் செய்த
    வுவப்பினாற் சிலருரையா சிரிய னென்ன
வாங்கிளம்பூ ரணனைவியந் துரைத்தா ரன்றே
    னவ்வுரைய மிழிவின்க ணமைந்த தம்மா
தாங்குபுகழ் நாவலனுஞ் சிறப்புப் பேராற்
    றன்னியற்பே ருலகமெலாந் தழைக்க நின்ற
வீங்கிவன்செய் நூனுரைகள் பலசற் றேனு
    மிழிவின்கட் படுவவென் றியா ரியம் புவாரே.

வெண்ணீறுங் கண்டிகையும் வெண்பொற் றூசும்
    வெண்ணகையும் பவித்திரமும் விளங்கக் காட்டி
யுண்ணீடு பத்தியினர் போலிங் குள்ள
    வொருசிலர்தா முரைக்குமொழி யுவந்து கொள்ளே
மண்ணீடு புகழ்த்திருநா வலனார் சொல்லும்
    வாசகங்க ளவையவையே வைய முய்யப்
பண்ணீடு மொழிபங்கன் பகர்ந்த வாக்காய்ப்
    பணிந்துகொள்வே மிதுநமக்குப் பயன்பட் டன்றே.

வித்தகமெய்ந் நூலுரைக டுகளிற் பல்கி
விராய்க்கிடந்து வரம்பிகந்த விதங்கள் பல்வே
றத்தனையு மேடுகளின் முன்னோர்க் கற்ற
வாசிரியர் பெரிதுணர்வ ரவைநன் குய்ந்து
சுத்தமுறத் திருத்தியச்சி லிடுவித் தியார்க்குந்
தொலைவிலுணர் வுதிப்பித்தான் றொல்லைச் சீர்த்தி
யுத்தமநா வலனவன்போ லவற்றை யெல்லா
முய்த்துணர்ந்து திருத்தவல்லா ருலகத் தியாரே.

கட்டளைக்கலித்துறை.

மறையோ ரருட்சைவ தேசிகர் பாவலர் வாழ்ந்தனர்நூற்
றுறையோடு சைவந் தலைசாய்ந் திடக்கண்டு தூங்கினர்நா
விறையோ னொருந்தனி யேநின் றவற்றை யெழுப்பிநிறீஇக்
குறையோ வறவைத் ததற்கென்கைம் மாறு கொடுத்தனரே

பாவலர் பற்பலர் செல்வர்கள் பற்பலர் பாரடங்க
மேவின ரேனு மவரா லுலகுக்கு மெய்ப்பயனென்
றுவல றலிங்கு நாளுக்கு நாள்வந்த நன்மையெல்லா
மேவருந் தேர்வ ரிவன்போல் வருபவர் யாரினியே.

என்பிர பந்தங்கள் கேட்டுப் புலமை யிருஞ்சிறப்பீந்
தன்பிரி யாமற் பரிசு செயுமென் றறைந்தெவர்க்கு
நன்பிரி யத்திற் றலைமையெல் லாந்தந்த நாவலனு
ரின்பிற வாநிலத் துற்று ரினித்துணை யாரெமக்கே.

ஆரூர னில்லைப் புகலியர் கோனில்லை யப்பனில்லைச்
சீரூரு மாணிக்க வாசக னில்லைத் திசையளந்த
பேரூரு மாறு முகநா வலனில்லைப் பின்னிங்கியார்
நீரூரும் வேணியன் மார்க்கத்தைப் போதிக்கு நீர்மையரே.

புல்லரை யேயுள்ள சொற்பொருள் யாவும் புலவர்தெரீஇ
நல்லன வாகப் புனைந்துவிட் டாரினி நாமென்செய்வேந்
தொல்லிய லாறு முகநா வலனைச் சுருக்கமறச் [கவே
சொல்லிய நாமகட் கெண்ணமுண் டேலென்றுஞ் சொல்லு

கும்பகோணம்:

ம. ரா. ரா. ஸ்ரீ

பூ. முருகேசபிள்ளை.

—:*:—

வெண்பா.

ஆறுமுக நாவலனை ஆருமுனை ராப்பொருளைத்
தேறுமுகங் கொண்டு தெளிந்தானை—ஆறுமுகம்
என்றிருக்க ஓர்முகமும் எங்களுக்குத் தோற்றுமற்
சென்றொளித்தா னெந்தோ சிவா.

காணுங்கண் ணின்னுமொன்று கண்டுகொண்டோ மென்று
பாணம் மகிழும் பருவத்தில்—தாணுவெனுஞ் [யாழ்ப்
சங்கரபண் டிதன்முன் சாய்ந்தான்பின் ஆறுமுகப்
புங்கவநீ யும்மறைந்தாய் போய்.

ஆறுமுக நாவலனென் றுலெவரு மன்புகொண்டிங்
கேறுமுக மாயெம்மை யேற்றுவந்தார்—ஆறுமுக
நாவலனே யின்னினியே நம்மையொரு நாயென்றும்
பாவினையும் பண்ணுர்கள் பார்.

திங்களணி செஞ்சடையான் றேவனென வந்ததுவும்
அங்கவனால் நூலா யமர்ந்ததுவும்—எங்குமிசை
கொண்டியாழ்ப் பாணங் குலாவியதும் ஆறுமுக
அண்டர்பிரான் வந்தபின்பே யாம்.

ஆரிருந்தென் ஆர்சிறந்தென் ஆறுமுக நாவலன்போல்
ஆரிருந்து போதிப்பார் ஐயையோ—ஆறணிந்து
தேக்குமதிச் செஞ்சடிலத் தேவுருவு கொண்டாலும்
வாக்கவனைப் போல வரா.

எவ்விடமும் நின்புகழே எவ்விடமும் நின்பேரே
எவ்விடமும் நின்சொல்லே எய்தியபோல்—எவ்விடமும்
எக்கா லமுமில்லை இன்னினியார் நின்புகழ்க்குத்
தக்கார்சொல் நாவலன்நீ தான்.

கந்தவேள் செய்தவம்போற் காணுந் தவமுமவன்
மைந்தனும் நாவலன்போல் மைந்தர்களும்—செந்தமிழில்
வல்லவர்க ளன்னவன்போல் வந்திடுவ தும்முலகில்
இல்லைஇல்லை இல்லை இனி.

கட்டளைக்கலித்துறை.

மாமிக்குங் கொண்ட மருகிக்குஞ் சண்டையை மாற்றியிந்தப்
பூமிக்குட் கல்வியுஞ் செல்வமுஞ் சேரப் புலவரெவர்
தாமிக் கடைந்தவர் நின்றனைப் போலிந்தத் தன்மையினால்
நீமிக்க வன்நல்லை நாவல னேயிது நிச்சயமே.

நிந்தாஸ்துதி விருத்தம்.

வாணிதனை வசப்படுத்தி மலரயனை நான்முகனாய்
மயங்கச் செய்து
பேணியவ ளடிபணிந்து பிரிவகற்றிப் புணர்ந்தவனைப்
பிரமந் தேர்ந்த
மாணியென்றும் நீதியுளா னென்றுஞ்சொல் வகையெங்கே
இன்னுச்சொன் மாண்டநின்னைக்
காணுங்தோ விறப்பதுவிங் காறுமுக நாவலனே
கமிப்ப தன்றே.

நீர்வேலி:

ம. ா. ா. ஸ்ரீ

சிவ-சங். பண்டிதர்

சிவப்பிரகாசபிள்ளை.

—————:*:—————

தேற்றரவு வெண்பா.

நையலிரோ வையகத்தீர் நாவலன்ற்ன போயினனென்
றையனவன் முத்தி யடைந்தனனால்—மெய்யே
நலமடைந்தா னென்றே நனிமகிழ்க யாரும்
பலபுலம்பி யென்னோ பயன்.

வெண்பா.

செய்யபிர மாதியினிற் றேள்பின்னூர் சத்தமியில்
வையமுயச் சைவம் வளர்த்தபிரான்—துய்யபுகழ்
ஆறுமுக நாவலன்ற ஞஞ்சிவஞா னத்தடைந்தான்
தேறுசிவ சாயுச் சியம்.

———

ஆவரங்கால்:

ம. ா. ா. ஸ்ரீ

சு. நமச்சிவாயபிள்ளை.

—————:*:—————

வெண்பா.

தேறுமுது சர்வகலை தேர்ந்த ஸ்ரீ ஸ்ரீ
ஆறுமுக சாமியே யப்பனே—கூறுமுதற்
சற்குருவே சீனியே சர்க்கரையே கற்கண்டே
இக்குவல யம்விடுத்த தேன்.

ஈசனினிச் சைவநிலை யிட்டுவர யாரிடத்து
நேசமொடு வைப்பனதை நீயறிவாய்—ஓசைத்
திருவாய் மொழிந்து திடமில்லா நாங்கள்
ஒருவா றுறச்செய்வா யே.

நல்லசிவ நீதி நாட்டவுநாம் பேயர்சிலர்
அல்லவென்று தள்ளுவதென் னுமென்று—வல்லபர
காயப் பிரவேசங் கண்டதினின் றொன்றியற்றத்
தேயத் தொளித்தாயோ செப்பு.

சற்குருவே மெய்த்திருவே தண்ணளியே விண்ணொளியே
சொற்கிருந்தா யெங்கிருந்தாய் சொல்லாயே—நிற்குமுனம்
குற்றமது செய்தேமோ கோடுநெறி பெய்தேமோ
பெற்றியது வந்துவெளி பேசு.

பண்டிதர்கள் மாண்பகலப் பட்டாரே பாரிடத்தில்
மண்டுகலை வாணியும்பின் வாங்கினளே—தொண்டரெல்லாம்
தம்மா வியற்றார்போற் சார்ந்தாரே யாறுமுகப்
பெம்மானே நீபிரிந்த பின்.

ஆசிரியவிருத்தம்.

நாவலோ ரிறந்தா ரென்றசொற் கேட்டு
நாங்கள்மெய் மறந்தழு தேபின்
ஆவலாய்ச் சடங்கண் டாறுவ மெனவந்
தடுத்தபோ தருமவு னத்தே
தீவிர தரமா மலர்ச்சியோ டிருந்து
தேரினிற் றெருச்சென்று சற்றே
தாவிலாச் சடத்தை மறைத்தனை யையா
தளர்ந்தனம் வெளிப்படு குருவே.

கருசு

நாவலி பொறுத்த நற்குண மலையே
நாடெலாம் புகழ்ந்துநின் றேத்தும் -
தேவனே சிவநூற் பொருள்களைத் தேற்றித்
தெட்சிணா மூர்த்தியா யமர்ந்த
காவல னேயுன் கருணையைப் பிரிந்து
கடையரே மிவ்வுடம் புடனே
சாவதில் லாம லிருக்கவேலங் கண்டாய்
சற்றுவா நமதுசற் குருவே.

புத்தகத் தாலும் பூரண வொளியாம்
போதமார் பிரசங்கத் தாலும்
இத்தரை யுள்ளா ரெம்முட னறிய
இலங்குகண் டிகைதிரு நீறும்
உத்தம சிவசின் னங்களி னுண்மை
உயர்சைவ மார்க்கத்தி னுண்மை
வித்தகத் திருவாய் மலர்ந்தருள் புனிதா
விட்டதென் னெம்மைச்சற் குருவே.

யார்பிறந் திருந்து மெதைப்படித் துஞ்சி
ரெவ்வர செந்நிதி படைத்தும்
தேர்பிர போதஞ் செப்பினுங் கொள்ளாச்
சீரிலேம் மனங்கொண்டு தேற
மார்பினிற் றிருவைத் தோன்றுமூஞ் சிவனே
வையகம் யாவுக்குங் கடவுள்
நேர்பிற ரிலையென் றுரைத்துப்பின் னெம்மை
நீக்கிய தறமதோ குருவே.

பணச்செருக் காலும் பிறசெருக் காலும்
பாதகர் சிலர்பொய்த்த மதங்கள்

இணைக்கியிவ் விந்து தேசத்திற் பரப்பி
எம்மனோர் தமைவஞ்சி யாமல்
கணக்கறு பகைகள் வரவுமென னோது
களைந்தவை தஞ்சமாய் நின்றாய்
தணப்பறு திடத்தா ரெவரையத் தகையாத்
தங்கவைத் தேகினை குருவே.

மண்ணையும் வேண்டேம் பொன்னையும் வேண்டேம்
மற்றைய பொருளையும் வேண்டேம்
விண்ணையும் வேண்டேம் வேறிடம் வேண்டேம
விளம்பர சாதிய வேண்டேம்
தண்ணளித் திருவாய் மொழியமிர் தத்தைத்
தரும்படி வேண்டினந் தந்தால்
அண்ணலே பிழைப்பே மின்றெனி னலேவோ
மையகோ வையகோ குருவே.

நால்வகைச் சாதி விருத்தர்நற் றருணர்
நண்ணிக்கீ ழிருந்துகேட் டடங்க
நால்வகைப் பாதத் துள்ளும்வேண் டியதை
நலம்பெற மேலிருந் தருளி
நால்வகைச் சொல்லாஞ் செந்தமிழ் நெறியே
நாவலி யுடனுரைத் தருளி
நால்வகை யாமாச் சிரமநாட் டியதை
நமக்கியா ரினிச்செய்வார் குருவே.

உள்ளுறுந் துறவர்ச் சனைசெப தியான
வுண்மையா ரொருமரக் கலத்தால்
அள்ளலங் கொடிய வினைக்கடல் கடந்தின்
படைந்திற வாதிறந் தாயைத்

தெள்ளுபட் டணைத்தெம் மடிமுன் னறந்தா
  னென் றிடுஞ் செய்யுளிற் புகழ்ந்தான்
தள்ளரும் புலவ ரின்றென்ன செய்வார்
  சாற்றுவாய் மலர்ந்தெங்கள் குருவே.

கண்ணினுண் மணியே கருதரு மறிவே
  கருத்திருட் டெறுஞ்சுட ரேநாம்
மண்ணினிற் காத்த தந்தைதாய் பிரிய
  மாய்ந்திடுஞ் சிறுகமகார் போலத்
திண்ணமா முன்னைத் தேடிக்கா ணாது
  தேம்பியே புலம்பவுஞ் சிவனும்
பண்ணவன் போல வெங்குரின் றும்வாய்
  பகர்ந்திடாய் ஞாயமோ குருவே.

நீறுருத் திராக்கம் மந்திரம் பூசை
  நித்திய கருமமா கமங்கள்
ஆறாள தீக்கை மறையருட் பாக்க
  ளறமிலக் கியவிலக் கணங்க
ளேறிய தர்க்க மாதிய வெல்லா
  மிசைசிவ தர்மிணி தீட்சைப்
பேறிய னின்னே டொளித்திடா வண்ணம்
  பெருவர முவந்துதா குருவே.

துன்பெலாஞ் சகித்துச் சோதிசேர் போதஞ்
  சொல்லுவா ரீங்கிலை யெம்போல்
அன்பரே யாமு மினிச்சொலோ மெனமுன்
  னறைந்தனை பின்னுடல் விடுநாள்
இன்படை யருட்பா வோதுவா ரோய
  இம்மெனுங் குறிப்பிற்கை காட்டிப்
பின்புமோ தச்செய் துடனகன் றுயிப்
  பெருங்குறிப் பறிந்திலேங் குருவே.

செந்தமிழ் ழாரிய மாம்பல பாஷையிற் சேர்ந்திருந்து
நந்து மகில பொருளையும் வாரியிந் நாட்டகத்தோர் [ச்
உய்ந்திடக் காட்டி யடக்கிய நாவில்வல் லோர்மன்னடையை
சிந்தனை யோவெரித் தாயோ சிவந்த சிவாக்கினியே.

பார்க்கும் பதிபசு பாசமெய்ஞ் ஞானத்தைப் பண்புடையார்
யார்க்கும் பெறப்புத் தகமாக்கி யீந்துள் யமனடுங்கி
வேர்க்கும் படியுற்ற நாவலர் வாழ்தின வேலைதனைத்
தூர்க்கும் வகையெங்கு கற்றனை யோசிவ சூரியனே.

சுன்னாகம்:

ம. ா. ா. ஸ்ரீ

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

---:*:---

வெண்பா.

செல்லும் பிரமாதி தேண்மதிமூ வேழுபுகர்
புல்லபர சத்தமியிற் போந்தமகம்—நல்லதமிழ்ப்
பாவலராற் பாடப் படும்புகழா றுமுக
நாவலன்மோக் கத்தடைந்த நாள்.

கலிவெண்பா.

பூமாது வாழ்வுசெய்யும் பொன்னகர மென்னுநல்லைச்
சீமான் சிவன்பாதஞ் சிந்தைசெய்யுங் கோமான்
சகம்புகழுங் கந்தவே டன்னிடத்தில் முந்திச்
சுகம்பெறுமவ் வள்ளுவனர் சொன்ன மகன்றந்தைக்
காற்று முதவி யருமைத் திருக்குறளுக்
கேற்ற விலக்கியமா யிங்குதித்துச் சாற்றரிய

திண்மை பெறுஞ்சைவ சித்தாந்த சாகரத்தின்
றண்மை நலம்பருகிச் சைவமெனும் — உண்மையுள
செஞ்சாலி யோங்கச் சிறந்தபிர சங்கமழை
அஞ்சாது பெய்யும் அருண்முகிலே — மஞ்சாருஞ்
சோலைப் பெருங்காழித் தோன்றறிரு நாவலர்கோன்
வேலை யிடைக்கல்லின் மிதந்துவந்தோன் — சீலமிக்க
வாதவூர் வந்தவன்றே வாரதிரு வாசகங்கள்
ஓதிச் சிவபெருமா னொண்கழற்செம் — போதைநினைந்
துள்ளநெக்கு நெக்குருக வோட்டந் துடிதுடிப்பக்
கொள்ள வுடம்பு குறுவேர்வை — வெள்ளமெனக்
கண்ணீர் சொரியமயிர்க் கால்சிலிர்ப்ப மெய்ந்நடுங்க
எண்ணாத் தழுதழுப்ப இன்பவெள்ளத் — துண்ணாடும்
ஆனந்த முற்றே யயர்த்துப் பரவசமாய்
மோனச் சிவநூன் முறைப்படியே — ஞானமுறச்
செய்யுஞ் சிவபூசைச் செல்வா சிறியேனுக்
குய்யு நெறிகாட்டு முத்தமனே — துய்யதமிழ்ப்
பாடை யிலக்கியமும் பன்னு மிலக்கணமும்
தோடமறக் கற்றுணர்ந்த தோன்றலே — பீடுபெறும்
பன்னூற் கடல்கடைந்து பாலர்பெற வின்னமுதச்
சொன்னாடி நல்வசன சூத்திரமாச் — சின்னாளில்
இத்தரையில் யாவர்செய்வா ரென்னப் பலப்பலவாம்
புத்தகங்கள் செய்தருளும் புண்ணியனே — பத்தியினர்
பாவந் தொலைத்தருளும் பஞ்சாக் கரவிசிட்டம்
ஆவ லொடும்பேசும் ஆறுமுக — நாவலனே
ஆற்றகில்லே னாற்றகில்லே னந்தோ நினது பிரி
வாற்றகில்லே னாற்றகில்லே னார்க்குரைப்பேன்-சீற்றமுடன்
வந்த விடப்பனவன் வார்த்தைக் கொடுஞ்சரத்தால்
நொந்தேற் கிரங்கியரு ணோக்கதனைத் — தந்தவனே

கூறும் பரசமய கோளரியே மெய்யுணர்ச்சி
தேறு நினதருமை சிந்திக்குந் தோறுமெல்லாம்
என்னை யயர்த்தே னெம்பெருமா னின்பெருமை
தன்னைப் பெருஞ்சேடன் றானிருந்து பன்னாட்
பேசுகினு முற்றுப் பெறுமோ பெருந்தகையே
ஈசன் பெருங்கருணை இப்படியோ பேசியென்ன
கண்ணே யெனதிரண்டு கண்மணியே நாவலனே
மண்ணாதி யாமுடம்பு மாய்ந்தாலும் எண்ணருன்
கீர்த்தி யுடம்பு கெடுமோ கிளக்குமுண்மை
வார்த்தை யரிச்சந்த்ர மன்னவனே போர்த்தவிருள்
நீக்குங் கிரிவிளக்கே னின்னினெமக் கோகுரவர்
வாய்க்குநா ளெந்நாளோ மற்று.

கலித்துறை.

கல்விக் களஞ்சியங் கற்றவர்க் கேறு கருணைவள்ளல்
சொல்வித்து வப்பிர சாரகன் பூதி துலங்குமெய்யன்
நல்லைப் பதியின னாறு முகப்பெரு நாவலனுந்
தில்லைப் பதியின் நடராசன் சேவடி சேர்ந்தனனே.

முன்மடக்குப் பின்முடுகுவெண்பா.

சைவப்ர காசனர்கள் தம்வா யினிதடக்குஞ்
சைவப்ர காசவித்யா சாலைமன்ன—னுய்வடைந்தா
னர்க்கனக் கினிக்கணத்த னத்தமுத்த மிக்கருளும்
பர்க்கனக்க னக்கன் பதத்து.

பின்முடுகு வெண்பா.

என்கடிதம் என்கவிதை யார்க்கும் இனிதென்று
நன்குறவே பாராட்டு நாவலனார்—எங்கேயோ
கங்கைமுடிச் சங்கரன்பொற் கஞ்சமலர்ச் செஞ்சரண்விட்
டிங்குவர வுங்கருத்தோ என்.

வினாவுத்தரவெண்பா.

ஐந்தின்பின் னாவதென்ன வானனத்தின் பேரென்ன
முந்து நடுவின் மொழியென்ன—விந்திரற்கு
மாறுகொண்டோன் பேரென்ன வாக்கின் மிகவல்ல
வாறுமுக நாவலனே யாம்.

ஊரெழு:

ம. ள. ள. ஸ்ரீ

சைவ உதயபானு பத்திராதிபர்

சு. சரவணமுத்துப்பிள்ளை.

ஆசிரியவிருத்தம்.

அருமறையா கமமுறைக ளுலகி லோங்க
வடியனுளத் தஞ்ஞான திமிர நீங்கப்
பெருமையொடு தவவிரத முலகோர் தாங்கப்
பீடில்பர சமயகுழா மிரிந்தே யேங்க
வொருமையொடு நல்லைநக ருதித்தே வந்த
வுத்தமநல் லாறுமுகப் பெம்மா னேநின்
னிருமைபெறு திருவாக்கி னருமை தன்னை
யின்பமுடன் கேட்பதினி யெந்த நாளே.

சிவம்பழுத்த செழுஞ்சுவையே தேனே பாகே
தெவிட்டாத தெள்ளமிர்தத் திரளே மேலாந்
தவம்பழுத்த தனிவடிவே திருவெண் ணீறு
தயங்குதிரு மேனியுடைக் குருவே மிக்க

வெம்பழுத்த புறச்சமய திமிர மோட்டி
யத்துவித சுத்தசித்தாந் தத்தி னுண்மை
நவம்பழுத்த பொருள்காட்டிச் சைவ நாட்டு
நாவலனே நினைக்காணு நாளெந் நாளே.

தேனூறும் வாசகமோ ராறு நூறுந்
திருக் கோவை யென்னுமகப் பொருள்சேர் செய்யு
ளானூறு முரைத்ததிரு வாதவூரன்
நாவலர் கோன் காழியர் கோன் நல்வாகிசன்
பொனீறு மைந்தெழுத்துஞ் சைவ நூலும்
புவியினிடை நனிவிளக்கும் புனிதா மேலை
வானேறும் பொழினல்லை சேரு நன்று
வலப்பெருமா னினைக்காணு நாளெந் நாளே.

எத்திசையுங் கிரிதீபம் போலச் சோதி
யெறிக்குமருட் பிரகாச வள்ளா லின்ப
முத்திவழிக் குரிய நெறி யிதுதா னென்றே
மூதுலகோ ருணர வது முறையே காட்டிப்
புத்தமிர்த மனையவருட் பாக்க ளோதிப்
பூசனையீ சனுக்கியற்றல் பொருளாக் கொண்டோய்
நத்தமருந் தடநல்லை நகரில் வந்த
நாவலனே நினைக்காணு நாளெந் நாளே.

வேறு.

செல்லூரும் புருகூதன் சேணுடு போல் விளங்குஞ்
சீர்த்தி மிக்க
நல்லூரி னவதரித்த ஞானகுரு நாவலனே
ஞால முய்ய

வெல்லாத சிவாகமத்தின் பொருளுணர்த்தும் வித்தகனே
விதுரா நின்னை [போ
யெல்லேமு மொருங்கிழந்தே மின்னுமுனைக் காண்பதனை
யென் செய் வோமே.

கட்டளைக்கலித்துறை.

நல்லூரில் வந்திடு ஞானே தய குரு நாவலனே
வெல்லாத கல்வியுஞ் செல்வமு மேவினை மேதினியி
லெல்லாரு மேத்திட நற்குணம் பூண்டனை யென்பதனைச்
சில்லோ ரிவண்செயுங் கல்விச் செருக்கினிற் றேர்ந்தனனே.

முன்னாளிற் கம்பன் கவி காள மேக முதற் புலவர்
தந்நா வலிமையைக் காட்டின ரேயன்றிச் சைவநெறி
நந்நா வலப்பெரு மானுனைப் போனனி நாட்டினரோ
விந்நா ளினும்புல வோர் திரி வார்பல ரென் பயனே.

தேனே கனியோ வெனவே சுவைக்குஞ் செழுந்தமிழிற்
றானே தனக்கிணை யாகி யுதித்துயர் சற்குருவாய்
வானோர் புகழ் நல்லை வந்தரு ளாவலன் வான்புகழை
நானோ சொலவல்லன் சேடனுங் கூறிட நாணுவனே.

மல்லாகம்:

ம. ா. ா. ஸ்ரீ

சி. செந்திநாதையர்.

---:*:---

வெண்பா.

வன்றொண்டன் நாவலர்கோன் வாழ்வா வதுமாயம்
என்றுரைத்த தேவாரத் தின்பொருளை—நன்றியுடன்
சிந்தைசெய்தேன் நாவலனே சேர்ந்தாய்நீ என்பதனாற்
புந்திநொந்து துக்கமிக்க போது.

என்னடைக்கைப் பத்திரிகை நாவலனே நீயனுப்ப
என்ன தவஞ் செய்தேனோ யானறியேன்—அன்னதனுள்
உள்ளசில வாசகங்க ளுற்றுணரும் போதெல்லாம்
வெள்ளம பொழியும விழி.

சுன்னைக் குமார சுவாமியிடத தோர்கடிதம
என்னைக் குறித்தனுப்பி யுள்ளுவந்தேன்—அன்னநன்டா;
சேருமுன்னம் நாவலனே சென்றாய் சிவலோகம்
யாரும் பதைபதைக்க இங்கு.

கட்டளைக்கலித்துறை.

தேவாரம யான்சொலக் கேட்டு மகிழ்ந்து சிரத்தையுடன்
பூவாதி கொண்டு புரிசிவ பூசைப் பொலிவழகும்
பாவாணர் மெச்சச் செயும்பிர சங்கமும் பார்த்தினிநான்
நாவார வாழ்த்திடு நாளுமுண்டோ நல்ல நாவலனே.

கொக்குவில்:

ம. ள. ள. ஸ்ரீ

ச. சபாரத்தினப்பிள்ளை.

கலித்துறை.

நாமக ளாவிற் றுயிலுகை யாலலர் நான்முகனாய்த்
தேமரை மாதிடஞ் சேர்தலி னற்றிரு மாயவனாய்
மாமறை ஆகம போதனை யூட்டலின் மாணரனாய்ப்
பூமிசை மேவிய நாவல பூபதி போயினரே.

விருத்தம்.

சிவசமய கமலமதைத் தமிழ்நாடாந்
திருமடுவிற் செறித்த லர்த்திப்
பவமயறந் தாங்கணுற்ற பரசமய
விருள்கடமைப் பதற வோட்டித்
தவநெறியாந் தேரினிடைத் தனியூர்ந்து
தற்பரனு மாழி சார்ந்தான்
அவமகல வுலகுபெறு மாறுமுக
நாவலனு மனலி யோனே.

திருநெல்வேலி:

ம. ள. ள. ஸ்ரீ

க. வேலுப்பிள்ளை.

வெண்பா.

ஏறுபிர மாதிதனி னெய்துபுகழ்க் கார்த்திகையிற்
கூறபர சத்தமியாங் கோதிறிதி—வீறுமக
மாறுமுக நாவலனஞ் செல்வ மகிலகுரு
வீறுதிரு மேனியுறு மின்று.

கலித்துறை.

உதித்தாய் திகழ்நல்லை கற்று யெந்நூலு முலகமெங்கும்
மதித்தாய் பரய பதிசிவ னேயென வேறுமதஞ்
சதித்தாய் பின்னாறு முகநா வலசற் குருமணிநீ
கதித்தாய் பரம பதமடி யேயென்று காண்குவமே.

உருவுடம் பாறு முகநா வலன்விடுத் தோங்குமுத்தி
மருவுடம் பாக்கொண்ட வாவென்ப ராவென்பர் மற்றறியா
ருருவுடம் பாகி யொருநோயு மற்ற வவன்புகழாந்
திருவுடம் பானது நீடூழி காலந் திகழ்ந்திடுமே.

விருத்தம்.

திருவாளன் றிருவெழுத்தைந் திடையறா தொலிக்குமெழுந்
திருவாக் குஞ்சற்
றிருபாதங் கருதுளமும் விபூதியொளி தயங்குதிரு
மேனி யுஞ்சொற்
பொருளாழுந் திராவிடநின் மலமறைகொ டிருகரமும்
பொலிந்த நல்லை
யருளாள னாறுமுக நாவலனெங் குருபரனுக்
கடிமை செய்வாம்.

தற்காலஞ் சென்னையிலெழுந்தருளியிருக்கின்ற
ஸ்ரீமத்.
திருநெல்வேலித்தண்டபாணிசுவாமிகள்
ஸ்ரீலஸ்ரீ
ஆறுமுகநாவலரவர்கள்
அடைந்தமையைக்கேள்வியுற்று
ஆராமைமிகுதியினாலே
சிவபெருமானை நோக்கி
அருளிச்செய்த
பதிகம்.

—*—

நேரிசை வெண்பா.

அன்பர்களுக் காதரமா மாறுமுக நாவலனைத்
தன்பதத்திற் சேர்த்தசிவ சங்கரன்பால்—வன்பர்களை
வெல்லாமுன் பூதலத்தை விட்டுவரச் செய்ததற்
சொல்லாயென் பார்நந் துணை,

கலிப்பாக்கள்.

சொல்லூக மின்றியிகழ் துட்டமதப் புட்கடமை
வல்லூறு போலடக்கும் வன்மையுறு நாவலனை
நல்லூரில் வையாதிந் நாளேனின் பாலழைத்தாய்
பல்லூழி கண்டோர் பரவும் பரசிவமே.

பங்க மலியுநெறிப் பாழ்மத யானைகட்கோர்
சிங்க மெனவே சிறந்தபுகழ் நாவலனை
யங்க ணிலத்தன்ப ரழவேனின் பாலழைத்தாய்
செங்க ணெடுமாலைச் சினவிடையாக் கொள்சிவமே.

புன்கா தலித்தருந்தும் பூரியரெல் லாநடுங்க
வன்காரர் முகிலெனவே வாய்திறக்கு நாவலனைத்
தன்கார் கடற்பார் தயங்கநின்பா லேனழைத்தாய்
மென்காற் பெரும்பறவை யென்னுமுருக் கொள்சிவமே

சைவ சமயத் தனிக்கொடிபோற் றாரணியின்
மெய் வழக்கே நாளும் விளக்கியதோர் நாவலனைப்
பொய்வகுக்கும் பாழ்நெறிகள் பொன்றுமு னேனழைத்தா
யைவர்களு மாயவர்க்கோ ராதரமு மாஞ்சிவமே.

ஈழமுதற் றென்னா டருண்மூழ்கிப் போகாமல்
வாழவைத்த சைவ மருந்தாய நாவலனைக்
கூழையா ரேங்கநின்பாற் கூட்டியவா றென்னேயோ
வாழமுந்நீர் நஞ்சுண் டழியா தவிர்சிவமே.

செய்யதமிழ் மூன்றுந் திறனழிந்து போகாமல்
வைய மிசை விளக்கும் வாய்மையுறு நாவலனைத்
துய்ய மனத்தொண்டர் துணுக்கமுற வேனழைத்தாய்
மையணிந்த கண்ணியொடு மால்விடையூ ருஞ்சிவமே.

அன்று வடலூ ரருந்தமிழ்ப்பா வல்லானைக்
கொன்றுவிட்ட நீதிக் குறையொன்றும் போதாதோ
வின்றீநல்லூர் நாவலவ ரேற்றினையு மேனழித்தா
யொன்றுபட்ட நெஞ்ச ருணர்ந்தேத்து மொண்சிவமே.

வில்லடிக்கு வாளி விரைந்தளிக்கை மெய்யென்று
னல்ல புக ழோங்கு நல்லூர் நாவலனை நானிலத்தோர்
அல்லலொழிந் தின்புறுமு னங்கழைத்த னீதிகொலோ
புல்லறிஞர் தேறாப் பொருளாம் புகழ்ச்சிவமே.

கள்ளைநிகர் சொல்லாற் கருத்துருக்குங் கன்னியர்மால்
எள்ளையொத்துந் தோயா திலங்குபுகழ் நாவலனைக் [யே
கொள்ளையரு ணல்கியொன்றார் குன்றவைத்துப் பார்த்திலை
பிள்ளையிரண்டுபெற்றும் பேயுடனாடுஞ்சிவமே.

நால்வரனை யாரொருவ னாளிலத்திற் றோன்றுதலாற்
பால்வன நீறோங்கப் பசுவாழ வேண்டுமென்றுன்
கால்வணங்கு நாவலனைத் காண்பதன்மு னேனழைத்தாய்
செல்வளநீர்த் தில்லைச் சிதம்பரத்தில் வாழ்சிவமே.

ஆறுமுக நாவலனை யைந்தாங் குரவனருட்
பேறுகண்டு துள்ளாமுன் பெற்றமுடை யானழைத்து
றேறும் விதத்தாற் றிருப்புகழோன் செப்புமிவை
கூறு மவர்பலருங் கூற்றன்வழக் கெய்தாரே.

ஸ்ரீலஸ்ரீ

நாவலரவர்களுடைய

மருகரும், மாணாக்கரும்

வித்துவசிரோன்மணியுமாகிய

ஸ்ரீமத்,

ச. பொன்னம்பலபிள்ளை.

—:*:—

நிலைமண்டில ஆசிரியப்பா.

திருமகள் கொழுநன் கருமனத் தழுக்கா
லருணெறி கருதா தகந்தை மேவி
பெருந்தத் திலங்கு பருத்த மருப்பு
முனைத்துக் குறுத்த தரத்த தாளு
நிமிர்ந்து குவிந்து நீண்ட நாசியுங்
குன்றிக் கன்னு நீல மேனியும்
பொலிந்த கேழற் பொலனுரு வெடுத்துப்
பாதலங் கீறிக் காணாப் பாதமும்
புண்டரி கத்துறை யண்டப் புத்தேள்
சிறகணு மங்குச முறழுந் துண்டமு
மாதிர மளக்குந் தாவில் சிறையும்
புயங்க மெட்டுந் தியங்கிக் கலங்கக்
கொழுவிக் கிழிக்கு முகிரார் தாளுமப்
பொருப்பினைப் பொரீஇத் தருக்கு மேனியுங்
குலவுபுண் டரமா யிலகு சேண்போ

யண்ட ரண்ட மனைத்துங் காணக்
கூவிள மறுகு கொன்றை தும்பை
மாவிணர் மத்தம் வதிமதி முடியு
முடைய சங்கர னெண்மல ரடியை
யகத்தி லிருத்தி யருச்சனை புரிந்தோய்
தெய்வ விரதனுந் துய்ய னெய்க்கு
நயிட்டிகப் பிரம சாரிநீ யெனினுந்
தகவெ னரிவையை யிதமுறத் தழீஇப்
பல்லுயிர்க் கருளாஞ் செல்வனை [illegible] தந்தே
சியனடி யவரா மவமில் விருந்தைப்
புறந்தந் திடலாற் சிறந்த வதிரு
ரில்லறத் தோன்மற் றிவனெனக் குழீஇச்
சொல்லி வழுத்த மல்கு தூயோய்
எம்பந்த மறுக்குஞ் சம்பந்த நாமனு
மாலமர் கடவுளா மால்விடை யோனை
யைங்கதிப் பரியிற் றங்குவித் தோனு
மிடங்கர் வாயி லடங்கு மறையோ
னுபவீத மன்ற லுறவிதித் தோனு
மும்மதக் களிறு தன்னைவந் திக்கப்
பரனை வந்தித்த வரனுர் சீலனு
மொருவடி வெடுத்தென வருளொடு பொலிந்தோய்
கொடுங்கோ லில்லாக் கடுங்கோன் வழுதியா
னடைபெற் றுலவிய கடையில் காட்சித்
தலைச்சங் கத்துக் கலைப்புல வோராந்
திரிபுர மெரித்த விரிசடைக் கடவுளுங்
குன்ற மெறிந்த குமரநா யகனுஞ்
சந்தனப் பொதியச் செந்தமி ழோனு

மதித்த புலமை கதித்த மேன்மையோய்
ஐந்தை யடக்கி யாறை வென்றே
யொன்றை யுறவுணர்ந் தேழை யொருவினோய்
இலங்கையிற் கொடுங்கோல் கலங்கா தோச்சுபு
மறங்கள் வளர்த்த பறங்கி மன்னர்
குடியா யுள்ளோ ரிறையா வொவ்வோ
ராண்கன் றன்பா யாமுண வளித்தல்
வேண்டுமென் றிசைத்த வெம்பணி மரும
னாடொறுங் கொடுத்தல் கண்டுளை னைந்தே
யிப்பவ வரசர்தேத் திருத்தலுங் கொடிசெறு
திருநெல் வேலியாந் தனதூர் நீங்கி
யுத்தம திசையெனு முதக்கிற் பொலியுங்
கவுட தேசம் விதியி னடையூஉ
வாரிய மாகும் பாரிய பரவை
வறழப் பருகிப் பிறழ்கரு முகிலா
மகத்துற வுடனே புறத்துற வடைந்த
வாத ஞானப் பிரகாச வள்ளல்
பிறந்தை யுற்ற வறங்கெழு மரபோய்
அடியவ ருளத்திற் குடியா யிருத்தலி
னிதமயல் விளைக்கு மதன்மத னீக்கலி
னாணவ மாயை கன்ம மெனப்படு
மும்மதின் ஞான முழுத்தழ னகையாற்
பொடிபட் டொழிய வடல்புரி மேன்மையின்
வாதனை புரியும் பூதனைக் கடியுயிர்
பாலொடு பருகிய நீனிற மாயோன்
செங்கருங் கரங்களிற் சீர்செறி யுங்கர
மொன்று விருகுவ டன்றேந் தியதென

உந்தியொழுக் கேந்திய நிந்தையி லம்பிகை
சங்கரி தனையொர பங்கினில் வைத்த
நிர்க்குண நின்மல நித்திய னந்த
தற்பர னாஞ்சிவ சம்பு நிகர்த்தோய்
அரனடி யவரி னதிக னாதலிற்
செறிதுயி லறச்செறுத் தறிதுயி லமர்தலிற்
றிருமக டழுவிக் கருமை மேவலி
னுலகளந் துண்ட வொருவ னொத்தோய்
நாமகள் காமுறு கோமக னாதலின்
வேத வியலை விளங்க விரித்தலிற்
போத வியலார் வேதன் போன்றோய்
தொல்காப் பியனா மொல்காப் புகழுறு
முனிவர னருளிய துணியி னடைசேர்
மகன்வினை கிளப்பின் முதனிலை யியற்றே
யெனுஞ்சூத் திரவிதி யிசையவினை யிகந்தே
யுட்டெளி வுடைய பட்டணத் தடிகள்போ
லன்னையை யடிபணிந் தாதரித் திட்டோய்
தென்கோவை யென்னுஞ் சீரார் நகர்வாழ்
மேழிக் கொடியோர் வாழ்விற் குலாவ
வவதரித் திட்ட வருந்தமிழ்க் கவிஞனா
மானா வியல்பிற் சேனாதி ராய
முதலியு மவன்பாற் கலையெலாங் கற்று
மதியாக் கலைஞக் குதிநவ் விகட்கோர்
புனைப்புலிப் போத்தா மனைப்புலி முதலி
பெற்றிடு பெற்றி யுற்றிடு சீர்த்திச்
சரவண முத்து முதலியாம் புலவனுக்
தேடிய பல்புக ழானவை யடைய

மன்னுறுநிற் பனுவற் பெருமான் புகழுடை
பொலம்பெறத் தழீஇய நலங்கொள்பே ருலகெலாஞ்
சொற்பயில் பண்டிதர் மெச்சு சீர்த்தியோய்
செந்நாப் புலவராஞ் சீர்சான் மணிக
ளோய்வின்றி யுறுமா கரமுந்
தென்மொழி யதனிற் றுன்னிய வணிசே
ரிரகுவம மிசைப்பெய ரியையிலக் கியத்தைத்
தரிசற வியற்றி வரிசை படைத்த
வரசகே சரியாம் புரையில்மே தையர்க்கு
சேட்ட னுய வாட்டமில் கவிதைப்
பரராச சேகர னென்னும் ப்ரூர்
பணியு மரசற் கணிகொ ணகரமு
மாகிய நல்லையாம் பெரிய நகருறை
சத்திய வுத்தம வித்தக வேளாண்
குலதீ பம்மென நிலவிய கந்தவே
ளரிதிற் புரிந்த கரிசக னென்பால்
வானோர் போற்று கான்முளை யாகி
யாறு முகனெனும் பெயரா தரித்த
பரம குரவ வரமிகு நிலைய
னரினைத் தாங்கு பணாடவி பொறுத்த
சேடன் றுதிக்க வேலாச் சீர்த்திய
பத்தரைத் தாங்கு மெய்ப்பில்கா ருண்ணிய
சித்தா மணியே நந்தா விளக்கே
கண்ணே கருத்தே யெண்ணே யமிர்தே
யுயிருக் குயிரே யுலவா வொளியே
பசுபதி மதத்தை வசுமதி நிறுவி
யவனருள் வேதா கமங்களி னரும்பொரு

ஏழையே னையந் திரிபற் றுணர
வினிதிற் றிரட்டி யியம்பு மெந்தாய்
யாமெலாம்,
நின்னடி யேமென வுன்னைப் பெறினும்
பணிகரி குயிலென் றணிபெறு மூன்றையும்
புற்றிற் கானின் மாயிற் புகுத்திய
சிற்றிடைப் பணைமுலைத் தேமொழி மடவார்
கண்ணெனுங் காலவே லெண்ணி னுழைய
நெஞ்ச மழிந்த நிலைய மாகிப்
பாடி காவலிற் பட்டுழன் றிட்டனம்
அதனால்,
மைமீ யிகந்த லமைவுடைத் தாயினு
மன்னையை யத்தனை மன்னிய வொக்கலை
பொருளெனக் கொளாதுன் கழலே பேணி
நின்னடித் தொண்டே மன்ன நிகழ்த்திய
சதாசிவ னருந் தரஞ்செறி தொழும்பனை
யொளிகொ டுருவுளத் துள்ளா திகந்தே
யாயிரத் தெண்ணூற் றிரண்டென வறையுஞ்
சாலி வாகன சகவற் சரநிகழ்
தரமார் கின்ற பிரமாதி வருடத்
தெறுக்கான் மதியிரு பத்தொரு தேதிசேர்
களங்க மில்லாப் பளிங்கின் வாரமு
மபர பக்கத் தமைசத் தமியும்
வடுவறு சிறப்பிற் கொடுநுக நாளு
மட்கி லொளிசேர் விட்கம்ப யோகமு
நிலைஇயிய மேன்மை யுலவா வேல்லையி
லவனே தானே யாகி யரனடி
நீழலி னித்தியா னந்தம் பெறீஇச்
செம்மாந் திருத்தல் சீரோ வுனக்கே.

வெண்கலிப்பா.

தூயநல்லைத் திருநகரிற் றுளக்கமற வவதரித்து
மாயவல்லற் பரசமய மடியவருள் நணிபுரிஞூடச்
சங்கரனு ரருட்சமயந் தழைக்கவொளிர் பிரசங்க
ரிங்கெமக்கீந் தருள்குருவா மெழிலாறு முகவாநின்
னருள்விழியுந் திருநீற்றி னழகாரு முகமதியுங்
கருமலத்தை யறப்பாற்றுங் கமலச்செஞ் சீறடியு
நினையாமன் மகளிரல்கு னிரயத்தி லமிழ்ந்தினைப்பா
ரினையமைய லேகுவதெப் போது.

வெண்பா.

செஞ்சடையன் வெண்ணீற்றன் சித்தம் பலமுதல்வன்
மஞ்சடையுங் கண்ட னடிமறவா—நெஞ்சுடைய
ஆறுமுக வையற்கே யாட்செய்யப் பெற்றனம்யாம்
வேறறங்கள் வேண்டா வெமக்கு.

சங்கேந்து மாற்கரிய சங்கரனைத் தன்னிதய
பங்கே ருகம்வைத்த பண்பானை—யெங்கோனை
ஆறுமுக நாவலனை யர்ச்சித் தடிபணியிற்
பாறும் பவநோய் பறிந்து.

தாடலைபோற் சங்கரனைச் சார்ந்தடங்கி நின்றிடுநின்
பாடலையா நற்பதத்தைப் பாடளியால்—ஆடலையா
ஆறுமுக நாவலசீ ரத்தசிற்ப காயடியேம்
வீறுமின்ப வீடடைதன் மெய்.

கலித்துறை.

திருவஞ் செழுத்தின் றிகழ்ச்சியெங் கேசெப கண்டியெங்
யுருவஞ் சிறக்க வொளிவிடு நீற்றி னுயர்ச்சியெங்கே [கே
யுருவம் படைத்த மதனுற்ற லட்ட வறுமுகனை
யொருவன் சிவமதம் போல்யேசு மார்க்கத்தையுன்னிடினே

கற்றவர் பற்றுங் கனியைக் கணிப்பி லறம்புரியப்
பெற்றவர் பெற்ற பயனைப் பிறவிக் கடல்கடக்க
வுற்றவர்க் கென்று முதவுறு மோடத்தை யாறுமுக
நற்றவ வெந்தையைப் போற்றிடிற் கூற்று நடுங்கிடுமே.

அமரர்க் கரிய வமலனை யன்பர்க் கெளியவனைக்
குமரக் கடவுடன் றந்தையைக் கூற்றை யுதைத்தவனைத்
தமரப் பெருஞ்சீர்ப் பதியெனச் சாதிக்குஞ் சைவமதை
யமர்கட் கருளு மறுமுக வெந்தையை யேத்துமினே.

சிந்தியல்வெண்பா.

கூறுமின் கூறுமின் கூறுமின் கூறுமின்
வீறுலவு யாக்கை விழுமுன் னமரங்கா
ளாறுமுக வையன் புகழ்.

தரவு கொச்சகக்கலிப்பா.

மதிவளரும் பொழினல்லை வளம்பதியில் வதிந்தருளிக்
கதியுதவு மறுமுகநா வலவெந்தை கழல்பணிந்தோர்
விதியரியா மிருதேவர் வியோமம்பார் துரிஇக்காணாச்
சதியுலவு பதசிவசங் கரனுலகிற் றயங்குவரே.

நேரசைமுதலாகவந்த கட்டளைக்கலிப்பா.

அத்தி மாமுலை மாதுன் கழலிணை
அன்று கண்டறி யாதவள் கனவிளி
கந்து மாவள கஞ்சரிந் தேவிழக
காது மன்மதப பாவியம் பாலழிந்
தெய்த்து வெம்மைமை யளாகி யிரங்கிநல்
லின்ப வுண்டி வெறுத்தரன் றுளிடை ,
பத்தி யாநல்லை யாறு முகாவறம
பாாத்த வாவெனைப் பாரென் றலறுவே

ஈற்றடிமிகுவந்தநான்கடிககலித்தாழிசை

பூமேவு மாம்பொழிலிற் போகுமிள மாககுயிலே
மாமேவு வாகின்கணை வலியேசு மநமழிந்த
பாமேவு சீராறு முகபரம குரவனெனு
கோமேவு புண்ணியன்றன் றுணிணைந்து கூடாதே
கோலநல்லை மாமுனிதாள் யான்மகிழக் கூவாயே

ஸ்ரீ@ஸ்ரீ

நாவலரவர்கள

அச்சிற்பதிப்பித்து

வெளிப்படுத்தப்ப

புத்தகங்கள்.

சூடாமணிநிகண்டுரை.
சௌந்தரியலகரியுரை.
முதற்பாலபாடம்.
இரண்டாம்பாலபாடம்.
பெரியபுராணவசனம்.
ன்னூல்விருத்தியுரை.
திருமுருகாற்றுப்படையுரை.
திருச்செந்தினிரோட்டகயம
கவந்தாதியுரை.
சிவாலயதரிசனவிதி.
சைவதூஷணபரிகாரம்.
நல்லூர் அமுதாம்பிகைபி
ள்ளைத்தமிழ்.
ந்தரலங்காரம்.
ந்தரனுபூதி.
ரெழுபது.
ருக்கைவழக்கம்.
ட்யவிதி.
றைசையந்தாதி.

கோயிற்
திருக்க
ந்தா
சிதம்
உபதி
பட்ட
ட
அரு
சை
மரு
திரு
வி
சி
ச
தி

ம்.	சைவசமயநெறியுரை.
கம்.	தொல்காப்பியச் சொல்ல; காரஞ் சேனுவரையருரை
கம்.	இலக்கணச்சுருக்கம்.
த்து.	
சூத்திரவிரு	சைவவினவிடை இரண்டாம்புத்தகம்.
க்குருவளி.	யாழ்ப்பாணச்சமயநிலை.
	இலக்கணவினவிடை இரண்டாம்புத்தகம்.
றை.	
ம்.	இலங்கைப் பூமிசாத்திரம்.
லை.	நன்னூற்காண்டிகையுரை.
	சிதம்பரமான்மியம்.

சிறிதுபாகம்

ற்பதிப்பிக்கப்பட்டு

றிதுபாகம்

கப்படாதிருப்பவைகள்.

—:*:—

திருவிளையாடற்புராணவச னம்.

பிக்கும்பொருட்டு

டிந்தவைகள்.

—:*:—

குருசிஷ்யக்கிரமம்.
நன்னூல்விருத்தியுரை. உ-
கைடதவுரை. [பதிப்

அச்சிற்பதிப்பிக்கும்பொருட்டு எழுதத்தொடங்கியவை

நவாரம்.
கராதி. (தமிழ்.)
கராதி (சமஸ்கிருதம் தமிழ்)
கராதி. (இங்கிலிஷ் தமிழ்.)
ருக்கபரிபாஷை.

இரகுவம்ஸ
உபதேச,
ஆலக்கன
புத்தக
சம்ஸ்கிரு